

# தமிழரசு

1-9-1977
50 காசு





# தீண்டாமை ஒழிப்பு

''பிறப்பினுல் தீண்டத்தகாதவன் என்று கருதப்படும் கடைசி மனிதன் இருக்கும் வரை நமது போராட்டம் ஓயப் போவதில்லை''

"காந்தி அடிகள்"

''ஜாதி மதங்களைப் பாரோம்—
உயர் ஜன்மம் இத்தேசத்தில்
எய்தினராயின் வேதிய ராயினும்
ஒன்றே—அன்றி வேறு
குலத்தின ராயினும் ஒன்றே''

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே
—நம்மில் ஒற்றுமை நீங்கில்
அனைவர்க்கும் தாழ்வே நன்றிது
தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின்
நமக்கெது வேண்டும்?''

"மகாகவி பாரதியார்"



# தமிழரசு

1—9—1977

மலர் : 8　　இதழ் : 5

## இந்த இதழில்


| | பக்க எண் |
|---|---|
| இன்னுயிர் ஈந்தும் இந்தியச் சுதந்திரம் காப்போம்! .. | 2 |
| பெருந்தலைவருக்குக் குடியரசுத் தலைவர் சூட்டிய புகழ்மாலை! .. | 5 |
| நிலமற்றவர்களுக்கு நிலம்! .. | 9 |
| தமிழகத்தில் உணவு நிலைமை .. | 10 |
| காலத்திற்கு ஏற்ற வகையில் பாசன வசதிகளைச் சீரமைப்போம்! .. | 18 |
| படமும் செய்தியும் .. | 24 |
| மக்களின் உடல் நலம் காப்போம்! .. | 28 |
| தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சி (சென்ற இதழ்த் தொடர்ச்சி) .. | 31 |
| ஊரக வளர்ச்சிக்கு உதவிடுவோம்! .. | 33 |
| அரசுப் பணியாளர்களுக்கு அளிக்கப் படும் ஓய்வூதியங்கள் .. | 41 |
| தென்னையில் தோன்றும் 'தஞ்சாவூர் வாடல் நோய்!' .. | 44 |
| கால் நடைகளின் இரு முக்கிய நோய்! .. | 46 |
| தொழில்களுக்குத் தகவல் தொடர்ந்து தர வேண்டும்! .. | 48 |


## அடுத்த இதழ்!



பேரறிஞர் அண்ணா, அமரகவி பாரதியார் சிறப்பிதழாக மலருகிறது! அனைவரும் படித்து மகிழ்ந்து, பாது காத்துவைக்க வேண்டிய அரிய படைப் பாக வெளிவருகிறது! உங்கள் தேவைக்கு முந்துங்கள்!

## அட்டைப்பட விளக்கம்

இந்தியாவின் 30-வது விடுதலை நாள் விழாவை முன்னிட்டு, 15-8-1977 அன்று, வரலாற்றுப் புகழ்மிக்க சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து, வணக்கம் செலுத்தினர்.

ஜெய்—

# இன்னுயிர் ஈந்தும் இந்தியச் சுதந்திரம் காப்போம்!



"எனது வணக்கத்திற்கும், அன்பிற்கும் உரித்தான தமிழ் நாட்டுப் பெருமக்களே!

தலைமைச் செயலாளர் அவர்களே! செயலாளர்களே!

முப்படைத் தளபதிகளே!

முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களே! நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

மற்றும் இந்த சுதந்திர விழாவில், இந்த நிகழ்ச்சியில் பங்கு கொண்டுள்ள பெரியோர்களே, தாய்மார்களே! என் ரத்தத்தின் ரத்தமான உடன்பிறப்புக்களே!

''உங்கள் அனைவருக்கும் சுதந்தீர தின வாழ்த்துக்களையும், என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் நான் முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

''ஒரு நாடு அடிமைப் பட்டுக் கிடக்கிற மாபெரும் கொடுமையைவிட வேறு ஒரு கொடுமை உலகில் எங்கும் இருக்க முடியாது என்பதை நாம் ஒவ்வொருவரும் நன்கு உணர்ந்தவர்களாக இருக்கிறோம். இங்கே கொடியேற்றி வைக்கிற இந்த தினத்தில்-இந்த நேரத்தில்-என் நினைவுகள் பல ஆண்டுகளுக்குப் பின்னாலே சென்று பல சுதந்திரப்போராட்ட நிகழ்ச்சிகள் என் கண் முன் தோன்றுகின்றன என்பதை இங்கே நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

''சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டு, தன் உடைமைகளையும், சொத்து சுகங்களையும், பதவிகளையும், பட்டங்களையும் துறந்து, இந்த நாடு சுதந்திர நாடாக மிளிர வேண்டுமென்ற

ஒரு போராட்டத்தில்-ஆசையில்-சுதந்தர உணர்வில்-அவர்கள் செய்த தியாகத்தை நாம் இந்த நேரத்தில் நினைவு கூரக் கடமைப் பட்டிருக்கிறோம்.

''இங்கே கொடியேற்றி வைக் கிற நேரத்தில், ஒரு நிகழ்ச்சி நினைவுக்கு வந்தது. ஆங்கிலே யர்கள் இந்தக் கோட்டையைச் சுற்றி தன் படைகளை வைத்துப் பாதுகாத்துக் கொண்டிருந்த நேரம், கோட்டையில் கொடி யேற்ற முடியுமா என்ற கேள்வி-தியாகத் தொண்டர்களுக்குக்கூட உயிரைப் பணயம் வைத்தவர் களுக்குக்கூட-சந்தேகம் ஏற் பட்ட நேரம். ஒரு நாள் விடியற் காலையில் இங்கேயிருந்த வெள்ளை யர்கள் ஆட்சியைக் காப்பாற்று வதற்காக இந்தக் கோட்டை யைச் சுற்றி இருந்த வீரர்கள், அவர்களுடைய படையினர்கள் மேலே பார்த்தபோது தேசியக் கொடி பறந்து கொண்டிருந்த தைக் கண்டு திகைத்தார்கள்! யாரோ ஒரு இளைஞன் இவர் களுக்கெல்லாம் ஈடுகொடுத்து, கொஞ்சம் கூட கவலைப்படாமல் தன் உணர்வை-மக்களுடைய கருத்தை-உலகுக்கு எடுத்துக் காட்டி, இந்தக் கொடியை இங்கே ஏற்றி வைத்தார் என் பதை எண்ணி நான் திகைத்த நாள் உண்டு! இந்த நாளில் என் வணக்கத்தை அவர்களுக் கெல்லாம் தெரிவித்துக் கொள் கிறேன்.

''அந்த உணர்வுகள் நீடித்து நிலைக்க வேண்டுமென்பதற்காக வும், சுதந்திரம் அடைந்த ஆண்டு களின் நினைவுகள் நம்மை எத்தனை ஆண்டுகள் முன்னுக்கு அழைத்துச் செல்கின்றன என்பதை எண்ணிப் பார்ப்பதற்கும், முன்னேற வேண்டுமென்று நினைக்கிற எல் லாரும் சமதர்ம தத்துவத்தை ஏற்று, சமத்துவ நிலையடைந்து, ஜாதி பேதமற்ற நிலையை ஏற் படுத்தி, மதமோ ஜாதியோ குறுக் கிட அனுமதிக்காமல் **''எல்லா ரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம்''** என்ற நல்லுணர்வோடு இணைந்து வாழ்ந்து, ஏழை-பணக் காரன் என்ற பேதம் இன்றி, இந்த நாடு வாழவேண்டுமென்ற நம் முடைய கொள்கையை நிறை வேற்றிக் கொள்ள இன்னும் நாம் செய்யவேண்டிய கடமைகள் எல்லாவற்றையும் எண்ணிப் பார்க்கிற நாளாகும் இது என் பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

''தியாகம் செய்தவர்களுக்கு நன்றி கூறுவது நமக்குள்ள இயற் கையான ஒரு பண்பாடாகும். **''நன்றி மறந்தவர்கள் அல்ல தமிழக மக்கள்''** என்பதை உலகம் நன்றாகப் புரிந்து கொண் டிருக்கிறது. இந்த உலகத்தின் கண்கள் நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கின்றன என்பது மட்டுமல்லாமல், '30 ஆண்டு களுக்குள் இந்த அளவுக்கு முன் னேறியிருக்கிறார்களே, உலகத் திலே அதிக மக்கள் வாக்களித்துத் தேர்ந்தெடுக்கிற ஒரு குடியரசு உலகத்திலே இந்தியத் துணைக் கண்டம் ஒன்றுதான் இருக்கிறது' என்று நினைத்துப் பார்க்கும்போது அவர்கள் திகைக்கிறார்கள்! பொறாமை படக்கூட சந்தர்ப்பம் இருக்கிறது என்பதை மறுப்பதற் கில்லை.

**[மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள், 15-8-1977 அன்று, இந்திய சுதந்தர நாள் விழாவையொட்டி, சென்னை கோட்டைக் கொத்தளத்தில் கொடியேற்றி வைத்து ஆற்றிய உரை]**


''ஒன்றை நான் தெளிவாகக் கூறிக் கொள்கிறேன். மக்கள் சக்தியை, மக்கள் நன்கு புரிந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நாடு புரிந்து கொள்கிற ஒரு நல்ல வாய்ப்பு ஆகத்தான் சென்ற தேர்தல் நடந்தது என் பதை நான் தெளிவாகச் சொல் லிக் கொள்வேன். மக்கள் எதைச் சரியென்று கருதுகிறார்களோ அதை நிறைவேற்றித் தீர, அதை நம்புகிறவர்கள் - அவர்களால் நம்பப்படுகிறவர்கள் - எப்படிச் செயல் படவேண்டுமென்று எடுத்துக்காட்ட ஒரு நல் வாய்ப் பாக நடந்து முடிந்த தேர்தல் நமக்கு உறுதியளித்து இருக்கிறது என்பதை நினைத்து நாம் பெரு மைப் படவேண்டும்.

**''நம்முடைய கடமை மிகப் பெரி யது. விவசாயிகள், தொழிலாளர் கள் தாழ்த்தப்பட்டவர்கள், பிற்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர்கள், மலை வாழ் பெருங்குடி மக்கள், தாய்மார்கள், ஆதரவற்ற தாய்மார் கள் இவர்கள் அனைவரும் மகிழ்ச்சி யோடும், மனநிறைவோடும் வாழ் கிற நாள் என்றோ அந்த நாள்தான் மகாத்மா காந்தி அடிகள் எதிர் பார்த்த நாள் என்றும், நம்மை ஆளாக்கிய அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் எதிர்பார்த்த நாள் என்றும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.** எந்த ஒரு தனி அரசியல் கட் சியோ எந்த ஒரு தனிமனிதனோ அந்தப் பெரும் தலைமை நினைத்த தையெல்லாம் செய்ய முடியாது. நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து, நமக்குள் இருக்கிற கருத்து வேறு பாடுகளைக் கொள்கை வேறுபாடு களாக ஆக்காமல், தெளிவான கருத்துக்களை நேர்மையான வழி யில் தெரிவித்துக் கொள்கிற பாங்கை நாம் பெற்றிருக்கிறோம் என்பதை உலகத்திற்குத் தமிழக மக்களும், தமிழகச் சட்டமன்ற மும் எடுத்துக் காட்டிக்கொண்டு இருக்கின்றன. அதுமட்டுமல்ல, என் வேண்டுகோள்; தமிழகத் திற்கு நாம் செய்ய வேண்டிய கடமையை எந்தெந்த வகை களில் செய்யவேண்டுமென்று விரும்புகிறோமோ அவைகளை நாம் ஜாதியைத் தூக்கியெறிந்து, மதத்தின் பெயரால் நாட்டைப் பிளவு படுத்துகிற தேவையற்ற நம்பிக்கைகளைத் தூக்கியெறிந்து நாம் எல்லாரும் ஒன்று சேர்ந்து சிறப்பாக உழைத்து இந்த நாட் டுக்குப் புரிய வேண்டிய கடமை யைச் செய்யவேண்டிய ஒரு உறுதியை எடுத்துக் கொள்கிற நாளாக இதை நாம் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று தமிழக மக்களை வேண்டிக் கொள்கிறேன்.

''இந்த நேரத்தில் ஒன்றை நான் சொல்லிக் கொள்கிறேன். எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் ஆக இருந்தாலும் வேறு எந்த நம்பிக்கை உடையவர்களாக இருந்தாலும்-நாட்டுக்கு நல்லது செய்தால் அவர்களைப் போற்ற வேண்டும் என்பதை மனிதத் தன்மை உள்ள ஒவ்வொருவரும் உணர்ந்திருக்கிறோம்.

''சில ஆண்டுகளுக்கு முன்பு வரை இந்தச் சுதந்தரக் கொடி ஏற்றிவைப்பது மேதகு ஆளுநர் என்ற முறையில் இருந்தது. அந்த முறையை மாற்றவேண்டுமென்று கோரிய-போராடிய-அந்த உரிமை யைப் பெற்றுத் தந்த, மக்க ளால் தேர்ந்தெடுக்கப்பட்ட அ.இ.அ.தி.மு.க. பிரதிநிதியான-முதலமைச்சராக இருக்கிற-நான் இந்தக் கொடியை ஏற்றி வைக்க, உதவி செய்த கலைஞர் கருணாநிதி அவர்களை நான் இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப் பட்டிருக் கிறேன். நல்லது செய்வதைப் பாராட்டவும், தீமையை எதிர்த் துப் போராடவும் கடமைப்பட்டி ருக்கிறோம் என்பது நமக்குள்ள கடமையாகும்.

''நாட்டிலே மக்கள் வாழ்வது என்றால், ஒரு சிறு மாளிகையில் வாழ்வது மட்டும் என்பது ஆகாது. அது நிறைவு பெறாதது. மக்கள் மனத்திலே நல்ல மாற்றம் வேண் டும். கிராமத்தில் இருக்கிற



இந்தியாவின் 30-வது விடுதலைநாள் விழாவை முன்னிட்டு, சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் தேசீயக் கொடியை ஏற்றிவைக்க வருகைதந்த மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்களுக்குக் காவல்துறையினர் அணிவகுப்பு மரியாதை செலுத்தினர்.

மக்கள், இந்த நாட்டை முழுமையாகச் சுதந்திரம் பெற்ற நாடாக மனத்தில் நினைக்கிற அளவுக்கு, அவர்களுக்கு இன்னும் அத்தகைய வாய்ப்புக் கிடைக்கவில்லை. **நகரத்தில் இருப்பவர்களுக்கு எந்தெந்த வாய்ப்புக்கள் கிடைக்கிறதோ, அவைகள் அத்தனையும் கிராமப்புற மக்களுக்கும் கிடைக்கவேண்டும் — கிடைக்கச் செய்வோம் என்று, அண்ணாவின் மேல்-மகாத்மாவின் மேல் சூளுரை எடுத்துக் கொள்வோம்.**

"இந்தச் சுதந்தரம் பெறுவதற்கு எந்தெந்த வகைகளில் துன்பத்தையும், துயரத்தையும் தாங்கிக் கொண்டார்கள் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். தொடக்கத்தில் வன்முறையில் போராடினுல்தான் - ஆங்கிலேயர்களுக்கு அந்த மொழிதான் புரியும்-என்று வன்முறையைத் தொடர்ந்த நாள் உண்டு. எத்தனையோ பேர் வன்முறையில் ஈடுபட்டு உயிரிழந்ததும் உண்டு. வாஞ்சிநாதன் போன்றவர்கள்; வெள்ளையர்களைச் சுட்டுக்கொன்றுவிட்டு; தங்களைத் தாங்களே அழித்துக் கொண்டவர்களும்-தூக்குமேடை ஏறியவர்களும் உண்டு-நாடு விடுதலை பெற வேண்டுமென்ற காரணத்திற்காக:

''மகாத்மா காந்தியடிகள் வன்முறையைத் தூக்கியெறிந்துவிட்டு அறவழியில்-அகிம்சை வழியில்-போராடி நாட்டுக்குச் சுதந்தரம் வாங்கிக் கொடுத்து, உலகத்திற்கு எடுத்துக்காட்டிய முன்மாதிரியானவர் என்பதை எண்ணிப் பார்க்கும்போது, அந்த வழியைப் பின்பற்ற வேண்டும் என்று அமரர் அண்ணு அவர்கள் எத்தனையோ முறை சொல்லியிருக்கிருர்கள் என்பதை நினைவு கூர வேண்டும்.

''சுதந்திரம் என்பது, எதையும் யாரும் செய்யலாம் என்பதல்ல என்றும் மக்கள் நல் வாழ்வு பெறவேண்டும், அதனுல் எதிர்காலத்திற்கு உதவியையும் பெறவேண்டும், அதற்காகச் சட்டமும், பழக்க வழக்கங்களும் அமைய வேண்டுமென உணர்கிறோம். பிறருடைய சுதந்தரத்தை மதிக்கிற ஒவ்வொருவரும் சுதந்திரவாதியாக வாழ முடியும். நமக்கு மற்றவர்கள் அடிமைப்பட்டவர்கள் என்றோ, சில சுகபோகத்தில் இருந்தவர்கள் இன்னும் அந்த எண்ணத்தில் இருந்தால் இந்தச் சுதந்திர நாளில் தமிழக மக்களின் சார்பாக அந்த எண்ணத்தை மாற்றிக் கொள்ள வேண்டுமென்று-மக்கள் மாற்றுவதற்கு முன்னுல் நீங்கள் மாற்றிக் கொள்ளுங்கள் என்று சொல்லக் கூடிய முறையில்-மக்கள் ஒரு முடிவுக்கு வந்திருக்கிருர்கள்.


''இந்தியச் சுதந்திரம் பெற்று 30 ஆண்டுகளுக்குள் எதிர்காலம் இது கேள்விக்குறி ஆகியிருக்கிறது-ஆக்கப்பட்டிருக்கிறது - அதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்: காடும்; மேடும்; வயலும்; நதியும், மக்களும் கொண்டதுதான் சுதந்திர நாடு என்பது அல்ல: மக்கள் சுதந்திரமாக வாழ்ந்து; பேச்சுரிமையை; எழுத்துரிமையை; எண்ணுகிற உரிமையை நிலை நாட்டினுல்தான் இந்த நாடு சுதந்திர நாடு என்று குறிப்பிட முடியும் என்று உணர்ந்திருக்கிறோம்: நாம் செய்கிற செயலும் இந்த நாட்டின் வாழ்விற்காக என்றும்; ஆக்க வழியில் உதவி செய்து காட்டவேண்டுமே தவிர, ஒருவரை அழித்து ஒருவர் வாழ்வதோ, ஒரு கொள்கையை அழித்து ஒரு கொள்கையை நிலை நாட்டவோ யாருக்கும் அந்த நிலை இங்கே ஏற்பட்டுவிடக்கூடாது என்று இந்தச் சுதந்திர நாளில் நான் சொல்லிக்கொள்வேன்.

**''தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், நெசவாளர்கள், தொழிலாளர்கள், இதைப் போன்ற மலைவாழ் பகுதி மக்கள் இவர்களுக்கெல்லாம் என்றைய தினம் வாழ்வில் மறுமலர்ச்சி கிடைக்கிறதோ; வாழ்வின் உறுதி தரப்படுகிறதோ, அன்றுதான் நம்முடைய நாடு பெற்ற சுதந்திரம் முழுத் தன்மையை அடையும் நாளாக அமையும் என்பதை இங்கே சொல்லி, நாம் அனைவரும் ஜாதி பேதம் இன்றி, மத வேறுபாடின்றி இந்தச் சுதந்திரத்தைக் காப்பாற்ற, இந்தக் கொடிக்கு எந்த அவமானமும், தரக்குறைவும் ஏற்படாமல் காப்பதற்கு உயிரையும் ஈந்து காப்பாற்றுவோம்** என்று சூளுரை ஏற்றுக்கொண்டு; அதை நீங்களும் ஏற்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இப்போது நான் சொல்லும் **'இந்திய சுதந்திரம்'** என்ற வார்த்தைக்குப் பின் **'வாழ்க'** என்று சொல்ல வேண்டும் என்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்:

| (முதல்வர்) | (மக்கள்) |
| --- | --- |
| இந்திய சுதந்திரம் | வாழ்க! |
| இந்திய சுதந்திரம் | வாழ்க!! |
| இந்திய சுதந்திரம் | வாழ்க!!! |

''அண்ணு நாமம் வாழ்க.''
''வணக்கம்''.





# பெருந் தலைவருக்குக் குடியரசுத் தலைவர் சூட்டிய புகழ்மாலை!

"அயராத உழைப்பு, உயர்ந்த நிலையிலும் அடக்கமான எளிய வாழ்க்கை, எளிய மக்களை வாழ வைப்பதற்காக அயராத தொண்டு, அரசியலில் நேர்மை, பொது வாழ்வில் தூய்மை இவற்றுக்கு எடுத்துக் காட்டாக விளங்கியவர் காமராஜ்!"

"பல்கலைக் கழகப் படிப்போ, அல்லது பட்டமோ பெருத நிலையிலும், உண்மையான உழைப்பால்—தியாகத்தால்—உயர் பதவியை எட்டிப் பிடிக்க முடியும்; உதவி நம்மை நாடிவரும் என்பதற்கு காமராஜின் வாழ்க்கை சிறந்த எடுத்துக்காட்டு. இந்திய ஜனநாயகத்தின் ஆணி வேரே இதுதான்!"

தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில், 18-8-77 அன்று, முன்னாள் தமிழக முதல் அமைச்சர் திரு காமராஜ் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து, இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. சஞ்சீவ ரெட்டி அவர்கள் உரையாற்றுகையில், பெருந்தலைவர் காமராஜ் அவர்களுக்குப் மேற்கூறியவாறு புகழ் மாலை சூட்டினார். மேலும் அவர் பேசுகையில், காமராஜ் அவர்களின் அருங்குணங்களைப் பின்கண்டவாறு எடுத்துக் காட்டினார்.

''தமிழகமோ, சென்னையோ எனக்குப் புதிததல்ல. படித்த காலத்திலிருந்து என் இளம் பருவமும், அரசியல் வாழ்வில் பெரும்,


பகுதியும் இங்கு கழிந்தன. சென்னையில் உள்ள தெருக்கள், சந்து பொந்துகள் எல்லாம் எனக்குத் தெரியும். மொழிவாரி மாநிலப் பிரிவினைக்குப் பிறகு தமிழ் நாட்டுடன் காமராஜ் மூலம் தொடர்பு இருந்தது.

''காமராஜ் என் நண்பராக— நல் ஆசானாக — வழிகாட்டியாகத் திகழ்ந்தார். நாங்கள் அடிக்கடி சந்தித்துப் பேசிக் கொள்வது வழக்கம்.

## அரசியல் பிணைப்பு

''காமராஜுக்கும் எனக்கும் நெருங்கிய ஆழ்ந்த நட்பு இருந்தது மட்டுமல்ல, நாங்கள் இருவருமே ஒருமித்த அரசியல் வாழ்வு நடத்தியவர்கள். அவருடைய அடிச் சுவட்டைப் பின்பற்றி நடந்தவன்; நடந்து வருபவன் நான். காமராஜ் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்தபோது, நான் ஆந்திர மாநில காங்கிரஸ் செயலாளராக இருந்தேன். பிறகு அம்மாநிலக் காங்கிரஸ் தலைவரானேன். காமராஜ் தமிழக முதல்வராக இருந்தார்;

**மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு சஞ்சீவரெட்டி அவர்கள், 18-8-1977 அன்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், முன்னாள் தமிழக முதலமைச்சர் திரு கு. காமராஜ் அவர்களின் திரு உருவப்படத்தைத் திறந்து வைத்துச் சிறப்புரையாற்றினார்.**



நான் ஆந்திர முதலமைச்சராக இருந்தேன். அனைத்திந்திய காங்கிரஸ் தலைவராக அவரும் இருந்தார் நானும் அகில இந்திய காங்கிரஸ் தலைவராக இருந்தேன். கட்சிக்காக அவர் முதலமைச்சர் பதவியை விட்டு விலகினார். நானும் அவரைத் தொடர்ந்து ஆந்திர முதலமைச்சர் பதவியை விட்டு விலகினேன். இப்படி எங்கள் இருவருடைய 35 ஆண்டு அரசியல் வாழ்வும் பின்னிபிணைந்தவை ஆகும்! . . .

## பிரதமர் பதவியை மறுத்தவர் காமராஜ் !

"லால் பகதூர் சாஸ்திரி அவர்களை அடுத்து, பிரதமராக யார் வருவது என்பதை முடிவு செய்யும் பொறுப்பும் காமராஜுக்கு வந்தது. மறைந்த வி. கே. கிருஷ்ண மேனன் போன்றவர்கள் காமராஜரே பிரதமராக வர வேண்டும் என்று வற்புறுத்திக் கூறினர்கள். நானும், வேறு சிலரும் காமராஜிடம் இதுபற்றிப் பேசினேம். "நீங்களே பிரதமராக வந்து விடுங்கள்; தென்னுட்டைச் சேர்ந்த ஒருவருக்கு இப் பதவி கிட்டியதாக இருக்கும்" என்று நான் காமராஜிடம் சொன்னேன். **'நமக்கு வேண்டாம்ப்பா அந்தப் பதவி'** என்று காமராஜ் என்னிடம் கூறிவிட்டார். மிகப் பெரிய பதவியான பிரதமர் பதவி தேடி வருவதை வேண்டாம் என்று உதவித் தள்ள யாருக்கு மனம் வரும்? அப்படி தேடி வந்த பதவியை உதறித் தள்ளியவர் காமராஜ்! பதவியை என்றுமே அவர் பெரிதாகக் கருதியதில்லை. 'காமராஜ் அவர்கள் சொல்லாவிட்டால், நான்பிரதமர் பதவிக்குப் போட்டியிட மாட்டேன்' என்று அப்போது இந்திரா காந்தி கூறினர். அப்படிப்பட்ட சக்தி அவருக்கு அப்போது இருந்தது.

## அண்ணன்-தம்பியாகப் பழகினேம் !

"இன்று நான் குடியரசுத் தலைவராக இருக்கிறேன். 1969-ஆம் ஆண்டிலேயே என்னை இப்பதவியில் அமர்த்திப் பார்க்க அவர் ஆசைப்பட்டார். ஆனல் துரதிருஷ்டவசமாக அன்று நடைபெறவில்லை. இன்று நான் குடியரசுத் தலைவராக கலந்து கொண்டு நடைபெறும் முதலாவ நிகழ்ச்சி காமராஜ் உருவப் படத் திறப்பு விழா என்பது குறித்து நான் பெரும் பேறு பெற்றதாகக் கருதுகிறேன்.

ஒரு முறை நானும் காமராஜும் திருப்பதி சென்றேம். அங்கே இறங்கியதும், **"அண்ணன், தம்பி வந்துட்டாங்கடா"** என்று மக்கள் சொன்னது இன்னமும் என் நினைவில் பசுமையாக உள்ளது.

"எப்பதவியை அவர் வகித்த போதிலும் எளிமையாக—அடக்கமாக வாழ்ந்தார். பொது வாழ்வில் தூய்மையையும், நேர்மையையும் கடைப்பிடித்தார். கட்சிக்காகவோ, தேர்தலுக்காகவோ சேர்த்த ஒவ்வொரு காசுக்கும் கணக்கு வைத்திருந்தார்.

"காமராஜ் இறப்பதற்கு முன்பாக கடைசிக் காலத்தில் ஒவ்வொரு மாதமும் நான் அவரைச் சந்தித்துப் பேசி வந்தேன். கடைசிக் காலத்தில் அவர் மிகவும் மனம் நொந்த நிலையில் இருந்தார். தேசம் மோசமாவதைத் தாளாமல் வேதனையால் காமராஜ் மாண்டார் என்பதுதான் உண்மை !

## சுதந்திரப் போரில் சிறை வாழ்க்கை

"சுதந்திரப் போராட்டத்தின் போது சிறையில் காமராஜுடன் நான் இருந்த நாட்களை எண்ணிப் பூரிப்படைகிறேன். நான், காமராஜ், நிஜலிங்கப்பா ஆகிய மூவரும் சுதந்திரப் போராட்டக் காலத்தில் போலீசால் தேடப்பட்ட வந்தபோது, ஒரு நாள் ஆந்திராவில் பயணம் செய்து கொண்டு இருந்தோம். நான் கைது செய்யப்பட்டேன். போலீசை ஏமாற்றி காமராஜ் எப்படித் தப்பினர் என்பதுதான் பெரிய வேடிக்கை. அதே போல நிஜலிங்கப்பாவும் தப்பி பிறகு இந்துப்பூரில் கைது செய்யப்பட்டார். தலைமறைவாக இருந்து, கட்சியை நடத்தச் செய்ய வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் செய்து விட்டு, பத்து தினங்கள் கழித்து காமராஜ் கைதானர். அவருடன் சிறையில் இருந்தபோது அவரைப் பற்றி அதிகமாகத் தெரிந்து கொண்டேன்.

## தூய வாழ்க்கை

"அவர் தமிழ்நாட்டுத் தலைவர் மட்டுமல்ல. அகில இந்திய அளவில் செல்வாக்கு படைத்தவர். ஏராளமான ஏழை எளிய மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந்தார்.

**"காமராஜருக்கு நாம் செலுத்தும் மரியாதை அவருடையதூய வாழ்க்கையை நாமும் பின்பற்றி நடப்பதுதான்.**

## கறை படாத கை !

"காமராஜரின் கை, கறைபடாதது. அவர் சொத்து சேர்த்து வைக்க வில்லை. பணம் அவரை ஆட்கொள்ள வில்லை. அவர் எந்த பெரிய பதவியை வகித்தபோதிலும் எளிய வாழ்க்கை நடத்தினர். ஒரே வீட்டில் வசித்தார். அவருடைய சாப்பாடே எளிமையானது.

## காமராஜ் வழிப்படி நடப்போம் !


"கட்சிகளில் பிணக்கு ஏற்படலாம். கட்சிகள் பிளவுபடலாம். ஆனல் நாம் எந்தக் கட்சியில் இருந்தாலும் காந்தி வழிப்படி, காமராஜ் வழிப்படி நடக்கிறேமா என்பதை ஆத்மசோதனை செய்து பார்த்துக் கொள்ள வேண்டும். அப்படி நடக்காதிருந்தால், இனி யாவது அவ்வாறு நடக்க முயற்சிக்க வேண்டும். தமிழகம் இந்தியாவுக்கு வழி காட்டும் ; காட்ட வேண்டும் என்று ஆசைப் படுகிறேன்.

"ராஜாஜி, காமராஜ், அண்ணுதுரை ஆகிய தலைவர்கள் வாழ்ந்து காட்டிய பாதையைப் பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

"தமிழக அரசின் சார்பில் சட்ட மன்றத்தில் அமரர் காமராஜ் திருவுருவப் படம் வைக்க ஏற்பாடு செய்த முதல்வர் திரு எம். ஜி. ராமச்சந்திரனுக்கு எனது பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். திறப்பு விழாவுக்கு என்னை அழைக்கஇருப்பதாக நான் செய்தி படித்தவுடன், முதல்வருடன் தொடர்பு கொண்டு இசைவு தெரிவித்து விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு கேட்டுக் கொண்டேன். குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்று நான்பங்கு கொள்ளும் முதலாவது பொது விழா; சிறப்பு மிக்க விழா; இதற்காக முதல்வருக்கு நன்றிதெரிவிக்கிறேன்.

[தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் 18-8-'77 அன்று, முன்னள் தமிழக முதல் அமைச்சர் திரு காமராஜ் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து இந்தியக் குடியரசுத் தலைவர் திரு சஞ்சீவ ரெட்டி அவர்கள் ஆற்றிய உரையில் சில முக்கிய பகுதிகளின் தொகுப்பு].


காற்று நிகர் மென்மை
வண்ணத்துப் பூச்சியின்
எழில் வண்ணம்
கோ-ஆப்டெக்ஸ்
அச்சிட்ட நூல் சேலைகள்
உண்மைதான்! மென்மையான அச்சிட்ட நூல் சேலைகள்—நவீன டிசைன்கள்—யமுனா, அஜந்தா, சாமுண்டி-உள்ளங்கவர் வகைகள்—பரவசமூட்டும் வண்ணங்கள். கோ-ஆப்டெக்ஸ் அச்சிட்ட சேலைகள் இன்றைய நாகரீகமாகத் திகழ்பவை!
கைத்தறியே
வண்ணத்துப்பூச்சி



# நிலமற்றவர்களுக்கு நிலம்

**த**ற்போதுள்ள அரசின் கொள்கையின் கீழ், மதிப்பில்லாத நிலம் நேரடியாகச் சாகுபடியில் ஈடுபடும் நிலமற்ற, ஏழை மக்களுக்கு இலவசமாக ஒப்படை செய்யப்படுகிறது. ஐந்து அல்லது அதற்குக் குறைவான நபர்களைக் கொண்டுள்ள குடும்பத்தையுடைய, திங்கள் ஒன்றுக்கு ரூ.200 அல்லது அதற்குக் குறைவாக வருமானமுடைய ஒருவரும், ஐந்துக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட குடும்பத்தையும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 250 அல்லது அதற்குக் குறைவான வருமானத்தையும் உடைய ஒருவரும் "ஏழை" என்று கருதப்படுகிறார்.

ஒருவருக்கு ஒப்படை செய்யக்கூடிய நிலத்தின் உச்ச அளவு பரப்பு, அவர் நிலம் ஏதேனும் வைத்திருப்பின் எல்லா நிலத்தின் பரப்பும் சேர்ந்து புன்செய் நிலமாக இருந்தால் 3 ஏக்கர் அல்லது நன்செய் நிலமாக இருந்தால் 1.5 ஏக்கராகும்.

ஒப்படை செய்யப்பட்ட நாளிலிருந்து 3 ஆண்டுக் காலத்திற்குள் நிலம் சாகுபடியின்கீழ் கொண்டு வரப்பட வேண்டும்.

இந்நிலம் பத்தாண்டுக் காலத்துக்கு விற்கப்படவோ, உடைமை மாற்றம் செய்யப்படவோ கூடாது.

இந்நிலம், ஒப்படை பெற்றவரால் அல்லது குடும்ப உறுப்பினர்களால் அல்லது கூலி ஆட்களால் பயிர் செய்யப்பட வேண்டும். வேறு வகையில் சாகுபடி செய்யப்படக்கூடாது.

கடன்கள் வாங்குவதற்காக அத்தகைய நிலங்களை அவர்கள் வங்கிகளில் அடமானம் வைக்கலாம்.

### நில ஒப்படை பெறுவதற்கு உரிமையுள்ளவர்கள்

பயிரிடும் காரியத்திற்காக நிலம் ஒப்படை செய்வதற்கான முன்னுரிமை வரிசை (அண்மையில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது) கீழே குறிப்பிடப்பட்டுள்ளது :

1. போரில் இறந்துபட்ட அல்லது ஏலாமை நிலை அடைந்த எல்லைப் பாதுகாப்புப் படைப் பணியாளர், வட்டார இராணுவப் பணியாளர் உட்பட இராணுவப் பணியாளரின் குடும்பங்கள் ;

2. நிலமற்ற அரிசன, பழங்குடி மக்கள் ;

2-ஏ. 1976ஆம் ஆண்டுக் கொத்தடிமைத் தொழில் முறை (ஒழிப்புச்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 19/1976) கீழ் அடிமைத் தலையிலிருந்து விடுபட்ட தொழிலாளர்கள் ;

3. எல்லைப் பாதுகாப்புப் படைப் பணியாளர் உட்பட தற்போது இராணுவப் பணியிலுள்ள நபர்கள் ;

4. முன்னாள் எல்லைப் பாதுகாப்புப் படைப் பணியாளர் உட்பட முன்னாள் இராணுவத்தினர்;

5. பர்மா, ஸ்ரீலங்கா அகதிகள்;

6. தங்கக் கட்டுப்பாட்டு ஆணை காரணமாக வேலையிழந்த பொற்கொல்லர்கள் ;

7. முன்னாள் கள் இறக்குவோர்;

8. நிலமற்ற பிற ஏழை மக்கள்.

### ஒபபடை செய்வதில் உள்ள நிபந்தனைகள்

ஒப்படைக்குப் பெருமளவு நிலம் கிடைக்கும் கிராமங்களில், வருவாய்க் கோட்ட அதிகாரி, எல்லா மாவட்டங்களிலும் அரிசனங்கள், பழங்குடியினருக்கு ஒப்படை செய்வதற்காகக் குறிப்பிட்ட பகுதியை ஒதுக்குகிறார். அரிசனங்களுக்கு நிலம் ஒப்படை செய்யப்படுவது, ஒப்படை நிலம் பத்தாண்டுக்கு உடைமை மாற்றம் செய்யப்படவோ, விற்கப்படவோ கூடாது என்ற சிறப்பு நிபந்தனைக்கும் பத்தாண்டுக்குப் பின்னர் அந்நிலம் அரிசனங்களுக்கு மட்டுமே உடைமை மாற்றம் செய்யப்படலாம் அல்லது விற்கப்படலாம் என்ற சிறப்பு நிபந்தனைக்கும் உட்பட்டதாகும். மேற்கூறிய நிலங்களின் தேர்வில் மேற்சொன்ன நிபந்தனைகள் மீறப்பட்டால் இழப்பீடு இன்றி அந்நிலங்கள் மீட்பதற்கு உட்பட்டவையாகும்.

### ஆக்கிரமிப்பு முறைப்படுத்தப்படும்

வேளாண்மை நிலங்களை ஒப்படை செய்வது குறித்த அரசின் தற்போதைய கொள்கை சில காலத்திற்கு முன்பு அரசால் மறுபரிசீலனை செய்யப்பட்டது. அரிசனங்கள், முன்னாள் இராணுவத்தினர் உட்பட, நிலமற்ற ஏழை மக்கள் பயிரிடுவதன் மூலம் ஆட்சேபணைக்குட்படாத ஆக்கிரமிப்புகள் செய்துள்ளதை முறைப்படுத்துவதற்குத் தீவிர நடவடிக்கை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது. நிலமற்ற ஏழைகளைத் தவிர பிறர் ஆக்கிரமித்துள்ள நிலங்கள் காலி செய்யப்பட வேண்டும் என்றும், காலி செய்யப்பட்ட பின்னர், அவ்வாறு ஆக்கிரமிப்புச் செய்யப்பட்ட நிலங்கள் ஒப்படை செய்யப்படத் தக்கதாகும் என்றும் (சமூக அல்லது அரசுக் காரியத்திற்குத் தேவைப்படாத), அரிசனங்கள், முன்னாள் இராணுவத்தினர் உட்பட நிலமற்ற ஏழை மக்களுக்கு அப் பகுதிகள் ஒப்படை செய்யப்பட வேண்டுமென்றும் ஆணையிடப்பட்டது.

(ஆதாரம்: வருவாய்த் துறை மானியக் கோரிக்கை, 1977.)



# தமிழகத்தில் உணவு நிலைமை

மாண்புமிகு உணவமைச்சர்
**திரு ஜி. ஆர். எட்மண்ட்**




தமிழகத்தில் அரிசி நிலைமை இப்பொழுது மிகவும் திருப்திகரமாக உள்ளது. வெளிச்சந்தையில் அரிசி தாராளமாகப் புழங்குகிறது; விலைகளும் நிதானமாகவே உள்ளன. தமிழ்நாடு தனி உணவு மண்டலமாக இருந்த நிலைமை மாறி, 1976-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15-ஆம் நாள் முதற்கொண்டு ஆந்திரா, கர்நாடகம் ஆகிய மாநிலங்களும், பாண்டிச்சேரிப் பகுதிகளும், தமிழகமும் உள்ளடங்கிய தென் உணவு மண்டலம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த விரிவான உணவு மண்டலத்திற்குள் அரிசிப்போக்குவரத்துக்குத் தடை ஏதும் இல்லை. ஆயினும் நெல்லைப் பொறுத்த வரையில், ஒரு மாநிலத்தை விட்டு மற்றொரு மாநிலத்திற்கு நெல்லை எடுத்துச் செல்லக்கூடாது என்ற தடை இன்னும் தொடர்ந்து இருந்து வருகிறது. விரிவான தென் உணவு மண்டலம் அமைக்கப்பட்டதையொட்டி, 1976-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15-ஆம் நாள் முதற்கொண்டு தமிழகத்தில் மாவட்டங்களிடையே நெல், அரிசி போக்குவரத்து மீது விதிக்கப்பட்டிருந்த தடைகள் அனைத்தும்-கேரளாவை ஒட்டிய சில எல்லையோரப் பகுதிகள் நீங்கலாக-மற்றப் பகுதிகளில் நீக்கப்பட்டு விட்டன. இதன் காரணமாக, உபரி மாவட்டங்களிலிருந்து பற்றாக்குறை மாவட்டங்களுக்கு நெல், அரிசிப் போக்குவரத்துக்கு வழி ஏற்பட்டுள்ளது. மாவட்டக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதையொட்டி உபரி மாவட்டங்களில் விவசாயிகளுக்குக் கூடுதலான விலை கிடைக்க வாய்ப்பேற்பட்டுள்ளது. பற்றாக்குறை மாவட்டங்களில் முன்பு இருந்த விலைகளை விட இப்பொழுது விலைகள் குறைந்துள்ளன. மாவட்டங்களிடையே போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் இருந்த நேரத்தில் உபரி மாவட்டங்களில் இருந்த குறைவான விலைக்கும், பற்றாக்குறை மாவட்டங்களில் இருந்த மிக உயர்வான விலைக்கும் இடையே இருந்த கணிசமான இடைவெளி, இப்பொழுது குறைக்கப்பட்டு, மாநிலம் முழுவதும் விலைகள் ஏறக்குறைய ஒரு சீராக உள்ளன. மேலும், தென் உணவு மண்டலம் விரிவாக்கப்பட்டதன் பயனாக, குறிப்பாக, ஆந்திர மாநிலத்திலிருந்து, அரிசி தமிழகத்திற்கு வர வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. 1976-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15-ஆம் நாள் முதற்கொண்டு, இன்று வரை, ஒரு இலட்சம் டன்களுக்கு மேல் அரிசி தமிழகத்திற்கு ஆந்திர, கர்நாடக மாநிலங்களிலிருந்து வந்துள்ளது. இவ்வாறு வெளி மாநிலங்களிலிருந்து அரிசி வரத்துக்கு வழி செய்துள்ளதாலும், மாவட்டங்களிடையே இருந்த தடைகளையெல்லாம் நீக்கி விட்ட

தாலும் தமிழகத்தில் இப்பொழுது தாராளமாக அரிசி கிடைப்பதுடன் விலைகளும் நிதானமாகவே உள்ளன. சாதாரணமாக சம்பா அறுவடை முடிந்து, குறுவை அறுவடை வருவதற்கு இடையிலுள்ள ஜூன்முதல் செப்டம்பர் வரை வெளிச் சந்தையில் அரிசியின் விலைகள் உயர்வது வழக்கம். ஆனால் இந்த ஆண்டில் ஜூலை மாத இறுதிவரை கூட, விலைகளில் குறிப்பிடத்தக்க அளவு உயர்வு ஏற்படவில்லை என்பது நமக்கு மன நிறைவு அளிக்கக்கூடியதாய் உள்ளது.

பொது விநியோகத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு இப்பொழுது கணிசமான கையிருப்பு, அரசின் வசம் உள்ளது. 1976-77-ஆம் ஆண்டில் குறுவைச் சாகுபடி ஓரளவு பாதிக்கப்பட்டதாலும், தாளடிச் சாகுபடி பெரிதும் பாதிக்கப்பட்டதாலும், நெல் உற்பத்தியில் ஏறக்குறைய 8 இலட்சம் டன்கள் துண்டு விழும் என்று நாம் அஞ்சினோம். இதை ஈடு செய்வதற்கு, முன் எச்சரிக்கையாக, மத்திய அரசு நமக்குமே மாதம் முதற்கொண்டு பொது விநியோகத்திற்கு அரிசி வழங்க வேண்டுமென்று கேட்டிருந்தோம். மத்திய அரசும் மே முதல் நான்கு மாதங்களுக்கு மாதம் 50,000 டன் அரிசியை ஒதுக்கீடு செய்துள்ளது. மாநிலத்தின் தேவையை உணர்ந்து, பொது விநியோக முறையைப் பலப்படுத்த, மத்திய அரசு மத்திய கையிருப்புத் தொகுப்பிலிருந்து அரிசி அளிக்க முன் வந்ததற்குத் தமிழகத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆனால் இதில் உள்ள ஒரு சிக்கலை நாம் மனத்திற்கொள்ள வேண்டும். நம்முடைய மாநிலத்தில் பெரிதும் புழங்கப்படுவது புழுங்கல் அரிசி. பொது விநியோக முறையின் கீழ் நமக்குத் தேவைப்படுவதிலும் மிகப் பெரும் பகுதி, புழுங்கல் அரிசிதான். ஆனால், மத்திய அரசிடம் தரமான புழுங்கல் அரிசி போதிய அளவு கையிருப்பில் இல்லை. அவர்கள் சிரமமின்றிப் பச்சரிசி தர முடியும். ஆனால் பச்சரிசிக்குத் தமிழகத்தில் தேவை மிகவும் குறைவு. ஆகவே இந்த ஒதுக்கீடு முழுவதையும் தரமான புழுங்கல் அரிசியாகவே தர வேண்டும் அல்லது நெல்லாகத் தர வேண்டும் என்று நாம் மத்திய அரசிடம் வற்புறுத்தி வருகின்றோம். இம் முயற்சி பயன் அளிக்கும் என்று நம்புகிறோம்.




## பொது விநியோகம்

தமிழகம் முழுவதும் ஏறக்குறைய 103 இலட்சம் குடும்பக் கார்டுகள் வழங்கப்பட்டுள்ளன. சுமார் 9,290 நியாய விலைக் கடைகள் பொது விநியோகப் பொறுப்பை ஏற்று நடத்துகின்றன. இவற்றில் சுமார் 6,500 கூட்டுறவுச் சங்கங்களாலும், சுமார் 830 தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தினாலும், எஞ்சியவை ஊராட்சிக் குழுக்களாலும், சில இடங்களில் கிராமக் குழுக்களாலும் நடத்தப்படுகின்றன. நீலகிரிப் பகுதியில் 4 கடைகள் மட்டுமே தனியார் வியாபாரிகளால் நடத்தப்படுகின்றன. பொது விநியோக முறையின் கீழ் நடத்தப்படும் கடைகள் அனைத்தும், தனியார் வியாபாரிகளிடம் ஒப்படைக்கப்படாமல், பொதுத் துறையில் நடத்தப்படுவது, பொது நலனுக்குகந்த சிறந்ததொரு சாதனையாகும்.

சென்னை நகரத்திலும், கோவை நகரத்திலும் அவற்றின் புறநகர்ப் பகுதிகளிலும், நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் வட்டத்திலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவங்கோடு வட்டத்திலும் கல்குளம் வட்டத்தில் 14 கிராமங்களிலும் குடும்பக் கார்டுகளின் பேரில் அரிசி வழங்கும் பொறுப்பை நேரடியாக அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. சென்னை, கோவை நகரம் ஆகியவற்றின் புறநகர்ப் பகுதிகள் ஆகிய இடங்களில், வயது வந்தவர் ஒவ்வொருவருக்கும் மாதம் 6 கிலோ அரிசியும், குழந்தைக்கு 4 கிலோ அரிசியும் வழங்கப்படுகிறது. குறைந்த பட்சம் ஒரு குடும்பத்திற்குச் சென்னையில் 30 கிலோ அரிசியும், கோவையில் 24 கிலோ அரிசியும் வழங்கப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் எல்லையோரப் பகுதியில் வயது வந்தோர் ஒவ்வொருவருக்கும் மாதம் 8 கிலோ அரிசியும், குழந்தைக்கு 4 கிலோ அரிசியும் குறைந்த பட்சம் ஒரு குடும்பத்திற்கு மாதம் 30 கிலோ அரிசியும் வழங்கப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் வட்டத்தில் வயது வந்தோர் ஒவ்வொருவருக்கும் 12 கிலோ அரிசியும், குழந்தைக்கு 8 கிலோ அரிசியும் வழங்கப்படுகிறது. இப்பகுதியில் குடும்பத்துக்குக் குறைந்த பட்சம், மாதம் 24 கிலோ அரிசி வழங்கப்படுகின்றது. மாநிலத்தின் பிற பகுதிகளில் நிரந்தரமாக அரிசி விநியோகப் பொறுப்பை அரசு ஏற்றுக் கொள்ளாத போதிலும், தட்டுப்பாடு ஏற்பட்டாலோ, வெளிச் சந்தையில் விலைகள் உயர்ந்தாலோ, பொது விநியோக முறையின் கீழ் அரிசி விநியோகத்தை விரிவாக்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதிகளிலும் மாதத்திற்கு ஒரு குடும்பத்திற்கு 24 கிலோ அரிசி வழங்கப்படுகிறது.

வாங்கும் சக்தி அதிகமாக இல்லாத மக்கள் வசதிக்காக அவர்கள் அரிசியை மொத்தமாக வாங்காமல் தவணையின் கீழ் பொது விநியோகக் கடைகளில் வாங்கிக் கொள்ளலாமென்று வசதி செய்யப்பட்டுள்ளது. அது போலவே கடலை எண்ணெய்யை 250 கிராமுக்குக் குறையாமல், பல தடவை

வாங்கிக் கொள்ளலாமென்றும் அண்மையில் வசதி செய்யப்பட்டுள்ளது.



1976-ஆம் ஆண்டு முழுவதிலும், பொது விநியோக முறையின் கீழ், 6.23 இலட்சம் டன்கள் அரிசி வழங்கப்பட்டது. 1977-ஆம் ஆண்டில் ஜூலை மாதம் இறுதி வரை 2.46 இலட்சம் டன்கள் அரிசி வழங்கப்பட்டுள்ளது. 1977 சனவரி மாதத்தில் பொது விநியோகத்தின்கீழ் 35 ஆயிரம் டன்கள், பிப்ரவரி மாதத்தில் 42 ஆயிரம் டன்கள், மார்ச்சு மாதத்தில் 43 ஆயிரம் டன்கள், ஏப்ரல் மாதத்தில் 33 ஆயிரம் டன்கள், மே மாதத்தில் 31 ஆயிரம் டன்கள், ஜூன் மாதத்தில் 29 ஆயிரம் டன்கள், ஜூலை மாதத்தில் 33 ஆயிரம் டன்கள் வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாதமும் 40 ஆயிரம் டன்கள் பொது விநியோகத்திற்குத் தேவைப்படும் என்று கணக்கிட்டு, உணவு வரவு செலவுத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் பொது விநியோகத்தை நடத்துவதற்கு நம்மிடம் போதுமான அரிசி கையிருப்பில் உள்ளது.

சென்ற ஆண்டு அக்டோபர் வரை இருந்த நிலைமைக்கும் இப்போதுள்ள நிலைமைக்கும் இடையேயுள்ள முக்கிய வேறுபாடு ஒன்றை நாம் மனத்திற்கொள்ள வேண்டும். சென்ற ஆண்டு நாம் ஒவ்வொரு மாவட்டத்தையும் ஒரு தனித் தொகுதியாகப் பாவித்து, ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்கு அரிசியோ நெல்லோ எடுத்துச் செல்லக் கூடாதென்று, தடை விதித்திருந்தோம். அந்தச் சூழ்நிலையில், குறிப்பாகப் பற்றாக்குறை மாவட்டங்களில், பொது விநியோக முறையை அரசு தீவிரமாகச் செயல்படுத்த வேண்டியிருந்தது. இந்த ஆண்டிலோ மாவட்டங்களுக்கிடையே நெல் அரிசி நடமாட்டத்தின் மீதிருந்த தடைகள் எல்லாம் நீக்கப்பட்டுவிட்டன. கேரள எல்லையோரப் பகுதிகளைத் தவிர மற்ற பகுதிகளில், அரிசியும் நெல்லும் மாநிலம் முழுவதும் தாராளமாகப் புழங்கலாம். இச் சூழ்நிலையில், வெளிச் சந்தையில் தாராளமாக அரிசி கிடைப்பதையொட்டி பொது விநியோக முறையின்கீழ் அரிசி விநியோகத்துக்கான தேவை படிப்படியாகக் குறைந்து வரும் என்று எதிர்பார்க்கின்றோம். ஏதேனும் சில இடங்களில் தட்டுப்பாடு ஏற்பட்டாலோ, விலைவாசிகள் மிதமிஞ்சி உயர்ந்தாலோ, அங்கு பொது விநியோக முறையைச் செயல்படுத்துவதன் மூலம் நிலைமையைச் சீராக்குவதே நமது நோக்கமாக இருக்கும். இவ்வாறு பொது விநியோக முறையைத் தொடர்ந்து நடத்தி தேவைக்கேற்ப அதை விரிவாக்குவதன் மூலம் தான் வெளிச்சந்தை விலைவாசிகளை நாம் கட்டுப்படுத்த முடியும். இந்த நோக்கத்தை அரசு நிறைவேற்ற வேண்டுமானால், அரசின் கைவசம் எப்பொழுதும் கணிசமான அளவு நெல் இருக்க வேண்டும்.

## கொள்முதல்

பொது விநியோக முறையைத் தொடர்ந்து நடத்துவதற்கும், கணிசமாகச் சேமிப்பைத் திரட்டி வைப்பதற்கும் கொள்முதலைத் தொடர்ந்து நடத்துவது அவசியம். வர்த்தக லெவி முறையின் கீழ், எந்த ஆண்டிலும் இரண்டு இலட்சம் டன்களுக்கு மேல் கொள்முதல் செய்ய இயன்றதில்லை. விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்து வந்தபோது குறைந்தபட்சம் 5 இலட்சம் டன்களும், 1975-76-ஆம் ஆண்டில் 8.9 இலட்சம் டன்களும் கொள்முதல் செய்ய இயன்றது. மேலும் வர்த்தக லெவி முறையில் லெவி கொடுக்கும் பொறுப்பை எல்லா வர்த்தகர்களும், நியாய உணர்வுடனும், சமூகப் பொறுப்புணர்வுடனும் நிறைவேற்றி வருகிறார்கள் என்ற நம்பிக்கை எந்த ஆண்டு அனுபவத்திலிருந்தும் ஏற்படவில்லை. இவற்றை எல்லாம் மனத்திற்கொண்டு, வர்த்தக லெவி முறையைத் தொடர்ந்து நடத்துவதா, அல்லது பெரும்பாலான ஆண்டுகளில் நாம் கொள்முதல் செய்து வந்தது போலவே விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்வதா என்ற முடிவை அரசு வெகு விரைவில் எடுக்க வேண்டியிருக்கும். நிலைமைகளை உன்னிப்பாக ஆராய்ந்து, பொது நலனுக்கு உகந்த முடிவை அரசு மேற்கொள்ளும்.

நேரடியாக விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யும் முடிவை அரசு மேற்கொண்டால் விவசாயிகளுக்கு இடர்ப்பாடு எதுவும் ஏற்படாமல் கொள்முதல் முறை அமைய வேண்டும் என்பதில் இந்த அரசுக்கு ஆர்வம் உண்டு. லெவி விகிதங்களும், உற்பத்திக்கேற்ப, நியாயமான முறையில் அமைக்கப்படும். லெவிக்கு நெல் அளந்த பின்பு, எஞ்சிய உபரி நெல்லை, விவசாயிகள் வெளிச் சந்தையில் விற்றுக் கொள்ள உரிமை அளிக்கப்படும். லெவி முறையைச் செயல்படுத்தியபோது, பெரிய விவசாயிகள் நடைமுறையில் லெவி கொடுக்காமல் தட்டிக்கழித்துவிட்டனர் என்றும், சிறு விவசாயிகள் கடு



மையான நிர்ப்பந்தத்திற்கு ஆளாயினர் என்றும், சென்ற ஆண்டுகளில் பரவலாக இருந்த குறைபாட்டிற்கு இடம் தராமல், லெவி முறையைச் செயல்படுத்துவதில் இந்த அரசு மிகவும் விழிப்பாகவும் எச்சரிக்கையாகவும் இருக்கும்.

**பொது விநியோக அரிசியின் தரம்**

பொது விநியோக முறையின் கீழ் விநியோகிக்கப்படும் அரிசியின் தரம், வெளிச் சந்தையில் கிடைக்கும்அரிசியுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, திருப்திகரமாக இல்லையென்ற குறை பரவலாக உள்ளதை அரசு உணர்ந்துள்ளது. இக்குறைக்கு இடந்தராத வண்ணம் பொது விநியோக முறையின் கீழ் விநியோகிக்கப்படும் அரிசியின் தரத்தைப் பாதுகாக்கவும், உயர்த்தவும் அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதிலுள்ள சிரமங்களையும் நாம் அறிவது அவசியம். தங்கள் சொந்தத் தேவைக்குப் பயன்படுத்தும் நெல்லின் தரத்தைப் பாதுகாப்பதில் காட்டப்படும் அக்கறை, கொள் முதலுக்குத் தருவதற்கு ஒதுக்கி வைக்கும் நெல்லைப் பொறுத்த வரையில் காட்டப்படுவதில்லை. குறிப்பாக குறுவைப்பருவத்தின்போது அறுவடை நேரத்தில் மழை பெய்வதால், ஈரம் கலந்த நெல்லை உலர்த்தாமல், கொள் முதலுக்கு அளந்து விடும் போக்கும் காணப்படுகிறது. உச்சக் கட்டத்தில் கொள்முதல் நடந்து கொண்டிருக்கும் நேரத்திலே, விவசாயிகள் கொண்டு வரும் நெல்லை, கொள்முதலுக்கு ஏற்றுக் கொள்ளாமல், திருப்பி அனுப்பி விட்டால், விவசாயிகளுக்கு ஏற்படக் கூடிய இடர்ப்பாடுகளையும், அவர்களிடையே ஏற்படக் கூடிய அதிருப்தியையும், தவிர்க்க விரும்பி கொடுக்கப்படும் நெல்லை கொள்முதல் நிறுவனங்கள் வாங்கிக் கொள்கின்றன. ஈரமான நெல் வாங்கப்பட்டால் அது அரைவைக்கு எடுத்துச் செல்வதற்கு முன்பே முளைத்து விடுகிறது. இவ்வாறு கொள்முதல் செய்யப்பட்ட நெல் அரைவையாளரிடம் கொடுக்கப்படுகிறது.

தனியார் வியாபாரத்திற்குத் தரமான அரிசியைத் தயார் செய்வதில் காட்டுகின்ற ஆர்வமும் அக்கறையும் அரசினல் கொள்முதல் செய்யப்பட்டு அரைவைக்குக் கொடுக்கப்படுகின்ற நெல்லைப் பொறுத்த வரையில் காட்டப்படுவதில்லை என்ற குறைபாட்டுக்கும் இடமுண்டு. அரிசியைத் தயார் செய்த பின்பு, அதை மொத்த கிடங்குகளில் சேமித்து வைக்கும் போதும், பின்னர் சில்லறைக் கடைகளுக்கு அவற்றை எடுத்துச் செல்லுகின்ற நிலையிலும், தரத்தைப் பாதுகாப்பது கடினமாகி விடுகிறது. மிகப் பெரிய அளவில் பல்லாயிரக்கணக்கான மூட்டை நெல்லை, கொள்முதல் செய்து கிடங்குகளில் சேமித்து வைத்து அரைவையாளரிடம் ஒப்படைத்து அரிசியை மீண்டும் கிடங்குகளுக்கு எடுத்துச் சென்று அங்கிருந்து தேவைக்கேற்ப, சில்லரைக் கடைகளுக்கு அனுப்புகின்ற பொது விநியோக முறையில் தரத்தைப் பாதுகாப்பது என்பது அரசு அலுவலர்களால் மட்டும் சாத்தியமாகக் கூடியதல்ல; விவசாயிகள் அரைவையாளர், சில்லறைக் கடை நடத்துவோர் ஆகிய அனைவருடைய ஒத்துழைப்பும் இந்தப் பணியில் தேவை.

அரிசியின் தரத்தைப்பாதுகாப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுவதில் உணவுத் துறை தொடர்ந்து விழிப்பாக இருக்கும். கொள்முதல் செய்யப்படும் நேரத்தில் ஈரத்தைத் தணிக்கை செய்வதற்கும், அதற்கேற்ப விலைகளில் வெட்டுகள் விதிப்பதற்கும் முறைகள் வகுக்கப்பட்டுள்ளன. நெல்லைச் சேமித்து வைக்கப்படும் கிடங்குகளில் தரப் பரிசோதனை செய்வதற்கும், தரம் கெட்டு விடாமல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், வசதிகள் செய்யப்பட்டுள்ளன. வேளாண்மைத் துறையைச் சார்ந்த விவசாய நிபுணர்கள் கொள்முதல் நிறுவனத்தில் நியமிக்கப்பட்டு, தரத்தைப்பாதுகாக்கும் பொறுப்பு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அரைவையாளர் தயார் செய்யும் அரிசியின் தரத்தைப் பரிசோதிக்கவும், தரம் குறைந்தால் அதற்கேற்ப கூலியில் பிடித்தம் செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சில்லறைக் கடைகள் தரமான அரிசி விநியோகத்தைக் கண்காணிக்க, சில்லறைக் கடைகளில் ஒழுங்காகத் தணிக்கையும் சோதனையும் செய்யப்படுகின்றன தரத்தைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுப்பதில் உணவுத் துறை உன்னிப்பாக இருக்கும் என்று நான் உறுதி கூறும் நேரத்திலே, இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் விவசாயிகள், வியாபாரிகள், அரைவையாளர்கள், ஆகிய அனைவருடைய ஒத்துழைப்பும் கிடைப்பது அவசர அவசியத் தேவை என்பதை மீண்டும் நான் வலியுறுத்த விரும்புகிறேன்.



அரிசியையே பெரிதும் பயன்படுத்திப் பழக்கப்பட்ட தமிழக மக்கள் கோதுமையை அதிக அளவில் பயன்படுத்துவதில்லை. அரிசியில் தட்டுப்பாடு ஏற்பட்டாலும், அரிசியின் விலைகள் மிதமிஞ்சி உயர்ந்து விட்டாலும், அந்நிலைமையில் தான், கோதுமையின் புழக்கம் அதிகரிக்கின்றது. அந்த நிலையில் கூட கம்பு, கேழ்வரகு, சோளம் போன்ற சிறு தானியங்களைப் பயன்படுத்தவும், அவையும் போதிய அளவு கிடைக்காவிடிலே கோதுமையைப் பயன்படுத்தவும் தமிழக மக்கள் விரும்புகிருர்கள். தமிழகத்தில் வெளிச்சந்தையில் இப்பொழுது தாராளமாக அரிசி கிடைக்கின்ற

காரணத்தினால், பொது விநியோக முறையின் கீழ் கோதுமையின் விநியோகம் பெரிதும் குறைந்துள்ளது. 1975 ஜூலை மாதத்தில் மாதம் 70,000 டன் கோதுமை விநியோகிக்கப்பட்டதற்கு மாறாக, 1977-ஆம் ஆண்டில் பொது விநியோக முறையின் கீழ் மாதம் சுமார் 5,000 டன்கள் கோதுமைதான் வாங்கப்பட்டது.

இப்பொழுது கிலோ ரூ. 1.40 விலையில் கோதுமை தடையின்றி பொது விநியோக முறையின் கீழ் வழங்கப்படுகிறது. நகர்ப் பகுதிகளில் மட்டுமல்லாமல், கிராமப் பகுதிகளிலும், ஒரு குடும்பம் எவ்வளவு கோதுமை கேட்டாலும் அதைக் கொடுப்பதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. அரிசியின் விலையைவிட கோதுமையின் விலை குறைவாகவுள்ளது என்பதைக் கருதியும், சத்துணவு அடிப்படையில் கோதுமையையும் சேர்த்துப் பயன்படுத்துவது உடல் நலனுக்கு உகந்தது என்பதைக் கருதியும், கோதுமையைப் பயன்படுத்தும் பழக்கத்தைத் தமிழக மக்கள் மேலும் அதிகமாக மேற்கொள்வார்கள் என்று நம்புகிறோம்.



## கோதுமைப் பொருட்கள் விநியோகம்

ரவை, மைதா, ஆட்டா, கோதுமைத் தவிடு போன்ற கோதுமைப் பொருட்கள் மீது இப்போது தடை எதுவும் இல்லை. 1976 டிசம்பர் முதற்கொண்டு, இப்பொருட்கள் நாடு முழுவதும் எந்தவிதக் கட்டுப்பாடுமின்றி விற்கப்படலாமென்று மத்திய அரசு ஆணையிட்டது. நம்முடைய மாநிலத்தில் கோதுமைப் பொருட்கள் இப்போது தாராளமாகக் கிடைக்கின்றன. விலைக் கட்டுப்பாடு இருந்த சமயத்தில் நிலவி வந்த விலைகளே, ஏறக்குறைய இப்போதும் நிலவி வருகின்றன.

தமிழ்நாட்டில் கோதுமைப் பொருட்களைத் தயார் செய்யும் 'ரோலர்' மாவு ஆலைகள் 28 உள்ளன. இவை அனைத்தும் தனியாரால் நடத்தப்படுகின்றன. இவற்றின் அரைவைத் திறன் மாதத்திற்கு 65 ஆயிரம் டன்களுக்கு மேலாகும். சென்ற சில ஆண்டுகள் வரை இவற்றிற்கு, அரைவைக்காக மத்திய அரசு ஒதுக்கி வந்த கோதுமை மிகக் குறைவாக இருந்தது. சென்ற சில மாதங்களாக, மாதம் 40 ஆயிரம் டன்கள் கோதுமை இவற்றிற்கு ஒதுக்கப்பட்டு வருகிறது. இதற்கும் மேலாக ஆலைகளுக்குத் தேவைப்பட்டால் ஒதுக்கீடு செய்யவும் வசதி செய்யப்பட்டுள்ளது. 40 ஆயிரம் டன்கள் கோதுமையை மத்திய அரசு ஒதுக்கீடு செய்து வந்துள்ள போதிலும், நம் மாநிலத்தில் ரோலர் மாவு ஆலைகள் இப்போது சுமார் 30 ஆயிரம் டன்கள் அளவில்தான் கோதுமையை எடுத்துப் பயன்படுத்துகின்றன.

## லெவி சர்க்கரை விநியோக முறை

நாட்டில் உற்பத்தியாகும் சர்க்கரையில் 65 சதவிகிதத்தை லெவி முறையின் கீழ் விநியோகத்திற்கு ஒதுக்கி, 35 சதவிகிதத்தை வெளிச்சந்தையில் விற்க உரிமை அளிக்கும் ஒரு முறையை மத்திய அரசு சென்ற சில ஆண்டுகளாகப் பின்பற்றி வருகிறது. லெவி சர்க்கரை கிலோ ரூ. 2.15 என்ற விலையில் குடும்பக் கார்டுகளின் பேரில் விநியோகம் செய்யப்படுகிறது. தமிழகத்தில் பொது விநியோகத்திற்கு மாதம் ஒன்றுக்கு 13,550 டன்கள் லெவி சர்க்கரையை மத்திய அரசு ஒதுக்கீடு செய்து வருகின்றது. இந்த ஒதுக்கீடு குறைந்தது 20,000 டன்களுக்கு உயர்த்தப்பட வேண்டுமென்று மத்திய அரசிடம் நாம் வற்புறுத்தி வருகின்றோம்.

இப்பொழுது ஒதுக்கப்படும் சர்க்கரையைக் கொண்டு நகரப் பகுதிகளிலும், கிராமப் பகுதிகளிலும் குடும்பக் கார்டுகளின் பேரில் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கிராமப் பகுதிகளிலும் லெவி சர்க்கரை ஓரளவாகிலும்கிடைக்க வேண்டுமென்பதில் அக்கறை கொண்ட அரசு, கிராமப் பகுதிகளில் மாதம் ஒன்றுக்கு ஒரு குடும்பத்திற்குக் குறைந்த பட்சம் ஒரு கிலோ சர்க்கரையாவது வழங்கவேண்டுமென்று ஆணையிட்டுள்ளது. மத்திய அரசின் ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டால், விநியோகத்தை மேலும் சீராக்கி கிராமப் பகுதிகளில் விநியோகம் ஆகும் அளவை உயர்த்துவதற்கு வாய்ப்புக் கிட்டும்.

இப்பொழுதுள்ள விநியோக முறையின்படி பெருநகர்ப்பகுதிகளில் மாதம் ஒன்றுக்கு 6 கிலோ வரை வருமானத்தின் அடிப்படையில் சர்க்கரை வழங்கப்படுகிறது. கிராமப்பகுதிகளுக்கு நாம் ஒரு கிலோதான் இப்பொழுது கொடுக்க முடிகின்றது. நகர்ப்புறங்களில் வழங்கப்படும் சர்க்கரையின் அளவைக் குறைத்துக் கொண்டு கிராமப் பகுதிகளுக்கு அதிகப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை வற்புறுத்தப்பட்டு வருகின்றது. பல ஆண்டுகளாக நகர்ப் பகுதிகளுக்கு அதிகம் வழங்கப்பட்டு வருவதை திடீரெனக் குறைத்து விடுவது பரவலான அதிருப்திக்கு இடம் தரும். மேலும் நகர்ப் பகுதிகளில் வழங்கப்படும் சர்க்கரை அளவைக் கணிசமாகக் குறைத்தால் கூட, அதனால் மிச்சப்படும் சர்க்கரை, கிராமப் பகுதிகளில் விநியோக அளவைக் கணிசமாக உயர்த்துவதற்குப் போதாது. இப்பொழுது வருமானத்தின் அடிப்படையில் சர்க்கரை வழங்கப்படுவதை மாற்றி குடும்பத்தினர் எண்ணிக்கையை மனத்திற்கொண்டு விநியோக அளவை நிர்ணயிக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையும் எழுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசிடமிருந்து நமக்குக் கிடைக்கும் ஒதுக்கீடு கணிசமாக அதிகரிக்கப்பட்டால், இக்கருத்துக்களைப் பரிசீலித்து, விநியோக முறையில் பொது நலனுக்கு உகந்த முறையில் மாற்றங்கள் செய்வது குறித்து ஆராயப்படும்.

கிராமப்புறங்களில் விநியோகத்திற்காக ஒதுக்கப்படும் சர்க்கரை சில சமயங்களில் கிராமத்திற்கே போய்ச் சேராமல் பெரிய நகரங்களில் விற்கப்பட்டு விடுகின்றது என்ற புகார்களும் வந்துள்ளன. இக் குறைபாட்டைத் தவிர்க்க, கிராமத்திற்கு ஒதுக்கப்படும் சர்க்கரையைத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமே கிராமங்களுக்கு எடுத்துச் சென்று, அங்கேயே சில்லறைக் கடைகளுக்கு வழங்கும் முறையை, பரீட்சார்த்தமாக வட ஆர்க்காடு மாவட்டத்தில் செயல்படுத்தினோம். இம்முறை திருப்திகரமாக செயல்பட்டு வந்த அனுபவத்தையொட்டி, இராமநாதபுர மாவட்டத்திற்கும் அண்மையில் விரி



வாக்கப்பட்டுள்ளது. இவ்விரு மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படும் அனுபவத்தைக் கொண்டு, மற்ற மாவட்டங்களிலும் இம்முறையை விரிவாக்கப்படுவதைக் குறித்து அரசு பரிசீலிக்கும்.

**விலைவாசிகளும், விலைகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளும்**

**அரிசி**

தற்போது அரிசியின் விலைகள் நிதானமாகவே உள்ளன என்று முன்பு குறிப்பிட்டுள்ளோம். நம்முடைய மாநிலத்தில் அதிகம் புழங்குவது நடுத்தர புழுங்கல் அரிசி. இதன் விலைகள் இப்போது உபரி மாவட்டங்களில் கிலோ ரூ. 1.60 முதல் ரூ. 1.95 வரையிலும், பற்றுக்குறை மாவட்டங்களில் கிலோ ரூ. 1.80 முதல் ரூ. 2.05 அளவிலும் உள்ளன. 1974-ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் இந்த அரிசியின் விலை கிலோ ரூ. 2.25 முதல் ரூ. 2.85 வரை இருந்தது. 1975-ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் இதன் விலை கிலோ ரூ. 3.60 வரை எட்டியிருந்தது. 1976-ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் கிலோ ரூ.1.80 முதல் கிலோ ரூ. 2.50 வரை இருந்தது.1976 அக்டோபருக்குப் பின்பு, தென் உணவு மண்டலம் விரிவாக்கப்பட்டதையும், தமிழகத்தில் மாவட்டங்களிடையே போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதையும் ஒட்டி, உபரி மாவட்டங்களிலிருந்து குறைந்த விலைக்கும், பற்றுக்குறை மாவட்டங்களிலிருந்த உச்ச விலைக்கும் இடையேயிருந்த கணிசமான இடைவெளி இப்போது பெரிதும் குறைக்கப்பட்டுள்ளது. ஆகவே, இந்த ஆண்டு அரிசியின் விலை, சென்ற நான்கு ஆண்டுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, குறைவாகவே உள்ளது. சென்ற சில வாரங்களாக அரிசியின் விலையில் ஆங்காங்கு சிறிது உயர்வு காணப்படுகிறது. இயல்பாகவே ஜூன் மாதம் முதற் கொண்டு அக்டோபர் வரை, முக்கிய அறுவடை எதுவும் இல்லாத காரணத்தால், தமிழ்நாட்டில் அரிசியின் விலைகள் ஒவ்வொரு ஆண்டும் உயர்வது வழக்கம். இந்த ஆண்டு இந்த உயர்வு ஓரளவு கட்டுப்படுத்தப் பட்டுள்ளதென்றே கூற வேண்டும். மேட்டூர் நீர்ப்பாசனப் பிரச்சினைகளிலிருந்த சிக்கல்களையொட்டி குறுவைப் பயிரின் நிலைமை சில நாட்களுக்கு முன்பு வரை தெளிவற்றிருந்ததும், இந்த ஏற்றத்திற்கு ஒரு காரணமாக இருக்கலாம். இப்போது குறுவை நிலைமை தெளிவாகி விட்டதால் இந்த உயர்வு கட்டுப்படுத்தப்படுமென்று எதிர்பார்க்கலாம். விலைகள் மேலும் உயர்ந்தால், பொது விநியோக முறையை விரிவாக்கி விலைகளைக் கட்டுப்படுத்துவதற்குரிய வகையில் அரசிடம் அரிசி போதிய அளவு கையிருப்பில் உள்ளது. அக்டோபர் மாத இறுதியில், குறுவை அறுவடை கணிசமாக வந்தவுடன் நிலைமை மேலும் சீராகிவிடும்.

**சிறு தானியங்கள்**

தமிழ்நாட்டில் சிறுதானியங்களின் விலை அரிசியின் விலையை அனுசரித்துச் செல்வதாக அமைவது வழக்கம். அவ்வாறே சிறு தானியங்களின் விலைகளும் இந்த ஆண்டு நிதானமாகவே உள்ளன. ராகி, சோளம், கம்பின் விலைகள் கிலோ ரூ. 1.10 முதல் ரூ. 1.40 வரை உள்ளன. மொத்தத்தில் சிறு தானியங்களின் விலைவாசிகள் 1974-1975-ஆம் ஆண்டுகளைவிட மிகக் குறைவாகவும், 1976-லிருந்த விலைகளுக்கு ஏறக்குறைய சமமாகவும் உள்ளன.

**பருப்பு வகைகள்**

சென்ற மூன்று ஆண்டுகளிலிருந்த விலையைவிட இந்த ஆண்டு சில வகைப் பருப்புகளின் விலைகள் ஏறியுள்ளன. இந்த விலை உயர்வு தமிழ்நாட்டில் மட்டும் ஏற்பட்டதல்ல; நாடு முழுவதும் காணப்படும் போக்கை ஒட்டியது. தமிழ்நாட்டில் பருப்பு வகைகளின் உற்பத்தி மிகக் குறைவு. மற்ற மாநிலங்களிலிருந்து வரத்தை நம்பித்தான் தமிழகம் உள்ளது. அந்த மாநிலங்களிலேயே இந்த ஆண்டு விளைச்சல் பாதிக்கப் பட்டுள்ளதாலும், விலைகள் உயர்ந்துள்ளதாலும், இங்கும் விலைவாசிகள் உயர்ந்துள்ளன. குறிப்பாகத் துவரம் பருப்பின் விலை சாதாரண ஆண்டுகளில் கிலோ ரூ. 2.00 முதல் ரூ. 2.20 வரை இருக்கும்; இந்த ஆண்டு கிலோ ரூ. 3.40 முதல் ரூ. 4.50 வரை உயர்ந்துள்ளது. உளுத்தம் பருப்பின் விலையும் இப்போது ரூ. 3.70 முதல் ரூ. 4.64 வரை உயர்ந்துள்ளது. உற்பத்தி ஆகும் இடங்களில் அடுத்த அறுவடை இன்னும் சில மாதங்களில் வந்ததும், நிலைமை திருந்துமென எதிர்பார்க்கலாம்.

**கடலை எண்ணெய்**

கடலை எண்ணெய் விலையில் நாடு முழுவதும் சென்ற சில மாதங்களாகவே காணப்படும் விலை உயர்வு, மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் கவலை அளிப்பதாய் அமைந்துள்ளது. சாதாரணமாக தமிழகத்தில் உற்பத்தியாகும் கடலை எண்ணெய், மாநிலத்தின் தேவைகளுக்குச் சற்று அதிகமானது. சென்ற சில ஆண்டுகள் வரை தமிழகத்திலிருந்து எண்ணெய் மற்ற மாநிலங்களுக்குச் செல்வதும், அங்கிருந்து எண்ணெய் இங்கு வருவதும் வாடிக்கையாக இருந்தது. ஓரிரு ஆண்டுகளாக இந்தப் போக்கு தடைப்பட்டுள்ளது. தமிழகத்தில் 1976-ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் கிலோ ரூ. 6.50 வரை விற்று வந்த கடலை எண்ணெய் இப்பொழுது ரூ. 10.40 அளவில் விற்கப்படுகிறது.

நாடு முழுவதும் கடலை எண்ணெய்யில் ஏற்பட்டுள்ள தட்டுப்

பாட்டைப் போக்கவும், விலை களைக் கட்டுப்படுத்தவும், மத்திய அரசு அயல் நாடுகளிலிருந்து சமையல் எண்ணெய்களை இறக்கு மதி செய்து, சுத்திகரித்து அவற்றைக் கிலோ ரூ. 8.50 விலை யில் விற்க ஒரு திட்டம் வகுத்துள் ளது. சுத்திகரிக்கப்பட்ட இந்த எண்ணெய்க்குத் தமிழகத்தில் அவ்வளவு வரவேற்பு இல்லை. சமையலின் போதும், சமையலுக்குப் பின்பும் ஒருவித வாசனை வருகிறது என்று பொது மக்கள் குறைபட்டுக் கொள்கின்றனர். ஆகவே, தமிழகத்தைப் பொறுத்த வரையில் சுத்திகரித்த எண்ணெய் யைப் பெரிதும் நம்பியிராமல், அயல் நாடுகளிலிருந்து இறக்கு மதியாகும் கடலை எண்ணெய்யில் கணிசமான பகுதியை ஒதுக்க வேண்டுமென்று மத்திய அர சிடம் வற்புறுத்தியுள்ளோம்.

தமிழக அரசினால் அமைக்கப் பட்டுள்ள தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் எல்லா மாவட்டத் தலை நகர்களிலும், ஒரு இலட்சத் திற்கு மேல் மக்கள் தொகை உள்ள முக்கிய நகர்களிலும், கடலை எண்ணெய்யை கிலோ ரூ. 9.50 விலையில் விற்க இப்போது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனாலும், கிலோ ரூ. 8.50 அளவில் விற்கப்படும் சுத்திகரிக் கப்பட்ட அயல் நாட்டு எண் ணெய்யின் விற்பனையை விரிவாக் குவதனாலும், நிலைமையைக் கட்டுப்படுத்த முடியுமென்று எதிர்பார்க்கிறோம். மணிலாப் பயிரின் அடுத்த முக்கிய அறு வடை தமிழகத்தில் அக்டோபர், நவம்பர் மாதங்களில் வரும். அந்த அறுவடைக்குப் பின் கிடைக்கும் எண்ணெய்யைக் கொண்டு, தமிழ்நாட்டின் தேவை களை நிறைவு செய்யும் வகையில் ஒரு சீரான விநியோகத் திட்டம் வகுப்பது குறித்து உணவுத்துறை பரிசிலனை செய்து வருகிறது.

நல்லெண்ணெய்யைப் பொறுத்த வரையில் நம்முடைய மாநிலத்தின் தேவைகளுக்கு வேண்டிய அளவு இங்கு உற்பத்தி யாவதில்லை. மற்ற மாநிலங்களி லிருந்து எண்ணெய் வரத்தை நாம் பெரிதும் நம்பியுள்ளோம். கடலை எண்ணெய்யின் விலைகளை யொட்டி, நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய்களின் விலை உயர்வது வழக்கமாகியுள்ளது. நல்லெண்ணெய்யின் விலை இப் போது கிலோ ரூ. 9.35 முதல் ரூ. 10.45 வரை உள்ளது. சென்ற ஆண்டு விலைகளுடன் ஒப் பிட்டுப்பார்த்தால், இவை உயர் வாகவே உள்ளன. ஆனால், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரியில் இருந்த

## நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் கடலை எண்ணெய் விற்பனை !

வெளிச்சந்தையில் கடலை எண்ணெய்யின் விலை உயர்ந்துள்ளதையொட்டி சென்னை, கோயம்புத்தூர் நக ரங்களிலும், புறநகர்ப் பகுதி களிலும், மாவட்டத் தலைநக ரங்களிலும் ஒரு இலட்சத் திற்கு மேற்பட்ட மக்கள் தொகை உள்ள நகராட்சிகளி லும் கடலை எண்ணெய்யை கிலோ ரூ. 9.50 விலைக்கு குடும்பக் கார்டுகளின் பேரில் மாதம் ஒன்றுக்கு நான்கு கிலோ வீதம் விற்க தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் முன் வந்துள்ளது. ஒரே நேரத்தில் ஒரு கிலோ எண்ணெய் வாங்குவது சிரம மாக இருக்கிறது என்ற கருத்து தெரிவிக்கப்பட்டுள்ள தால், ஒரு கிலோவுக்கும் குறைவாக வாங்க விரும்பும் பொதுமக்கள் ஒரு முறைக்கு 250 கிராம் அதாவது ¼ கிலோவுக்குக் குறையாமல் வாங்கிக் கொள்ளலாம் என்ற வசதியைச்செய்து கொடுக்க இப்பொழுது தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் முன்வந்துள்ளது.

அயல்நாடுகளிலிருந்து இறக் குமதி செய்து சுத்திகரிக்கப் பட்ட சமையல் எண்ணெய் சென்னை, கோயம்புத்தூர் நக ரங்களிலும், அவற்றின் புற நகர்ப் பகுதிகளிலும் கிலோ ரூ. 8.50 விலையில் மாதம் ஒன்றுக்கு நான்கு கிலோ வீதம் விற்கப்படுகின்றது. பொதுமக்கள் விரும்பினால் இந்த எண்ணெய்யை ஒரு முறைக்கு 250 கிராமுக்கு குறையாமல் வாங்கிக் கொள் ளலாம்.

விலைகளைவிட இப்போதுள்ள விலைகள் குறைவாகக் காணப்படு கின்றன.

தேங்காய் எண்ணெய்யைப் பொறுத்த வரையில் கிலோ ரூ. 10.45 முதல் ரூ. 13.00 வரை விலை அமைந்துள்ளது. 1977 சனவரியில் இந்த விலைகள் ரூ. 15.50 முதல் ரூ. 18.00 வரை எட்டியிருந்தன. அதன் பின்பு விலைகள் மிகவும் குறைந்து, பின்னர் சற்று ஏறி, இப்போது கிலோ ரூ. 10.00 முதல் ரூ. 13.00 அளவில் உறுதிப்பட்டுள் ளன. தேங்காய் எண்ணெய்யைப் பொறுத்தவரை, கேரள மாநிலத் திலிருந்து வரும் எண்ணெய்யைத் தான் தமிழகம் பெரிதும் நம்பி யுள்ளது. கடலை எண்ணெய்யின் விலையைக் கட்டுப்படுத்த மத்திய அரசும் மாநில அரசுகளும் மேற் கொண்டுள்ள முயற்சிகளின் பலனாக, நல்லெண்ணெய், தேங் காய் எண்ணெய்யின் விலைகளையும் விரைவில் கட்டுப்படுத்த முடியும் என்று எதிர்பார்க்கலாம்.

### நிரந்தரமான தீர்வு


விலைவாசிப் பிரச்சினைக்கு நிரந்தரமான ஒரு தீர்வு காண் பதற்கு, உற்பத்திப் பெருக்கம், பண வீக்கத் தடுப்பு, சீரான விநியோகம் ஆகிய அம்சங்கள் ஒருங்கிணைந்த அனைத்திந்தியப் பொருளாதாரத் திட்டத்தின் பின்னணியில் செயல்படுவது இன்றியமையாததாகும். இதற்கு உரிய ஆக்கபூர்வமான பரிந்துரை களை, மாநில அரசு மத்திய அரசுக்குச் செய்யும். அரிசி, கோதுமையைத் தவிர மற்ற, உணவுப் பொருள்களின் வர்த்தக தைக் கட்டுப்படுத்த அரசுக்கு அதிக வாய்ப்பு இல்லை. உணவுப் பொருள்களின் மொத்த விற்பனை முழுவதையும் அரசே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பது ஒரு கருத்து. இது கொள்கையளவில் வரவேற்கத்தக்கதாயினும், நடை முறையில் இதை உடனடியாகச் செயல்படுத்துவதற்குச் சாதக மான சூழ்நிலை நாட்டில் இப் போது உருவாகவில்லை. உணவுப் பொருட்களின் மொத்த வியா பாரத்தை அரசு ஏற்றுக்கொள்ள இயலாத நிலையில், செயற்கை யாக உணவுப் பொருட்களின் தட்டுப்பாடு ஏற்படுத்துவதையும் மிதமிஞ்சிய விலை உயர்வு ஏற் படுத்துவதையும் அரசு அனு மதிக்கவும் முடியாது. கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும், அரசின் சார்பு கொண்ட நுகர்பொருள் வாணிபக் கழகம் (சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன்) போன்ற நிறுவ னங்கள் மூலமாகவும், இன்றி யமையாத உணவுப் பொருட்

களின் விநியோகத்தை மேற்கொள்வது, இச்சிக்கலான பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உசிதமான வழிகளில் ஒன்றாகும்.

### நியாய விலைக் கடைகள்

இந்த அடிப்படையில்தான் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு நியாய விலைக் கடையைத் திறந்து அங்கு அரிசி, கோதுமை மட்டுமல்லாது, பருப்பு வகைகள், எண்ணெய் வகைகள், புளி, மிளகாய் போன்ற மற்ற உணவுப் பொருட்களையும் நியாயமான விலைக்கு விநியோகம் செய்யத் திட்டம் வகுக்கப்படும் என்று ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டிருந்தது. இப்போது தமிழ்நாட்டில் ஏறக்குறைய 6,000 கிராமங்களில் அந்தக் கிராமங்களிலேயே நியாய விலைக் கடைகள் இருக்கின்றன. ஆனால் இந்தக் கடைகளில் இப்போது பொது விநியோக முறையின் கீழ், அரிசி, கோதுமை, லெவி சர்க்கரை போன்றவை மட்டுமே பெரும்பாலும் விற்கப்படுகின்றன. இக்கடைகள் அனைத்திலும், மற்ற இன்றியமையா உணவுப் பொருட்களையும் விநியோகிக்க வழி செய்வது, நாம் எடுக்க உத்தேசித்திருக்கும் முதல்நடவடிக்கையாகும்.

தமிழ்நாட்டில் ஏறக்குறைய 16,000-க்கு மேற்பட்ட ரெவின்யூ கிராமங்கள் உள்ளன. ஒரு கிராமத்திற்கு ஒரு கடை திறக்க வேண்டுமென்றால், இப்போதுள்ள சுமார் 6,000 கடைகள் நீங்கலாக, இன்னும் சுமார் 10,000 கடைகள் திறக்க வேண்டும். நிர்வாகச் செலவு மிதமிஞ்சி சென்றுவிடாமல், சிக்கனமாக இத்திட்டத்தைச் செயல்படுத்துவது என்ற அடிப்படையில் உணவுத்துறை பல்வேறு கோணங்களிலிருந்து இப்பிரச்சினையை ஆராய்ந்து வருகிறது. இப்பொழுது கிராமங்களில் செயல்பட்டுவரும் பல்வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் இக்கடைகள் நடத்தப்படலாம் என்பது ஒரு யோசனை. பெரிய கிராமங்களில் ஏற்கெனவே இயங்கி வரும் நியாய விலைக் கடைகளை மையமாகக் கொண்டு, சுற்றியுள்ள கிராமங்களுக்கு வாரத்தில் குறிப்பிட்ட ஒரு நாளன்று உணவுப் பொருட்களை எடுத்துச் சென்று அங்கு விற்பனை செய்யலாமா என்பது மற்றொரு யோசனை. கிராம மட்டத்தில் பணியாற்றி வரும் ஊழியர்களின் உதவியைக் கொண்டு, அவர்களுக்கு ஒரு சிறப்பு ஊதியம் அளித்து, அவர்கள் மூலமாக இந்த விற்பனையை ஏற்பாடு செய்யலாமா என்பது மற்றொரு யோசனை. இப்பல்வேறு வழிகளைத் தீவிரமாக ஆராய்ந்து, சிறந்ததாகவும் சிக்கனமாகவும் உள்ள ஒரு முறையில் இத்திட்டத்தை அடுத்த சில மாதங்களில் நான்கு மாவட்டங்களிலாகிலும், ஓராண்டுக் காலத்திற்குள் மாநிலம் முழுவதிலும் செயல்படுத்தும் பொறுப்பை மேற்கொள்வோம்.




அன்றாட வாழ்க்கைக்குத் தேவைப்படும் இன்றியமையாப் பொருள்களை நியாயமான விலையில் 'அமுதம்' வழங்குகிறது.

*[35-உணவு மானிய கோரிக்கையின் மீது 9-8-1977 அன்று சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்பட்ட குறிப்பிலிருந்து தொகுக்கப்பட்டது.]*

## முட்டையைப் பாதுகாக்கும் வழிகள்!

முட்டை ஒரு சத்துணவானாலும் விரைவில் கெட்டுப் போகும் தன்மையுள்ளது. முட்டை கெட்டுப் போகப் பல காரணங்கள் உள. அவற்றுள் முக்கிய மானவை மூன்று:

(1) வெப்பம்: முட்டைகள் விரைவில் கெட்டுப் போகாமல் இருக்க வேண்டுமானால் அவைகளைச் சேகரித்து வைக்கும் அறையின் வெப்பம் 50-55 டிகிரி பாரன்ஹைட் அளவுக்கு மேல் இருக்கக் கூடாது.

(2) காற்றின் ஈரப்பசை: முட்டைகளை 70-80 சதவிகிதம் ஈரப்பசை உள்ள அறையில் வைத்தால் அதிக நாட்கள் வைத்திருக்கலாம்.

(3) முட்டையின் வயது: நாள்பட்ட முட்டைகள் கெட்டுப் போக அதிக வாய்ப்பு உண்டு.

முட்டையின் தரத்தைப் பாதுகாக்கும் வழிகள்:

(1) கோழி வீட்டிலிருந்து முட்டைகள் நாள்தோறும் 3 அல்லது 4 முறையாவது எடுக்கப்பட வேண்டும்.

(2) அழுக்காக உள்ள முட்டைகளை நன்றாகச் சுத்தம் செய்ய வேண்டும்.

(3) சேமிக்கும்போது முட்டையின் சிறிய பகுதி கீழ் நோக்கி இருக்க வேண்டும்.

(4) முட்டையைச் சேமித்து வைத்திருக்கும் அறையில், மூக்கைத் துளைக்கும் மணமுள்ள பொருட்கள் எதையும் வைக்கக் கூடாது.


(5) அறையின் தட்பவெப்ப நிலை சரியாக இருக்க வேண்டும்.

தகவல்:
கால்நடைத் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை-3.



# காலத்திற்கு ஏற்ற வகையில்
# பாசன வசதிகளைச் சீரமைப்போம்!

மாண்புமிகு
பொதுப்பணித் துறை அமைச்சர்
**திரு ச. இராமச்சந்திரன்**



தமிழ் நாட்டுப் பாசன வளர்ச்சிக்கு இடையூறுகள் பல உள்ளன. இம் மாநிலம் அதன் மேற்பரப்பு நீரோட்டத்தினை 93 சதவீதத்திற்கும் அதிகமாகப் பயன்படுத்தியுள்ளது. அண்டை மாநிலங்களிலுள்ள நீரைத் திருப்பி விட்டாலொழிய, இனிமேல் முக்கியப் பாசனத் திட்டங்களுக்கான வாய்ப்பு கிஞ்சித்தும் இல்லை என்று கூறலாம். தற்பொழுது நீரைப் பயன்படுத்தும் அளவைக் கொண்டு நோக்கின், இப்போது உள்ள பாசனப் பகுதிகளுக்கு ஆண்டுதோறும் போதுமான நீர் வழங்க முடியுமா என்பதே சந்தேகத்திற்கு இடமாயுள்ளது. ஆண்டுதோறும், பல பாசன அமைப்புகளில், நீர் பற்றாக்குறை பல்வேறு அளவுகளில் இருந்து வருகிறது. இத்துடன், அடுத்தடுத்து வரும் வறட்சியின், கடுமைகளைக் குறைக்கவும், அவற்றிலிருந்து நிவாரணம் அளிக்கவும், நிதி வாயில்களைத் திருப்பிவிட வேண்டிய அவசியமும் ஏற்பட்டுள்ளது.


பல ஆண்டுகளாக, இதுகாறும் பயன்படுத்தப்படாத உள்ளூரில் உள்ள சிறு ஆற்றுப் படுகைகள், சிறு நீர்த் தேக்கங்கள், ஆகியவற்றின் உபரி நீரைத் தேக்குவதற்கான நடுத்தரப் பாசனத் திட்டங்கள்தான் நமது முக்கிய ஆதாரத் திட்டங்களாக உள்ளன. இத்திட்டங்களிலிருந்து கூட, நாம் உரிய அளவிற்கு மேல் பயனடைந்துள்ளோம். ஏற்கனவே முடிக்கப்பட்ட சில திட்டங்களில் நீரியல் மற்றும் சார்பு நிலை சம்பந்தமாக நாம் எவ்வளவு எதிர்பார்த்தோமோ அந்த அளவுக்குப் பலன் கிட்டவில்லை. கடந்த காலத்தில் கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டங்கள் பல, விரிவாகப் புலனாய்வு செய்யப்பட்டதன் பேரில் தொழில் நுணுக்கம் மற்றும் பொருளாதார அடிப்படையில் பயனுள்ளவையா என்பதுகுறித்து நமக்கு திருப்தியளிக்கத் தவறிவிட்டன. மேலும் அத்திட்டங்கள் நிறைவேற்றப்படுவதால் ஏற்கனவே உள்ள ஆயக் கட்டுக்களுக்குக் கிடைக்கும் பாசன வசதியும் குறையுமோவென அச்சுறுத்துவதாகவும் உள்ளன.

## நிலநீர் ஆய்வில் முன்னோடி தமிழகமே!

மேற்பரப்பு நீர்வாயில்கள் குறைந்ததன் காரணமாக ஓரளவுக்கு நில் நீரை நாம் படிப்படியாக, நாட நேரிட்டுள்ளது; அதிலும் இம்மாநிலத்தின் பல பகுதிகளில் நிறைவு செய்யும் தகுதிக்கு அதிகமாகவே நிலநீரை எடுத்துள்ளோம். நிலநீர் ஆய்வைத் திட்டமிட்டு முறையாக நடத்தி, வரைபடம் தயாரிக்கும் பணியில் மாநிலங்களிலேயே தமிழ் நாடு முன்னதாக விளங்குகிறது. இம்மாநிலத்தில் நில நீர்

ஆய்வுப் பணிகள், தற்போது மும்முரக் கட்டத்தில் இறங்கியுள்ளன. இதனால் திட்ட வட்டமான பலன்கள் இன்னும் சில ஆண்டுகளில் கிடைக்கக் கூடும். ஆனால் மேற்கொண்டும் நில நீர் சொற்பமான அளவுக்கு மட்டுமே அங்கொன்றும் இங்கொன்றுமாக எடுக்க அனுமதிக்கப்படுகின்ற அதே நேரத்தில், ஊற்று நீர் பெருகவும், ஏற்கனவே குறைந்த நீரளவைச் சேமிக்கவும் உடனடி

நிலநீர் எடுத்து
நீர்வளம் பெருக்குவதில்
முன்னோடியாக உள்ளது தமிழகமே'



யாகக் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

## பாசன வளர்ச்சிக்கான அரசு கொள்கைகள்


பாசனத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதிலும், அணுகு முறையிலும், அடிப்படை மாற்றம் தேவை என்பதை இந்நிலைமை திண்ணமாக எடுத்துக் கூறுகிறது. ஏற்கனவே நிறைவேற்றப்பட்டு வருகிற திட்டப் பணிகள் விரைவாக முடிக்கப்பட வேண்டும். திட்ட மூலதனச் செலவுகளைக் கூடுதலாக்க வேண்டியதும் அவசியமாகிறது. உற்பத்தி அளவையொட்டித் திட்ட முதலீடுகள் இருக்க வேண்டும். சிறு பாசனத் திட்டங்களை நிறைவேற்றுதல், நீர் வாயில்களை அவ்வப்போது முறையாகப் பராமரித்தல், ஆற்றுப் பாசன, ஏரிப் பாசன அமைப்புகளைக் காலத்திற்கேற்றவாறு புதுமைப்படுத்துதல் மற்றும் இம்மாநிலத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மேற்கு நோக்கிப் பாயும் ஆற்று நீரைத் திருப்பி விடுதல் ஆகியவை புதிய பாசன வளர்ச்சிக்கான அரசுக் கொள்கையின் முக்கிய அம்சங்களாக விளங்கும்.

இதற்கு இணங்க பாசனத் திட்டத்தை முழுவதுமாகச் சீரமைத்து, பயனுள்ள வகையிலும், செவ்விய முறையிலும் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் முதல் நடவடிக்கையாக, பெரிய, நடுத்தர பாசனத்திற்கான ஒதுக்கீடு, 1975-76ல் சுமார் ரூ. 11.9 கோடியாக இருந்ததை, இந்த ஆண்டில் ரூ. 24.73 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. பாசனம் குறித்த மொத்த மூலதனச் செலவு 1975—76ல் ரூ. 41.01 கோடியாகவும், 1976—77ல் ரூ. 48.28 கோடியாகவும் இருந்ததற்கு மாறாக இந்த ஆண்டில் ரூ. 50.53 கோடியாக இருக்கும்.

## பெருந் திட்டங்கள்

கீழ் நீராறு அணையும் சுரங்கப் பாதை அமைக்கும் பணியும் முடியும் நிலையில் உள்ளன. அதனால் பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டமும் முடியும் நிலையில் உள்ளது. நடப்பாண்டில், இத்திட்டத்திற்கு ரூ. 440 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இத் திட்டத்தினின்று கிடைக்கும் நீரின் அளவு, எதிர்பார்த்ததைவிட மிகக் குறைவாக உள்ளது. நிர்ணயிக்கப்பட்ட ஆயக்கட்டுப்பகுதியான 2,50,000 ஏக்கரில், சுமார் 1,80,000 ஏக்கர் நிலம் மட்டுமே ஒவ்வோர் ஆண்டும் பாசனம் பெறலாம். இரண்டாண்டுக்கு ஒரு முறை பாசனம் அளிக்கும் முறையின் கீழ், ஒவ்வோர் ஆண்டும் சுமார் 1,80,000 ஏக்கர் பரப்பளவு நிலத்திற்குப் பாசனமளிக்கும் நோக்கத்துடன், 1976 ஜனவரியில் இந்த ஆயக்கட்டு மேலும் 1,15,000 ஏக்கர் பரப்பளவுக்கு அதிகப்படுத்தப்பட்டது. இதனை எதிர்த்து, அந்தப் பகுதியிலிருந்து பெறப்பட்ட முறையீடுகளின் அடிப்படையில், இந்த முடிவை அரசு மறு பரிசீலனை செய்து வருகிறது. மிகவும் மன நிறைவளிக்கத் தக்கதும்,

பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்திற்கு நடப்பாண்டில் ரூபாய் 440 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



உலக வங்கி உதவி அளிக்கும் இத் திட்டம், வைகை அணைக்கும் பேரணைக்கும் இடையே இணைப்பு கால்வாய் ஒன்று வெட்டுதல், முக்கிய கால்வாய்களுக்கும், கிளை ஆறுகளுக்கும் கரை அமைத்தல், பொறி மதகுகளுக்கு மேம்பாடுகள் ஆகியவற்றைச் செய்வதன் மூலம், இத் திட்டத்தின் திறனை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தற்போதுள்ள பகுதியில் 18,000 ஏக்கர் பரப்பளவு நிலத்திலுள்ள இரண்டாம் போகப் பயிருக்கும் பாசனமளிப்பதுடன்; சுமார் 40,000 ஏக்கர் புதிய பகுதிக்கும் பாசன வசதி அளிக்கும்.

இத் திட்டத்திற்காக இவ்வாண்டு ரூபாய் 3 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

வைகைக் கால்வாய்களைக் காலத்திற்கேற்றவாறு நவீனப்படுத்துதல் நிறைவேற்றப்பட்டு வரும் ஒரு பெரிய திட்டமாகும். இதற்கு ரூ. 823 இலட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. பாசனமளிக்காது விடுபட்ட சுமார் 10,000 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி அளிப்பதுடன், சுமார் 95,880 ஏக்கர் ஏரிப் பாசனம் பெறும் பகுதிகளுக்கு இடையறுப் பாசன வசதி அளிப்பதற்கான இத்திட்டங்களை நடப்பாண்டிலேயே முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் பழைய கழிமுகப் பகுதியிலுள்ள காவிரிப் பாசன ஏற்பாட்டிற்கு விரைவு படுத்தப்பட்ட பழுதுபார்க்கும் பணித் திட்டத்திற்காக, இந்த ஆண்டு ரூ. 3 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை முழு அளவில் காலத்திற்கேற்ப நவீனப்படுத்துவதற்கான தெளிவமைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது.

பழைய காவிரிக் கால்வாய்கள், பவானி மற்றும் அமராவதி திட்டங்களுக்கு மேம்பாடுகள் செய்வதும் அரசின் கவனத்தை ஈரத்து உள்ளது.

## நடுத்தரப் பாசனத் திட்டங்கள்

அதிக நிதி ஒதுக்கத்துடன் நிறைவேற்றப்பட்டு வரும் 11 நடுத்தர பாசனத் திட்டங்களில் கீழ்க்கண்ட ஏழு திட்டங்களை இவ்வாண்டில் செய்து முடிப்பதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம். இவ்வாண்டு 35,000 ஏக்கர் நிலம் புதிதாக பாசனம் பெறும்.

(1) மருதா நதி ;

(2) கொடகனுறு ;

(3) வறட்டுப் பள்ளம் ;

(4) குண்டேரிப் பள்ளம் ;

(5) வட்டமலைக்கரை ஓடை நீர்த்தேக்கம் ;

(6) வரதமா நதி ;

(7) பி. டி. ராஜன் கால்வாய்.

வட ஆற்காடு மாவட்டம், போளூர் வட்டம், செண்பகத் தோப்பில் கமண்டலாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் கட்டுவதற்கான திட்டம் ஒன்று நடப்பாண்டில் மேற்கொள்ளப்படவிருக்கிறது. இத் திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு ரூ. 355 இலட்சமாகும். இத்திட்டத்தின் மூலம் 1,692 எக்கர் நிலம் புதிதாகப் பாசனம் பெறும். மேலும், ஏற்கெனவே பாசனம் பெறும் 10,386 ஏக்கர் நிலம் இத்திட்டத்தின் மூலம் இடையறுப் பாசனம் பெறும்.

## சிறப்புச் சிறு பாசனத் திட்டம்

இம் மாநிலத்தின் வறட்சிப் பாங்கான மாவட்டங்களில் ஏரிப் பாசனம் முக்கிய இடம் பெறுகிறது. சில நூறு ஏக்கர் பரப்பளவு வரையான சிறு நிலப் பகுதிகளுக்குப் பாசன வசதி அளிப்பதற்கென்று காட்டாற்று வெள்ளத்திற்கும், திடீர் வெள்ளத்திற்கும் தடை போட்டு நீரைத் தேக்க சிறு பாசனப் பணிகள் மேற்கொள்ளுதல், நிலநீர் மட்டத்தை வலுப்படுத்தவும், தற்போது பாசனம் பெற்று வரும் நிலங்களுக்குத் தொடர்ந்து பாசன வசதி அளிப்பதுடன் சிறிய பாசன விஸ்தரிப்பு அமைப்புகளை ஏற்படுத்தவும், புதிய ஏரிகளையும், கசிவு நீர்க் குட்டைகளையும் அமைத்தல் ஆகியவை இம் மாநிலத்தில் நீர்வளப் பற்றுக்குறைப் பிரச்சினையினல் ஏற்பட்டுள்ள இடையூறுகளைக் களைய நாம் மேற்கொண்டுள்ள திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும். இத் திட்டத்தில் சாத்தியக் கூறுகள், வரையறுத்த அளவுக்கே உள்ளன. மேன்மேலும் கூடுதலான பாசன வசதிகள் பெற, நீரை உரிய அளவுக்கே பயன்படுத்துவதில் மாநில அரசு தொடர்ந்து கவனம் செலுத்த வேண்டும்.

சிறப்புச் சிறு பாசனத் திட்டத்தை மதிப்பாய்வு செய்ததில், தொழில்நுட்ப, பொருளாதார குறைபாடுகள் இருப்பதாகத் தெரிய வந்துள்ளது. இந்தக் குறைபாடுகள், இத்தகைய திட்

## சென்னை மாநகருக்கு கிருஷ்ணு ஆற்று நீர்!

மகாராட்டிரம், ஆந்திரப் பிரதேசம், கருநாடகம் ஆகிய மாநிலங்கள் ஒவ்வொன்றும் கிருஷ்ணு ஆற்று நீரில் தங்களுக்குக் கிடைக்கும் பங்கிலிருந்து 500 கோடி கன அடி நீரை 14-4-1976 அன்று செய்து கொண்ட முறையான ஒப்பந்தத்தின்கீழ் சென்னை மாநகர குடிநீர் தேவைக்குத் தருவதாக ஒப்புக் கொண்டுள்ளன. இத்திட்டம் பற்றிய விரிவான விவரங்களைத் தயாரிக்க 145 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் ஸ்ரீசைலத்திலிருந்து பூண்டி நீர்த் தேக்கத்திற்குத் திறந்த கால்வாய் மூலம் தண்ணீர் கொண்டு வருவதற்கான திட்டத்தின் தொடக்க அறிக்கையைத் தமிழக அரசு ஏற்கெனவே அனுப்பியுள்ளது. மகாராட்டிரம், கருநாடக மாநில அரசுகள், நீர் வரும் வழி முழுவதும் மூடப்பட்ட கால்வாய் மூலம் நீர் வழங்குவதற்கான மாற்றுச் செயற் குறிப்புகளைக் கொடுத்துள்ளன. திறந்த கால்வாயில் நீர் விடப்படும் நேர்வில், இக்கால்வாயின் நீர் ஆந்திரப் பிரதேசத்தில் பாசனத்திற்குப் பயன்படுத்தப்படக் கூடாது என்ற உறுதியை இந்த இரு மாநிலங்களும் கோருகின்றன.

சென்னை மாநகரின் அதிகமான நீர்த் தேவையைக் கருத்தில் கொண்டு, இப்பிரச்சினைக்குக் கூடிய விரைவில் தீர்வுகாண மத்திய அரசுடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது. ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ளவும் இத்திட்டத்திற்கு விரைவில் ஒப்புதல் பெறவும் இவ்வரசு முயற்சி செய்யும்.

(ஆதாரம் : பாசன-பொதுப்பணித் துறைக்கான மானியக் கோரிக்கைகள் 1977-78)

டங்களினுல் ஏற்படும் உற்பத்தித் திறனளவைக் கணிசமான அளவிற்குப் பாதித்துள்ளது. இந்தத் திட்டங்களுக்கு நாம் செய்யும் முதலீடுகள் ஆதாய மிக்கவையாக இருக்க வேண்டும். திட்டங்கள் நீரியல் வகையில் நம்பத்தக்கவையாகவும் இருக்க வேண்டும். திட்டப் பணிகள் உரிய காலத்தில் முடிக்கப்படுமாறு பணிகளை நெறிபடுத்த வேண்டியதாகவும் உள்ளது. திட்டத்திற்காகும் செலவுகளைக் கட்டுப்படுத்த வேண்டியுள்ளன. பாசனத் திட்டங்களினுல் ஏற்படும் நீர்வளம், அதன் வளர்ச்சியும் பயன்படுத்தும் முறையும் மறு ஆய்வு செய்யப்படவேண்டும்.

இத்தகைய பிரச்சினைகளை ஆழ்ந்து ஆராய்ந்து செயல் திட்டத்தை வகுப்பதற்காக அமைக்கப்பட்ட பணிக் குழுவின் பரிவுரைகளைக் கருத்தில் கொண்டு, இந்தச் சிறு பாசனத் திட்டத்திற்கு இயல்பான சிறப்பும், பயன்முறையும் அளிக்க அரசு கருதியுள்ளது. உபரி நீர் அளவை தீர்மானிப்பதற்காக நீர்ப் படுகை வாரியாக முறையான ஆய்வுகள் நிறைவேற்றப்படும். பயன்படுத்தப்பட வேண்டிய கூடுதல் நீரளவுக்கான ஆண்டுத் திட்ட இலக்குகள், முடிக்கப்பட வேண்டிய திட்டப்பணிகள், பாசனம் பெறும் புதிய பகுதி ஆகியவை யாவும் திட்டமிட்டு வகுக்கப்படும். பொருளாதார சாத்தியக்கூறுகளை நிர்ணயிக்கும் அளவு கோல்களை மாற்றியமைக்கும் திட்டமும் பரிசீலனையில் உள்ளது. பின் தங்கிய பகுதிகளுக்கும் வறட்சியினுல் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கும் இவ்விதிகளைத் தளர்த்துவதற்கான ஏற்பாடும் செய்யப்படும். இத்திட்டப் பணிகள் பெரும்பாலும் சுமார் இரண்டாண்டுக் கால அளவுக்குள் முடிப்பதற்கும் முயற்சி எடுத்துக் கொள்ளப்படும். 1975-76, 1976-77 ஆண்டு ஒவ்வொன்றுக்கும் ரூ. 350 இலட்சம் ஒதுக்கியதற்கு மாருக, இவ்வாண்டில் சிறப்புச் சிறு பாசனத் திட்டப் பணிகளுக்கு ரூ. 450 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. பல ஆண்டுகளாக இழு பறியாக இருந்து வரும் எஞ்சிய திட்டங்கள் இவ்வாண்டில் முடிக்கப்படக் கூடும்.

### சிறு பாசன அமைப்புக்களை காலத்திற்கேற்றவாறு மாற்றி அமைத்தல் மற்றும் புதுப்பித்தல்

ஏரிப்பாசன அமைப்புக்களின் கீழ் வரும் ஆயக்கட்டுகளைக் காலத்திற்கு ஏற்றவாறு மாற்றி அமைக்கும் பணி இப்போது எடுத்துக் கொள்ளப்பட விருக்கிறது. இது வெகு காலத்திற்கு முன்னமேயே எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கவேண்டும். தென்னுர்க்காடு மாவட்டத்தில் வீராணம் ஏரியைச் சேர்ந்த ஆயக்கட்டின் ஒரு பகுதியைக் காலத்திற்கு ஏற்றவாறு மாற்றியமைக்கும் முன்னேடித் திட்டம் இவ்வாண்டில் ரூ. 10 இலட்சம் செலவில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

### பாசன வாயில்கள் பராமரிப்பு

புதிய பாசனத் திட்டங்களைத் தொடங்கி, புதிய பாசன வளத்தை உருவாக்குவதன் மூலம் கிட்டிய நன்மையானது, நிலையான உறுதியான பாசன வாயில்களைப் புறக்கணித்ததன் காரணமாக, வீணுகும் கட்டத்தில் இருந்தது. குறிப்பாக, முறைப்படுத்தப்படாத ஏற்பாட்டின் கீழ் வரும் பாசன வாயில் குறித்து எவ்வித சிரத்தையும் காட்டப்படவில்லை. சிறு பாசன வாயில்களைப் பழுது பார்ப்பதற்கென மேற்கொள்ளப்பட்ட ஒரு திட்டமாக, விரைவு படுத்தப்பட்ட சிறு பாசனத் திட்டம் தொடங்கப்பட்டது. விரைவு படுத்தப்பட்ட சிறு பாசனத் திற்கென செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் மொத்தத்தில் போதுமானவையாக இல்லை. பாசன வாயில்கள் தனிப்பட்ட முறையில் பழுது பார்க்கப்படுவதற்கென எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. சிறு பழுதுபார்ப்புப் பணிகளுக்கு ஒப்பான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சிறு பாசனத் திட்டத்தை ஒருங்கிணைந்த முறையில் ஆய்வு செய்வதற்கு அரசினுல் அமைக்கப்பட்ட பணிக் குழுவின் பரிவுரைகளின் அடிப்படையில் மாநிலம் முழுவதும் வடிநிலம் வாரியாக, பாசன ஏற்பாடுகள் பராமரிப்புக்காக, விரிவான வழி முறைகள், நடைமுறைகள், மதிப்பீடுகள் ஆகியவற்றை வகுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள பாசன வாயில்கள் குறித்த விவர அட்டவணை ஒன்று தயாரிக்கப்பட்டு, வரிசைக் கிரமமாக ஆண்டு தோறும் என்னென்ன பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்வது என்பது குறித்த பட்டியல் ஒன்றும் தயாரிக்கப்படும். வழக்கமான பராமரிப்புப் பழுது பார்ப்புப் பணிகளுக்கான வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடுகள் அதிகரிக்கப்பட வேண்டியுள்ளன. பாசன எற்பாடுகளைப் பாதுகாப்பது மட்டுமின்றி, அவற்றைப் பேணி வரச் செய்வதும் முக்கிய

## பணிபுரியும் பொறியாளர்கள் பட்ட மேற்படிப்புப் பயிலுவதற்கான வசதிகள்!

தமிழ்நாட்டுப் பொறியாளர்கள் ஆற்றலில் இந்நாட்டிலுள்ள எவருக்கும் சளைத்தவர்களல்ல. 1976-ஆம் ஆண்டின், பெரு வெள்ளம் போன்ற உயிர், உடைமைகளைக் காக்க வேண்டிய அவசரம் மற்றும் இக்கட்டான நிலைமைகளில் அவர்களின் திறமையின், உயர் தரத்தினைக் காண முடிகிறது. பணியில் உள்ள போதே அவர்கள் மேற்கொண்டு படிப்பதற்கான வாய்ப்புக்கள், அவர்களுடைய திறமையினை மிகுதிப்படுத்துவதாக அமையும். நடப்பாண்டில், பொதுப் பணித்துறையைச் சேர்ந்த ஐந்து உதவி நிர்வாகப்பொறியாளர்கள், மூன்று உதவிப் பொறியாளர்கள், மேலும் நெடுஞ்சாலை — கிராமப் பணிகள் துறையைச் சேர்ந்த இரண்டு உதவிக் கோட்டப் பொறியாளர்கள், இரண்டு உதவிப் பொறியாளர்கள் ஆகியோரை அரசுச் செலவில் பட்ட மேற்படிப்புப் பயிலும் பொருட்டு, அனுப்பி வைக்க அரசு திட்டமிட்டுள்ளது. பொறியியல் துறைக்குத் திறமையான தொழில் நுட்பப் பணியாளர்கள் அச்சாணி போன்றவர் ஆவர். *

மான அம்சங்கள் என்ற வகையில் முன்னெச்சரிக்கை பராமரிப்புப் பணி என்னும் கோட்பாட்டை அறிமுகப்படுத்த வேண்டியுள்ளது. அத்தகைய பழுது பார்ப்புப் பணிகள் உடல் உழைப்பை முக்கியமாகக் கொண்டவை. இந்தப் பழுதுபார்ப்புப் பணியில் பெரும் அளவு மண் வேலையாகும்; இதன் மூலம், கோடைக் காலத்தில் உள்ளூர் மக்களுக்கு ஆதாயமான ஆக்க பூர்வமான வேலைவாய்ப்பு அளிக்கும் பெருந் திட்டமொன்றைச் செயல்படுத்தும் வாய்ப்புக் கிட்டுகிறது. ஒவ்வோராண்டும் ஏப்ரல் முதல் தேதியன்று பழுது பார்ப்புப் பணிகளைத் தொடங்கலாம். இதனால் உள்ளூர் வாசிகள் தங்களுக்கு வேலையற்ற நாட்களில் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள இயலும். நிலப் படை ஒன்றை அமைப்பதன் மூலம் கோடைக்கால வேலை வாய்ப்புகள் விரிவுபடுத்தப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. பாசன வாயில்கள் பராமரிப்புப் பணி இத்திட்டத்துடன் சேர்த்துக் கொள்ளப்படும்.



**கேரளத்தில் மேற்கு நோக்கி ஓடி, யாருக்கும் பயனின்றி அரபிக் கடலில் கலக்கும் ஆற்று நீரைத் தமிழகத்திற்குத் திருப்பிவிடுவதற்கான வாய்ப்பு பற்றி ஆராய, தொழில் நுட்பக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.**

## மேற்கு நோக்கிச் செல்லும் ஆறுகளைத் திருப்பிவிடுதல்

நம் மாநிலத்திற்கு வெளியே, உபரியாக நீருள்ள ஆற்றுப் படுகைகளிலிருந்து, நீரை நமது மாநிலத்திற்குத் திருப்பி விடுவதனால் மட்டுமே இனி இம் மாநிலத்தில் பெரும் பாசனத் திட்டங்களை நிறைவேற்ற முடியும். இதற்கு எடுத்துக் காட்டாக 19-ஆம் நூற்றாண்டில் முடிக்கப்பட்ட பெரியாறு திட்டம் அண்மை ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பரம்பிக் குளம்—ஆளியாறு திட்டம் ஆகியவற்றைக் கூறலாம். **இந்த அரசு பரஸ்பர ஒத்துழைப்பு, நல்ல எண்ணம் ஆகியவற்றின் அடிப்படையில் அண்டை மாநிலங்களுடன் இரு சாராரும் பயனுறும் வகையில் உறவு வைத்துக் கொள்ளப் பாடுபடும்.**

கேரளத்தில் மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளில் போதுமான அளவு உபரி நீர் இருந்தும், அந் நீர் பெரிதும் பயன்படுத்தப்பெறாமலேயே அரபிக் கடலில் சென்று கலக்கின்றது. இந்த உபரி நீரின் ஒரு பகுதி பயனுள்ள முறையில் கிழக்கு முகமாகத் திருப்பப்பட்டால், தமிழ் நாட்டில் திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களின் வறண்ட பகுதிகள் நீர்ப் பாசன வசதி பெறக் கூடும். அதே சமயம் பாசன, மின்சார உற்பத்தித் திட்டங்களினால் கேரள மாநிலமும் பயனடையலாம். கேரள மாநிலத்திலுள்ள கீழ்க்காணும் ஆறுகளிலிருந்து சுமார் 8,200 கோடி கன அடி நீரைத் தமிழ் நாட்டிற்குள் திருப்பி விட முடியுமென்று இவ் வரசு திட்டமிட்டுள்ளது.

(1) பாண்டியாறு-புன்னப்புழா-மோயாறு.

(2) சோழத்திப் புழா.

(3) பங்கி ஹல்லா.

(4) ஆனமலையாறு.

(5) இடுக்கி-கல்லாறு.

(6) பாம்பாறு.

(7) அச்சன் கோயிலாறு.

(8) கல்லடா-அத்திங்கல்-கர்ணமானு.

1976, டிசம்பர்த் திங்களில் மத்திய அரசு, கேரளம், கருநாடகம் ஆகிய மாநிலங்களில் மேற்காகப் பாயும் ஆறுகளின் உபரி நீரைக் கிழக்கு முகமாகத் திருப்புவதற்கான வாய்ப்பு பற்றி விரிவாக ஆராயத் தொழில் நுட்பக் குழுவொன்றை நியமித்தது. இக் குழுவில், தமிழ் நாடு, கேரளம், கருநாடகம் ஆகிய மூன்று மாநிலங்களின் தலைமைப் பொறியாளர்கள் இருக்கிறார்கள். மத்திய நீர் ஆணைக் குழுவின் உறுப்பினர் இதன் அமைப்பாளராவார். மத்திய நீர் ஆணைக் குழுவின் இயக்குநர் இதன் செயலாளர் ஆவார். இக் குழுவின் ஆய்வு வரம்பு பற்றி பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இது குறித்து விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் பற்றி மத்திய அரசுக்கு வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

## காவிரி நீர்ப் பிரச்சினை!

1976-ஆம் ஆண்டு, ஆகஸ்டு திங்களில் மாநிலங்களுக்கிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது காவிரி நீர்ப் பிரச்சினையில் ஏற்படும் ஓர் ஒப்பந்தமானது, ஆற்றுப்படுகையில், தற்போதுள்ளபாசனப் பகுதிகளுக்கு, இயல்பான ஓர் ஆண்டில்தேவைப்படும் நீரை வழங்க உத்தரவாதம் அளிப்பதாக இருக்க வேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது. தற்போதுள்ள பாசனப் பகுதிகளைப் பாதுகாக்கும் திட்டமொன்றை உருவாக்க, மத்திய நீர் ஆணைக் குழு உறுப்பினரின் தலைமையின் கீழ், மூன்று மாநிலங்களின் தொழில்நுட்ப அதிகாரிகள் அடங்கிய குழுவொன்றை, மத்திய அரசு அமைத்துள்ளது.

அமைக்கக் கருதியுள்ள காவிரிப் பள்ளத் தாக்கு அதிகார மன்றத்திற்கான வரைவு அமைப்பினை வகுக்கும் பொருட்டு மூன்று மாநில அரசுகளைச் சேர்ந்த பொதுப்பணித் துறைச் செயலாளர்கள், மத்திய நீர் ஆணைக் குழுவின் பிரதிநிதி ஆகியோர் அடங்கிய மற்றொரு குழு அமைக்கப்பட்டு உள்ளது. காவிரி நீர்ப் பங்கீடு செய்வது குறித்தத் திட்டம் எதிலும், ஏற்கெனவே உள்ள பாசனப் பகுதிகளுக்கு முழுப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் என்பதனைத் தமிழ் நாடு அரசு வலியுறுத்தியுள்ளது.

இப்பிரச்சினைக் குறித்து நீண்ட கால ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்படும் வரை, வேளாண்மைக்கான உடனடித் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் போதுமான அளவு நீர் அணையிலிருந்து திறந்து விடப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும்.

1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளவாறு நீர் வழங்குவதை கருநாடக அரசு 1974 ஆகஸ்டு முதல் முறைப்படுத்தவில்லை. 1976-77-ஆம் ஆண்டில், காவிரி நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் பாதகமான பருவநிலை காரணமாகவும், கருநாடக அரசு நீரைத் தேக்கிவைத்தாலும் மேட்டூர் அணைக்கு நீர் வருவதில் கடும் பற்றுக்குறை நிலவியது. கல்லணைக் கால்வாய், மேட்டூர் கால்வாய்கள், புதிய கட்டளை உயர் மட்டக் கால்வாய், புள்ளம்பாடிக் கால்வாய் ஆகியவற்றைப் பாசனத்திற்காகத் திறந்துவிட இயலவில்லை.

நடப்பாண்டு இயல்பாக அமையும் என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. மேட்டூர் நீர்த் தேக்கம் ஜூலைத் திங்கள் 15ஆம் நாளன்று திறந்து விடப்பட்டது. தமிழ்நாடு, கருநாடகம் ஆகிய மாநிலங்களுக்கிடையே பரஸ்பரம் ஒருவருக்கொருவர் நன்கு புரிந்து கொண்டு உதவி செய்யும் நல்ல எண்ணம் காரணமாக நாம் போதுமான அளவு நீரைப் பெற முடிந்தது. இந் நல்லெண்ணத்தை மேலும் மேலும் வளர்ப்பதே இவ்வரசின் முயற்சியாக இருக்கும்.

[தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவையில் 19-8-77 அன்று, பாசன-பொதுப் பணித் துறைக்கான மானியக் கோரிக்கைகளிலிருந்து தொகுக்கப்பட்டது].

## பொதுப்பணித் துறையின் கட்டடம் கட்டும் பணிகள்

தமிழ்நாடு மாநிலத்தில் அரசுக் கட்டடப் பணிகள் அனைத்தையும் நிறைவேற்றும் முக்கியப் பொறுப்பு பொது பணித்துறைக் கட்டடப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவை தவிர, வரையறுக்கப்பட்டுள்ள சென்டேஜ் கட்டணத்தைச் செலுத்துவதன்பேரில்,நகராட்சிகள், மாவட்ட விற்பனைச் சங்கங்கள் மற்றும் அரசு சார்ந்த ஏனைய நிறுவனங்கள் ஆகியவற்றிற்கான சில ஒப்படைப்பணிகளும் இப்பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றன். இந்திய அரசு சார்பில், தொழிலாளர் காப்புறுதித் திட்டங்கள், தொலைக் காட்சிக் கூடங்கள் இவை போன்ற யாவும், பொதுப் பணித் துறையால் நிறைவேற்றப்பட்டன. ஆய்வு மாளிகைகள், சுற்றுப் பயண இல்லங்கள் முதலியன யாவும் பொதுப் பணித் துறையின் பொறுப்பில் உள்ளன. மொத்தம் நான்கு இலட்சம் ரூபாய் செலவில் தருமபுரியில் புதிய சுற்றுப்பயண இல்லம் கட்டுதல், பொதுப்பணித் துறைத் தலைமைப் பொறியாளர் அலுவலக வளாகத்தினுள் கூடுதல், அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல், செங்கல்பட்டு மாவட்டம் மேற்பார்வை பொறியாளருக்கான அலுவலகக் கட்டடம் ஒன்று கட்டுதல் ஆகிய பணிகளை இந்த ஆண்டில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

## வெள்ளம் ஏற்படாமல் தடுப்பது பற்றிய ஆய்வு...!


1976-ம் ஆண்டு நவம்பர்-டிசம்பர் திங்களில், சென்னை மாநகர் வரலாறு காணாத வகையில் வெள்ளத்திற்குள்ளாகியது. இப்பெருவெள்ளம் காரணமாகச் சொத்துக்களுக்கு அதிக சேதம் ஏற்பட்டதுடன் மக்கள் சொல்லவொண்ணாத் துன்பத்திற்கு ஆளாயினர். இப்பெருவெள்ளத்திற்கான காரணங்களை ஆய்வு செய்யவும் இத்தகைய கொடிய நிலைமை மீண்டும் ஏற்படாமல் தடுப்பதற்கான வழிவகைகள் குறித்தும் பரிவுரைகள் செய்யவும் குழுக்கள் அமைக்கப்பட்டன. இக்குழுக்களின் பரிவுரைகளைச் செயற்படுத்துவது பற்றி உரியவாறு பரிசீலனை செய்யும். *




முதலமைச்சர் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக புதுடில்லி சென்றிருந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள், மேதகு குடியரசுத் தலைவர் திரு சஞ்சீவரெட்டி அவர்களைச் சந்தித்து, மாலை அணிவித்து, வாழ்த்துத் தெரிவித்தார். அதன்பின், ''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் முன்னாள் முதலமைச்சர் திரு கு. காமராஜ் அவர்களின் திருஉருவப் படத்தைத் திறந்துவைக்க வாருங்கள்'' என்று குடியரசுத் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொண்டார். மாண்புமிகு தமிழக பொதுப்பணித்துறை அமைச்சர் திரு ச. இராமச்சந்திரன் அவர்கள் உடன் உள்ளார்.

## படமும் செய்தியும்

இந்திய விடுதலை நாள் விழாவின் ஒரு அங்கமாக 15-8-1977 அன்று, தமிழ்நாடு அரசின் செய்தி-மக்கள் தொடர்புத்துறையால், சென்னை இராஜாஜி மண்டபத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடத்தப்பெற்றது. மாண்புமிகு தமிழ்நாடு கல்வி அமைச்சர் திரு சி. அரங்கநாயகம் அவர்கள் அப்பொதுக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளும் அக்கூட்டத்தில் உரையாற்றினார்கள்.





மேதகு இந்தியாவின் குடியரசுத் தலைவர் திரு நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்கள் 17-8-1977 அன்று திருப்பதி செல்லும் வழியில் மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு வருகைதந்தார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள், குடியரசுத் தலைவர் அவர்களை வரவேற்றார். மேதகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களும் அருகில் உள்ளார்.


திரு யோஷியோ சகூரா உச்சி என்ற ஜப்பான் நாட்டு எம்.பி., அவர்கள் தலைமையில், சென்னைக்கு வருகை தந்த ஜப்பான் நாட்டு நாடாளுமன்றத்தின் மூவர் தூதுக்குழுவினர், 17-8-1977 அன்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்களைச் சந்தித்து, தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர்.





ஜப்பானிய நாடாளுமன்றத்தின் மூவர் தூதுக்குழுவிற்கு, 17-8-1977 அன்று, ஹோட்டல் சோழாவில், அரசுச் சார்பில் அளிக்கப்பட்ட விருந்தின்போது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் தஞ்சாவூர்த் தட்டுகளைப் பரிசாக வழங்கினுர்.


மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு சஞ்சீவ ரெட்டி அவர்கள், 18-8-1977 அன்று, திருப்பதியிலிருந்து சென்னைக்கு வருகை தந்தபோது, மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் மாலை அணிவித்து வரவேற்றுர்.





மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு சஞ்சீவ ரெட்டி அவர்கள், 18-8-1977 அன்று, சென்னை ராஜ்பவனில் மாங்கன்று ஒன்றை நட்டார்.

சென்னை ராஜ்பவனில், அண்ணல் காந்தியடிகள் திருஉருவப்படத்தை, 18-8-1977 அன்று மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு சஞ்சீவரெட்டி அவர்கள் திறந்து வைத்தார். மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்களும், மத்திய அரசின் எரிபொருள் அமைச்சர் திரு பா. ராமச்சந்திரன் அவர்களும் உடன் உள்ளனர்.





# மக்களின் உடல் நலம் காத்திடுவோம்!

மாண்புமிகு
முதலமைச்சர்
திரு எம்.ஜி.ஆர்.



மக்களின் சிறந்த உடல் நலமே, எல்லாப் பொதுச் சுகாதாரத் திட்டங்களின் நோக்கமாகும். இந்தத் திட்டங்களைச் செவ்வனே செயற்படுத்துவதற்கு, சமுதாயத்தில் எந்த அளவுக்கு நோய்கள் பரவியுள்ளன என்கிற தகவல் மிகவும் இன்றியமையாததாகும். மரணம், நோய்ப் பரவும் நிலை குறித்து மட்டுமே அறிவது போதுமானதல்ல. உடல் நலத்திற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள பற்பல திட்டங்களின் மூலம் எந்த அளவுக்கு மக்கள் பயனடைந்துள்ளனர் என்பதை அறிந்து கொள்ள வேண்டியதும் அவசியமாகும். மேலும் மக்கள் தொகையில் 70 சதவிகிதம் கிராம மக்கள் என்பதால் அவர்கள் சிறந்த முறையில் கவனிக்கப்பட வேண்டும். இந் நோக்கத்தை எய்தும் பொருட்டு, அரசு பல ஆண்டுகளாகவே வெவ்வேறு மக்கள் நலப்பணிகளை மேற்கொண்டுள்ளது.

தொற்று நோய்த் தடுப்பு, கட்டுப்பாடு, தாய்-சேய் நலன், மக்கள் ஊட்டச் சத்துத் தரத்தை மேம்படுத்தல் ஆகியவை உட்பட சமூகச் சுகாதார நலனுக்கு வகை செய்தல், போதுமான அளவுக்குச் சுகாதாரக் கல்விப் பணிக்கு வகை செய்தல் உணவுக் கலப்படத்தைத் தடுத்தல், பிறப்பு-இறப்புப் புள்ளி விவரங்களைச் சேகரிப்பதை மேம்படுத்தல், ஆகியவை இத்திட்டத்தின் முக்கியக் கூறுகளாகும்.

மாநிலம் முழுவதும் பரந்து அமைந்துள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்கள், துணை நிலையங்கள் மூலம் சுகாதார நலப் பணிகள் அளிக்கப்படுகின்றன.

## ஆரம்பச் சுகாதார நிலையங்கள்

ஆரம்பச் சுகாதார நிலையம் கிராமக் குடும்ப நலப் பிரிவு, கிராமப் பகுதிகளில் அடிப்படை மருத்துவப் பணியை மேற்கொள்ளும் முக்கியமான பயனுள்ள அமைப்பு ஆகும். சுமார் 130 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் மூன்று மருத்துவ அதிகாரிகள் உள்ளனர். எஞ்சிய ஆரம்பச் சுகாதார நிலையங்களில் இரண்டு மருத்துவ அதிகாரிகள் உள்ளனர். அடிப்படை மருத்துவ வசதிகளை அளிப்பதற்காக மருத்துவ அதிகாரிகளின் இயங்கும் குழு இரண்டு குறைந்தது வாரத்திற்கொரு முறையாவது கிராமங்களுக்குச் செல்வது இயலும் பொருட்டு ஆரம்பச் சுகாதார நிலையங்கள்

சிலவற்றின் மூன்றுவது மருத்துவ அதிகாரி ஒருவரது பதவி ஏற் படுத்தப்பட்டுள்ளது.

383 ஆரம்பச் சுகாதார நிலையங்களுள் 192 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு மருந்தகக் கட்டடங்களுக்கும் பணியாளர் குடியிருப்புகளுக்கும் வகை செய்யப் பட்டுள்ளது. மற்றுமொரு ஆரம்பச் சுகாதார நிலையப் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 190 தொடக்கச் சுகாதார நிலையப் பணியாளர்களுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்கு ரூ. 4.37 கோடி செலவாகும். அதிகச் செலவை முன்னிட்டு, கட்டடங்கள் கட்டும் பணி படிப்படியான திட்டம் மூலம் மேற்கொள்ளப்படும்.

**ஆரம்பச் சுகாதார நிலையங்கள், துணை நிலையங்கள் ஆகியவற்றுக்கு மருந்துகள்**

அவசியமான, உயிரைக் காப்பாற்றக் கூடிய மருந்துகளைப் போதுமான அளவு வைத்து வரும் பொருட்டு, ஒவ்வொரு ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கும் மருந்துகள் வாங்குவதற்காக ஏற்கெனவே கிடைத்து வரும் ஆண்டு நிதி ஒதுக்கம் ரூ. 10,000 ஆகும். இது ரூ. 12,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. கிராம மக்களின் மருத்துவத் தேவைகளை உரிய நேரத்தில் நிறைவு செய்வதுதான் இதன் நோக்கம். கூடுதல் நிதி ஒதுக்கமான ரூ. 2,000 எல்லா ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கும் குறைந்த அளவுத் தேவைகள் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டு உள்ளது. 1977-78ல் இந்த நிதி ஒதுக்கத்தை ரூ. 12,000-த்திலிருந்து ரூ.14,000-க்கு உயர்த்துவது என்ற ஒரு செயற்குறிப்பும் உள்ளது.

துணை நிலையங்களுக்கு மருந்துகள் வாங்குவதற்காக ரூ. 600 ஏற்கெனவே கிடைத்து வருகிறது. தற்போதுள்ள எல்லாத் துணை நிலையங்களுக்கும் குறைந்த அளவு தேவைகள் திட்டத்தின் கீழ் ஆண்டு ஒன்றுக்கு துணை நிலையம் ஒன்றுக்கு ரூ. 200 கூடுதல் நிதி ஒதுக்கமும் அனுமதிக்கப்பட்டது. இக் கூடுதல் நிதி ஒதுக்கம் 1977-78ஆம் ஆண்டிலும் கிடைக்கும். மேலும், பல நோக்கு சுகாதார ஊழியர்கள் திட்டம் செயலில் உள்ள தென் ஆர்க்காடு, மதுரை, கன்னியாகுமரி, சேலம், செங்கல்பட்டு ஆகிய ஐந்து மாவட்டங்களில் செயல்படும் துணை நிலையங்களுக்கு மருந்துகளை வாங்குவதற்கு ரூ. 2,0000 நிதி ஒதுக்கம் செய்ய அரசு அனுமதியளித்துள்ளது.

**மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

நீலகிரி மாவட்ட ஒருங்கிணைந்த மேம்பாட்டின் கீழ் மருத்துவ நலனுக்கு வகை செய்வதற்காக இத்திட்டத்தின் கீழ் கூடுதல் ஆரம்பச் சுகாதார நிலையங்களை அமைக்கக் கருதப்பட்டுள்ளது. உதகமண்டலம் வட்டாரத்திற்காக தூனேரியில் 1976ல் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றும், கூடலூர் வட்டாரத்திற்காக 1977ல் நிலக்கோட்டையில் மற்றொரு கூடுதல் ஆரம்பச் சுகாதார நிலையமும் அமைக்கப்பட்டுள்ளன. இவ்விரு கூடுதல் ஆரம்பச் சுகாதார நிலையங்களும் தேவையான பணியாளர்களுடன் செயல்பட்டு வருகின்றன. இது, மத்தியத் துறைத் திட்டமாகும்.

காக, சேலம் மாவட்டம், கொல்லி மலை வட்டாரத்திலுள்ள வாழவந்த நாடு ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு பரிசோதனைக்கூடம் ஒன்றிற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

**சிறிய சுகாதார நிலையங்கள்**
(Mini Health Centres)

இது, மத்திய அரசு, மாநில அரசு, தொண்டு நிறுவனம் ஆகியவற்றிடமிருந்து 1:1:1 என்ற விகிதாச்சாரத்தில் பெறும் நிதியுதவியுடன், தொண்டு நிறுவனங்கள் கிராமங்களில் நோய்த் தடுப்பு, நோய்த் தீர்ப்பு, நோய்க்குப் பின்னர் உடல் நலம் பேணுதல் ஆகியவை அடங்கிய சுகாதார நல அடங்கல் பணிகள் வழங்கும் ஒரு திட்டமாகும்.



மலைவாழ் பழங்குடி மக்களுக்கு மருத்துவ வசதி அளிப்பதற்காக, நடப்பாண்டில் ரூபாய் 20.26 இலட்சம் செலவிடப்படும்.

**பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்**

பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் சேலம், வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு (கல்ராயன் குன்றுகள்), தருமபுரி, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் பழங்குடியினர் பகுதிகளில் வசித்து வரும் பழங்குடியினரது சுகாதார நிலையை உயர்த்தும் பொருட்டு, 1977-78ஆம் ஆண்டில் செயற்படுத்துவதற்காக ரூ. 20.26 இலட்சம் செலவில் சுகாதார நல அடங்கல் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு உள்ளது. பழங்குடியினரில் யார் யாருக்கு மேக நோய் கண்டுள்ளது என்பதைக் கண்டுபிடிப்பதற்

தமது உடல் நலனைப்பார்த்துக் கொள்ள வேண்டுமென்று விரும்பும் எவரும் சிறிய ஆரம்பச் சுகாதார நிலையத்தில் சிகிச்சைப்பெறுவதே இத்திட்டத்தின் நோக்கம் ஆகும். இச் சிறிய ஆரம்பச் சுகாதார நிலையங்கள், சாதி, மத பேதமில்லாமல் (சமயச் சார்பற்ற அடிப்படையில்) 1,000 குடும்பங்களுக்கு அல்லது 5,000 பேருக்கு சுகாதார நல அடங்கல் பணிகளை நல்கும். சிறிய ஆரம்பச் சுகாதார நிலையம், அருகிலுள்ள வங்கியில் ரூ. 3,000 வைப்பீடு செய்ய வேண்டும். இதற்குச் சமமான தொகையை மாநில, மத்திய அரசுகள் வழங்கும்.

மொத்தச் செலவில் 1/3 பாகத்தை ஏற்பதற்கு இந்திய அரசு



இசைவு அளிக்கும் வரையில், சிறிய ஆரம்பச் சுகாதார நிலையம் ஒன்றுக்கு ஆண்டு ஒன்றுக்கான மொத்தச் செலவு ரூ. 18,000-ல் பாதியை ஏற்க தமிழ்நாடு அரசு ஒப்புக் கொண்டுள்ளது. அத்தகைய சிறிய சுகாதார நிலையங்கள் 34-க்கு அரசு அனுமதியும் வழங்கியுள்ளது. இந்நிலையங்கள் 1-6-77 லிருந்து செயல்படத் தொடங்கியுள்ளன. இது தவிர, முதல் தொகுதியான 34 சிறிய ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்குப் பொருந்தும் வரையறைகள், நிபந்தனைகளின் அடிப்படையில் மேலும் 20 ஆரம்பச் சுகாதார நிலையங்களை நடத்த வேறு சில தொண்டு நிறுவனங்களும் முன் வந்துள்ளன. இது குறித்து அரசுக்காகும் கூடுதல் செலவு (அதாவது மொத்தச் செலவில் 50 சதவீதம்) ரூ. 1.80 இலட்சமாகும்.

**மாவட்ட மேம்பாட்டுச் செய்முறை விளக்கத் திட்டம்**

மதுரை மாவட்டம் திண்டுக்கல் கோட்டத்தில் (பத்து வட்டாரங்கள் அடங்கியது ஒருங்கிணைந்த அடங்கல் முனைப்புச் சுகாதாரப் பணிகளை நல்குவதற்காக மாவட்ட மேம்பாட்டுச் செய்முறை விளக்கத் திட்டத்தைச் செயற்படுத்த அரசு அனுமதித்துள்ளது. காந்தி கிராமத்திலுள்ள கிராம மருத்துவ வசதி நல நிலையம் இத் திட்டத்தை செயலாற்ற எடுத்துக் கொண்டுள்ளது.

**சுகாதாரப் பணியாளர் பல்நோக்குத் திட்டம்**

செங்கல்பட்டு, தென் ஆர்க்காடு, மதுரை, சேலம், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் சுகாதாரப் பணியாளர் பல்நோக்குத் திட்டத்தைச் செயற்படுத்த அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத் திட்டம், கிராமப் பகுதிகளில் நோய்த் தடுப்பு, நோய்த் தீர்வு, சுகாதாரப் பணிகளைச் செயற்படுத்துவது சம்பந்தப்பட்டதாகும். சாதாரண நோய்களுக்குச் சிகிச்சை அளிப்பது உட்பட, சுகாதார நல அடங்கல் பணிகளை நல்க ஒவ்வொரு 5,000 பேருக்கும் இரண்டு பேர் (ஆடவர் ஒருவர், மகளிர் ஒருவர்) நியமிக்கப்படுவர். பயிற்சி முடிந்து பணியாளர்கள் திரும்பிய பின்னர், இத்திட்டம் முனைப்பாகச் செயற்படுத்தப்படும்.

**தாய்-சேய் நலப் பணிகள்**


தாய்-சேய் நலப் பணிகள், கிராமப் பகுதிகளில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள், ஊராட்சி ஒன்றியத் துணை நிலையங்கள், பின் தங்கியப் பகுதித் திட்ட நிலையங்கள் ஆகியவை மூலமும், நகர்ப் பகுதிகளில் நகராட்சிகள் மூலமும் அளிக்கப்படுகின்றன. குழந்தை பெற்றெடுக்கையில் திறம்பட கவனம் செலுத்துவதும் அதன் பின்னர் தாய்-சேய் ஆகிய **இருவரது நலனில் கவனம் செலுத்துவதும் அவர்களது நலனைப் பேணுவதுமே இதன் முதன்மையான நோக்கமாகும்.**

அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியத்தைக் கொண்டு ஊராட்சி ஒன்றியங்கள் தற்போது 2,831 தாய்-சேய் நல நிலையங்களை நடத்தி வருகின்றன. இம் மாநில நகராட்சிகளில் 128 மகப்பேறு இல்லங்களும், 372 மகப்பேறு நிலையங்களும் அரசு மானியத்துடன் செயல்பட்டு வருகின்றன.

மேலும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 95 மிகத் தொலைவிலுள்ள, பின்தங்கிய கிராமங்களில் தாய்-சேய் நல நிலையங்களை அரசு அமைத்து உள்ளது. இப் பின் தங்கிய பகுதிகளிலுள்ள மக்களுக்கு இவை தொடர்ந்து சேவை செய்யும்.

*[தமிழ்நாடு சட்டப் பேரவையில் 13-8-77 அன்று அளிக்கப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பிலிருந்து தொகுக்கப்பட்டது.]*

தாய்-சேய் நலப்பணிகளைக் கவனிப்பதற்கு தற்பொழுது முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது!





# தமிழ் நாட்டில் கல்வி வளர்ச்சி

சென்ற இதழ் தொடர்ச்சி

## தொழில் நுட்பக் கல்வி

தொழில் நுட்பக்கல்விக்காக **1977-78**-இல் சுமார் ரூ. 6 கோடி (தொழில் நுட்பக்கல்வி நிலையக் கட்டடச்செலவு போன்றவைஉட்பட) ஒதுக்கப்பட்டுள்ளது. இத் துறையின் கீழ், 7 பொறியியல் கல்லூரிகளும், 39 பல்தொழில் நுட்பப் பயிலகங்களும் (மூன்று மகளிர் பயிலகங்களும், ஆறு தனித் தொழில் டிப்ளமாக் கல்வியகங்களும், மூன்று கலை-கைத்திறன் கல்வியகங்களும் உட்பட), 14 தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகளும் உள்ளன. தற்போது ஆண்டுதோறும், பொறியியல் கல்லூரிகளில் பட்டப் படிப்பிற்காக ஏறத்தாழ 1,300 மாணவர்களும், பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் பட்டச் சான்றிதழ் (டிப்ளமா) படிப்பிற்காக 5,000 மாணவர்களும், தொழில் நுட்ப உயர் நிலைப் பள்ளிகளில் 840 மாணவர்களும் எடுத்துக் கொள்ளப்படுகின்றனர். (மேற்சொன்ன ஏழு பொறியியல் கல்லூரிகள் தவிர பல்கலைக் கழகம் சார்ந்த கல்வியகங்களாகவோ அல்லது தன்னாட்சி உரிமையுள்ள கல்வியகங்களாகவோ இருக்கும் கிண்டியிலுள்ள அழகப்ப செட்டியார் தொழில் நுட்பவியல் கல்லூரி, கிண்டியிலுள்ள இந்தியத் தொழில் நுட்ப அறிவுக் கல்வியகம், குரோம்பேட்டையிலுள்ள சென்னைத் தொழில் நுட்பக் கல்வியகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பொறியியல் மற்றும் தொழில் நுட்பவியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளியிலுள்ள வட்டாரப் பொறியியல் கல்லூரி, ஆகிய ஐந்து பொறியியல் கல்லூரிகளும் இம்மாநிலத்தில் உள்ளன.)

## தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம்

இம்மாநிலத்தில் அறிவியல், மற்றும் தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம் ஒன்றை அமைக்க இவ்வரசு ஏற்கெனவே தீர்மானித்து உள்ளது. அப்பல்கலைக் கழகம் அமையுமாயின் பொறியியல், தொழில்நுட்பவியல்மற்றும்



மாண்புமிகு

கல்வி அமைச்சர்

திரு சி. அரங்கநாயகம்




அவற்றுடன் இணைந்த அறிவுத் துறைகளில் மிக உயர்தரமான கல்வியும் ஆராய்ச்சியும் பேணி வளர்க்கப்படும். மாறி வரும் தேவைகளைக் கடிதில் உணர்ந்து அவற்றிற்கேற்ப விரைந்து செயற்படும் திறன் அக் கல்வி முறைக்குக் கிட்டும். அவற்றுக்கு மற்றும்



தமிழ்நாட்டில் தொழில் நுட்பக் கல்வியின் வளர்ச்சிக்குத் தேவையான தலைமைப் பொறுப்பை அப்பல்கலைக் கழகம் ஏற்று நடத்தும்.

அப்பல்கலைக் கழகம் ஒற்றை வகையைச் ( Unitary type ) சேர்ந்ததாக இருக்கும். இம் மாநிலத்தில் முதன்மையான கல்வி நிலையமாக உள்ளதும் தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகமாக விரிவு படுத்துவதற்குத்தேவையான எல்லா வசதிகளையும் கொண்டுள்ளதுமான கிண்டிப் பொறியியல் கல்லூரிதான் புதிய தொழில் நுட்பக் கழகத்தின் தலைமை இடமாக இருக்கும்.

இப் பல்கலைக் கழகம் பொறியியல், தொழில் நுட்பவியல் மற்றும் அதனுடன் இணைந்த அறிவியல் துறைகளில் மிக உயர்தரமான கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கு வாய்ப்பு வசதிகளை அளிக்கும் பொருத்தமான செயல் திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தும். ஆசிரியர்கள் ஆராய்ச்சியாளர்கள் ஆகியோருக்கும் தொழில் துறையினருக்கும் இடையே ஒத்துழைப்பையும், கருத்துப் பரிமாறல்களையும் ஆதரித்து வளர்க்கும். மேலும் மாணவர்களிடையே தொழில் முனைவர் நிலை, மற்றும் தொழிலில் கருத்தூன்றல் ஆகிய பண்புகளை வளர்க்கும்.

அப்பல்கலைக் கழகத்தை அமைப்பதற்கான சட்ட முன் வடிவம் ஒன்று ஏற்கெனவே தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் மீது மைய அரசு தெரிவிக்க விரும்பும் யோசனைகள் எவையேனும் உள்ளனவா எனக் கேட்டு 13-7-77 அன்று மைய அரசுக் கல்வித் துறைக்கு எழுதப் பட்டுள்ளது. மைய அரசு யோசனைகள் எவற்றையேனும் தெரிவித்தால் அவற்றையும் ஆய்வு செய்து, அதன் பின் அச்சட்ட முன் வடிவம் வெகு விரைவில் தமிழ்நாட்டுச் சட்ட மன்றத்தின் முன் ஆய்வுக்கு வைக்கப்படும்.

## கல்வித் தர உயர்வு

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத் தொடக்கத்திலிருந்து தொழில் நுட்பக் கல்விக்காக இருக்கின்ற வசதிகளைச் சீர்செய்து ஒருமுகப்படுத்துவதிலும் கல்வித் தரத்தை மேம்படுத்துவதிலும்தான் அதிகக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. மாணவர்களுக்கு அதிக வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தவும் தொழில் நிறுவனங்களில் புதிதாகத் தோன்றும் துறைகளிலும் பிரிவுகளிலும் எந்தெந்தப் பயிற்சிகளைப்பெற்றவர்கள்தேவைப்படுகின்றார்களோ அந்தந்தப் பயிற்சிகளை அளிக்கவும், தொழில் சம்பந்தப்பட்ட பல புதிய பாடத் திட்டங்கள் துவக்கப்பட்டு இருக்கின்றன. தற்போது பொறியியல் கல்லூரியில் 15 பட்டப் படிப்பு முறைகளும், 33 பட்ட மேற் படிப்பு முறைகளும், 4 பட்ட மேற்படிப்பு டிப்ளமா முறைகளும் உள்ளன. பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் 37 டிப்ளமா முறைகளும், 18 டிப்ளமா மேற்படிப்பு முறைகளும், 17 சான்றிதழ் படிப்பு முறைகளும் உள்ளன.

கிண்டிப் பொறியியல் கல்லூரியில் இயந்திரப் பொறியியல் துறையில் கப்பற் பொறியியல் துறையைச் சேர்ந்த கீழ்க்கண்ட நான்கு விருப்பப் பாடங்கள் 1977—78-ஆம் ஆண்டிலிருந்து புகுத்தப்பட ஒப்பளிக்கப்பட்டுள்ளது. அவையாவன: கப்பற் கொதிகலன்கள், கப்பல் உள்ளெரி பொறிகள் (Marine Internal Combustion Engines ) கப்பல் நீராவிச் சக்தி சாதனங்கள், கப்பல் குளிர்பதனம் மற்றும் காற்றுப் பதனம்.

1977—78-ஆம் ஆண்டிலிருந்துசென்னையிலுள்ள மைய பல்தொழில் நுட்பப் பயிலகத்தில் வேதித் தொழில் நுட்பவியலில் (Polymer Technology) வேலையிடைக் கல்வி டிப்ளமா படிப்பு ஒன்றை தொடங்கவும், கோயம்புத்தூர் அரசு பல்தொழில் நுட்பப் பயிலகத்தில் மின்னணுவியல் டிப்ளமா படிப்பு ஒன்றைத் தொடங்கவும் ஏற்பளிக்கப்பட்டுள்ளது.


புகுமுகத் தொழில் நுட்பக் கல்வி மட்டத்தில் மொத்தம் 8 பாட முறைகளில், இயல்பியல் மற்றும் பொறியியல் படம் வரைதல் ஆகிய இரண்டு பாடங்களில், தொடக்க கட்டமாக, திருச்சிராப்பள்ளியிலும் தூத்துக்குடியிலுமுள்ள அரசு பல்தொழில் நுட்பப் பயிலகங்களிலும், பொள்ளாச்சியிலுள்ள நாச்சிமுத்து பல்தொழில் நுட்பப் பயிலகத்திலும், தமிழில் பயிலும் முறை செயல்படுகிறது. கல்வி நிலையத்தை விட்டு மாணவர்கள் செல்லும்போது, செய்திப் பரிமாற்றலுக்கு ஆங்கிலத்தையும் தமிழையும் பயன்படுத்தும் வகையில் இருமொழிப் பயிற்சியுடையவர்களாக்குவது இம் முயற்சியின் நோக்கமாகும்.

(தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் வைக்கப் பட்ட மானியக் கோரிக்கை 17-ல் இருந்து தொகுக்கப் பட்டது.)




# ஊரக வளர்ச்சிக்கு உதவிடுவோம்!

மாண்புமிகு
உள்ளாட்சித்துறை அமைச்சர்
**திரு கா. காளிமுத்து**



சமுதாய வளர்ச்சித் திட்டம் 1952-ஆம் ஆண்டில் தொடங்கப் பெற்றது. ஊர்ப்புறங்களில் வாழும் நலிவுற்ற மக்களின் நிலையை உயர்த்துவதற்கும் அவர்களிடையே தன்னம்பிக்கையை வளரச் செய்து அவர்கள் முன்னேற வழிகளமைத்துத் தர வேண்டுமென்பதே, இத்திட்டத்தின் நோக்கமாகும். மக்களின் முயற்சிகளை அரசின் அதிகாரத்துடன் இணைத்துச் செயலாற்றி மக்களின் பொருளாதார, சமூகப் பண்பாட்டினை மேம்படச் செய்து அவர்களை நாட்டின் வாழ்வுடன் இணைத்து, நாட்டின் முன்னேற்றத்திற்கு முழு மனத்துடன் இணைத்துச் செயல்படச் செய்வதை, சமுதாய நலத் திட்டத்தின் செயல்முறையெனத் தெளிவாகக் கூற இயலும்.

முன்னேற வேண்டுமென்ற முனைப்புச் சக்தியானது மக்களிடமிருந்தே எழ வேண்டுமென்றும் ஊர்ப்புறங்களில் செயலற்றுத் தேங்கி நிற்கின்ற மனித ஆற்றலை ஒன்று திரட்டி, நிலையான பணிகளைச் செய்ய வேண்டுமென்ற நோக்குடனேயே சமுதாய வளர்ச்சித் திட்டம் தொடங்கப் பெற்றது. எனவே மக்களின் ஒத்துழைப்பையும், திட்டங்களில் பங்கேற்றுச் செயலாற்றுவதுமே, சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் முக்கிய அங்கமாகும்.

தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் செயலுக்கு வந்தவுடன், சமுதாய வளர்ச்சித் திட்டம் ஒரு புதிய கட்டத்தை அடைந்தது. இம்மாநிலத்தில் ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றிற்கும் சமுதாய வளர்ச்சி வட்டாரம் ஒன்று உள்ளது. வட்டாரப் பகுதிகள், ஊராட்சி ஒன்றியப் பகுதிகளுக்கு அடுத்து அமைந்துள்ளன. தென்னார்க்காடு மாவட்டத்தில், கல்ராயன் குன்றுகள் பகுதிகள், அந்தப் பகுதி மக்களின் நலனுக்காக, அரசு இந்த வட்டாரத்தை அண்மையில் புதுப்பித்துள்ளது. ஆனால், ஊராட்சிகள் அமைக்கப்படாத காரணத்தால், கல்ராயன் குன்றுகள் பகுதிக்கு ஊராட்சி ஒன்றியம் அமைக்கப்பட இயலவில்லை. இந்தப் பகுதிக்கு ஊராட்சிகள் அமைப்பது அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

இம்மாநிலத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்கள் மக்களுக்கான நல்வாழ்வுப் பணிகளை மேற்கொண்டு செயலாற்றுவதோடு மட்டுமின்றி வட்டார அளவில் நிறைவேற்றப்படக்கூடிய திட்டங்களையும் அரசின் பிரதிநிதிகளாக பொறுப்பேற்றுப் பணியாற்றித் திட்டங்களை நிறைவேற்றுகின்றன. இந்த நிலையில்தான் ஒரு முக்கியமான மாற்றம் செயலுக்குக் கொண்டு வரப்பட்டது. ஊராட்சி வளர்ச்சித் திட்டத்தை மையமாகக் கொண்டு பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளில் கிடைக்கும் நிதிகளனைத்தும் திரட்டப்பட்டு, ஊராட்சி வளர்ச்சி திட்டவாரியான நிதிநிலைத் திட்டம் கொணரப்பட்டு ஊராட்சி ஒன்றியங்கள் பயன்படுத்திக் கொள்ள வசதி செய்யப்பட்டது. வளர்ச்சித் திட்டங்களை ஒருமித்த முறையில் நிறைவேற்றுவதற்கு, இம்முறை ஒரு பொருளாதாரக் கட்டுக்கோப்பைத் தந்ததுடன், ஊர்ப்புற மக்களின் உற்சாகம் பெருகி பல்வேறு திட்ட வேலைகளுக்கு நன்கொடை அளிக்கும் மனப்பாங்கும், ஊர்மக்களிடையே பெருக நன்கு உதவியுள்ளது.

ஊராட்சிஒன்றியங்களின் வளர்ச்சிக்கு வருவாய்கள், மானியங்கள் (சட்ட பூர்வமாகவும், சட்ட பூர்வமின்றியும்) வாயிலாக அரசிடமிருந்து கிடைக்கக்கூடிய இறுதி நிதி ஆதாரங்களை ஊராட்சி வளர்ச்சித் திட்ட வாரியான நிதி நிலைத் திட்டம் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. அதோடன்றி, உள்ளூர் மக்களின் நன்கொடைத் தொகை பெருகப்

பெருக ஊராட்சி ஒன்றியத்தின் வளர்ச்சி நிதியும் அதிகரிக்கும்.

ஊராட்சி ஒன்றியங்களில் பல்வேறு திட்டங்களை நிர்வகிப்பதற்கு 1977-78-ல் செய்யப்பட்ட நிதி முதலீடுகளின் அளவு, சுமார் ரூ. 132.55 கோடியாக இருக்கும். சட்டப் பேரவையின் முன்னுள்ள கோரிக்கையான ரூ. 32.13 கோடி என்பது, ரூ. 132.55 கோடியின் ஒரு பகுதியேயாகும்.

**நிருவாக அமைப்பு**

தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள கல்ராயன் குன்றுகள் பகுதி நீங்கலாக, இம்மாநிலத்திலுள்ள கிராமப் பகுதிகள் முழுவதிலும் தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 35/1958) தற்போது செயலிலுள்ளது. கல்ராயன் குன்றுப் பகுதியில் உள்ள ஜாகீர்ப் பகுதிகளை அரசு எடுத்துக் கொண்ட பின்னர் இப்பகுதியில் ஊராட்சிகளை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப் பட்டு வருகின்றன. ஊராட்சிகள் அமைக்கப்பட்ட பின்னர், ஊராட்சி ஒன்றியம் அமைக்கப் படும்.

தமிழ்நாட்டில் 12,627 ஊராட்சிகளும், 589 பேரூராட்சிகளும், 12 நகரியங்களும் 374 ஊராட்சி ஒன்றியங்களும் உள்ளன.

**நிதிநிலைத் திட்டம்**

ஊராட்சி வளர்ச்சித் திட்டங்களுக்காகும் நிதிச் செலவுக்காக 1976-77-ல் 116.25 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்ததற்கு மாறாக, 1977-78-ஆம் ஆண்டில் 132.55 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது.


அதுபோல் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் வழங்கப்பட்ட சராசரி நிதிஒதுக்கீடும் 1976-77ல் 31.08 இலட்சம் ரூபாயாக இருந்ததற்கு மாறாக, 1977-78-ல் 35.44 இலட்சம் உயர்த்தப்பட்டுள்ளது.

மக்களின் விருப்பங்களை நிறைவேற்றும் பொருட்டு, ஊரக வளர்ச்சிக்கு இவ்வரசு அளிக்கும் முக்கியத்துவத்திற்கு இவை வெளிப்படையான சான்றுகளாகும்.

**பணிகள் பற்றிய திட்டங்கள்**

**(அ) ஊர்ப் பணிகளுக்குரிய திட்ட வேலைகள்**

இத்திட்டத்தில் ''குடி நீர் வழங்கல்'', ''இணைப்புச் சாலைகள்'' 'பள்ளிக் கட்டிடங்கள்' அமைத்தல், ஆகிய பணிகளுக்கு ஒப்பளிக்கப்படுகின்றன. 1976-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ஆம் நாள் முடிய செய்து தரப்பட்ட அடிப்படை வசதிகளின் விவரம் (கூடுதல் எண்ணிக்கை) வருமாறு:



அனைத்துக் கிராமங்களுக்கும் விரைவில் குடிநீர் வழங்க வேண்டும் என்பதற்காக, நடப்பு ஆண்டிற்கு 1.4 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது !

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | மேல் நிலை நீர்த் தொட்டிகள் (எண்ணிக்கை) | ... | | 7,154 |
| 2. | கிணறுகள் (எண்ணிக்கை) | ... | ... | 81,072 |
| 3. | இணைப்புச் சாலைகள் (கி.மீ.) | ... | ... | 36,876 |
| 4. | பள்ளிக் கட்டடங்கள் கட்டப்பட்டவை | | ... | 18,461 |

இப்பணிகளுக்காக, 1977-78 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 340 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**குடிநீர் வழங்கல்**


முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்தே, குடிநீர் அளிக்க வேண்டியதன் அவசியம், அரசின் கவனத்தைப் பெற்று வந்துள்ளது. குடிநீர் வழங்குவதற்கென முதலிடம் அளித்துக் காரியமாற்றியுள்ள போதிலும்கூட, குடிநீர்ப் பிரச்சினையின் ஒரு சிறிய கூறினைத் தான் இதுவரை அணுக முடிந்துள்ளது. மக்கட்தொகை, கிடைக்கின்ற குடிநீர் ஆதாரம் ஆகியவற்றைப் பொறுத்து, நிறுத்தி வைக்கப்பட்டுள்ள குடிநீர் வசதியைத் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் வழங்குவதற்கென முழுமையான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1977-78-ல் 1 கிலோ மீட்டர் தொலைவிற்குள் குடிநீர் ஆதாரம் ஏதுமில்லாத கிராமங்களில் குடிநீர்வசதி ஏற்படுத்தித்தர இலக்கமிடப்பட்டுள்ளது. ஊரக வளர்ச்சி இயக்குநர், அரிசன நல இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் போன்ற முகவரமைப்புகளின் கீழ் செய்யப்பட்ட நிதி ஒதுக்கம் ஒன்று சேர்க்கப்பட்டு, இந்த இலக்குகளை எய்தும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் ஒன்று சேர்ந்து நிதர்சனமான முறை மேற்கொள்ளப்படும்.

குடிநீர் வழங்கும் திட்டங்களுக்காக, 1977-78-ஆம் ஆண்டுகான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 140 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

**(ஆ) இணைப்புச் சாலைகள்**

இணைப்புச் சாலைகளுக்காக 1977-78-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 60 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

குடிநீர் வழங்கும் திட்டத்திற்கென 15 சதவீதமும், இணைப்புச் சாலைகளுக்கென 10 சதவீதமும்,



அரிசனங்களின் பயனுக்கான பணிகள் குறித்து அரிசனநலத் துறை நிதிகளிலிருந்து பெறப்படுகிறது. குடிநீர் வழங்கல், இணைப்புச் சாலைகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ள தொகையில் 20 சதவீதம் அரிசனங்கள் நலனுக்கென்றே ஒதுக்கப்பட வேண்டும்.

**(இ) பள்ளிக் கட்டடங்கள்**

*1977-78* நிதிநிலை மதிப்பீட்டில் ஊர்ப்புறங்களில் பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கென ரூ. 54 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**(ஈ) சாலைகளைப் பேணுதல்**

*1977-78*-ஆம் ஆண்டு நிதிநிலை மதிப்பீட்டில், மக்கள் தொகை-சாலைகளின் நீளம் ஆகியவற்றின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு 22.5 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது.

**(உ) சிறுபாசனம்**

*1977-78* வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் சிறுபாசனத் திட்டங்களுக்காக 25 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**உற்பத்தித் திட்டங்கள்**

வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மீன்வளம்

*1977-78*-ல் செய்யப்பட்ட ஒதுக்கீடுகளின் அடிப்படையில் வேளாண்மை, கால்நடை வளர்ப்புத் திட்டங்களை ஆண்டுத் திட்டங்களாக ஊராட்சி ஒன்றியங்கள் செயல்படுத்தி வருகின்றன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு குறிப்பிட்ட தொகை ஒதுக்கீடு செய்யப்படுகிறது. வேளாண்மைத் துறையின் ஆலோசனையுடனும் அவ்வப்போது பிறப்பிக்கப்படும் அரசாணைகளில் வரையறுக்கப்பட்டுள்ள சில திட்டவட்டமான நடைமுறையின் அடிப்படையிலும் தாமே திட்டங்கள் வகுத்துக்கொள்ள ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் முழு உரிமை வழங்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட மாவட்டத் தொழில்நுட்ப அதிகாரிகளின் ஆலோசனையுடன் ஊராட்சி ஒன்றியங்களால் இத் திட்டங்கள் வகுக்கப்பட்டு, செயல்படுத்தப்படுகின்றன.

ஊராட்சி ஒன்றியங்கள் கீழ்க்காணும் திட்டங்களை மேற்கொண்டுள்ளன.

**(அ) வேளாண்மை**

*(1)* வேளாண்மைக் கிடங்கு கட்டுதல்

*(2)* ஊராட்சித் தோட்டங்களைப் பராமரித்தல்.

*(3)* மாவட்ட வேளாண்மை அதிகாரிகள் ஆலோசனையுடனும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஒப்புதலுடனும் உள்ளூர்ப் பகுதிக்கேற்பக் கீழ்க்காணும் திட்டங்களைப் போன்று ஊராட்சி ஒன்றியங்கள் தெரிந்தெடுக்கவிருக்கும் ஏனைய திட்டங்கள்.

*(அ)* ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் சாதனங்கள் வழங்குதல்.

*(ஆ)* தனிப்பட்டவர்களுக்குச் சாதனம் வழங்குதல்.

*(இ)* உதவிகள் விஸ்தரிப்பு-கிராம விழாக்கள், கண்காட்சிப் போட்டிகள் முதலியன.

*(ஈ)* வேளாண்மை விஸ்தரிப்பு-விளக்கப் பாத்திகள் அமைத்தல்.

*(உ)* தனிப்பட்டவர்களுக்குப் பசுந்தழை உர விதைகள் வழங்குதல்.

*(ஊ)* தனிப்பட்டவர்களுக்கு விதைகளும் நாற்றுக்களும் வழங்குதல்.

**சிற்றூர்களுக்கு இடையே இணைப்புச் சாலைகள் இல்லாததால், வரப்புகளின் மேல் நடந்து செல்லும் நிலை (மேலே உள்ள படம்) இன்னும் உள்ளது! அந்நிலை இனியும் இருக்கக் கூடாதென்பதற்காக இணைப்புச் சாலைகள் (கீழே உள்ள படம்) அமைப்பதில் இன்றைய அரசு கவனம் செலுத்துகிறது.**



1977-78 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் வேளாண்மைத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கென 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1977-78-ல் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் 10,695 ரூபாய் மானியமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்குச் சமமாக 8,601 ரூபாயை உள்ளூர்வாசிகள் செலுத்த வேண்டும்.

| | | | ரூபாய் |
|---|---|---|---|
| 1. | வேளாண்மைக் கிடங்கு கட்டுதல் | ... | 2,500 |
| 2. | ஊராட்சித் தோட்டங்கள் பராமரிப்பு | ... | 700 |
| 3. | ஊராட்சி ஒன்றியங்கள் தெரிந்தெடுக்கும் திட்டங்கள் | | 7,495 |
| | மொத்தம் | ... | 10,695 |

**கால்நடை வளர்ப்பு**

இத்திட்டத்தின்கீழ் அரசு மானியமாக 10 இலட்சம் ரூபாய் தனியே ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஓராட்சி ஒன்றியத்திற்கும் 2,674 ரூபாய் மானியமாக ஒதுக்கப்பட்டது. இதற்குச் சமமாக, 2,045 ரூபாய் உள்ளூர்வாசிகள் செலுத்த வேண்டும்.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியப் பகுதியிலும் கால்நடை வளர்ப்புத் திட்டத்தின்கீழ், கீழ்க்காணும் பணி இனங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன:

(1) கால்நடை மருந்தகங்கள் கட்டுதலும், தற்போதுள்ள மருந்தகங்களை மேம்படுத்தலும்.

2. கால்நடை உதவி மருத்துவர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுதல்.

3. கால்நடைகள், பால், பண்ணை, கோழித்தீவன மேம்பாட்டுக்காக உள்ளூர் நிலைமைகளின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்கள் தெரிந்தெடுக்கவிருக்கும் திட்டங்கள்.

**மீன்வளம்**

இத்திட்டத்தின்கீழ் மாநிலம் முழுவதற்கும் ''ஊராட்சி ஒன்றியங்களுக்கு மானியங்கள்'' வடிவில் 2 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மை, கால்நடை வளர்ப்புத் துறைகளைப் போன்று ஊராட்சி ஒன்றியங்களில் மீன் வளங்களின் மேம்பாடுக்கென்று திட்டவட்டமான ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றன. மீன் வளர்ப்பு மேம்பாடு சாத்தியமான ஊராட்சி ஒன்றியங்களில் மட்டுடும் இத்திட்டம் செயற்படுத்தப் படுகிறது.

1977-78-ஆம் ஆண்டில் இத் திட்டத்தின் கீழ், கீழ்க்காணும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

1. மீன்குஞ்சு வளர்ப்பு-பேணுதல்


2. மீன்குஞ்சுகளை வழங்குதல்.

3. ஏரிகளைப் புதுப்பித்தல் (குறைந்த அளவு தேவைகள் முழுவதற்கும்).


## நலப்பணித் திட்டங்கள்

### (அ) தொடக்கக் கல்வி


ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் தொடக்கக் கல்வியை முழுமையாக நிர்வகிக்கும் பொறுப்பு சட்ட அடிப்படையில் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்ததாகும். ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் 28,394 பள்ளிகள் (தொடக்க, உயர் தொடக்க, உதவி பெறும் பள்ளிகள்) உள்ளன. இவற்றில் 23,001 பள்ளிகள் ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப் பெறுகின்றன. எஞ்சியவை உதவி பெறும் நிறுவனங்களாக உள்ளன. ஊ.ராட்சி ஒன்







நண்பகல் உணவுத் திட்டத்திற்காக நடப்பு ஆண்டிற்கு 399.72 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.



கூரை வேய்ந்த பள்ளிகளை மாற்றி, நல்ல கட்டடம் கட்டுவதற்காக நடப்பு ஆண்டில் 54 இலட்சம் ரூபாய் செலவிடப்படும்.

றியப் பள்ளிகள், உதவிபெறும் பள்ளிகளில் 1.31 இலட்சம் ஆசிரியர்கள் பணியாற்றி, 46.27 இலட்சம் மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கின்றனர்.

தொடக்கக் கல்விக்காக 1977-78ஆம் ஆண்டில் 50.69 கோடி ரூபாய் செலவிடப்படும். அதில் ஊராட்சி ஒன்றியங்களின் பங்கு 7.41 கோடி ரூபாயாக இருக்கும்.

**நண்பகல் உணவுத் திட்டம்**

ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் நிறுவப்பட்டதன் மூலம் நாட்டு வளர்ச்சிப் பணிகளில் பங்கு கொள்ளும் வகையில் உள்ளாட்சி மன்றங்களின் நண்பகல் உணவுத் திட்டத்தை உறுதியாகச் செயல்படுத்தச் செய்ய அரசினால் இயன்றது. இம்மாநிலத்திலுள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு பள்ளியிலும் மதிய உணவுக் குழு உள்ளது. இதில் ஊராட்சித் தலைவர் தலைவராகவும், பள்ளித் தலைமை ஆசிரியர் செயலாளராகவும் பணியாற்றுகிறார்கள். கோரிக்கை எண். 17-ல் ரூபாய் 399.72 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## (ஆ) நல்வாழ்வுப் பணிகள்

**ஆரம்பச் சுகாதார நிலையங்கள்**

ஆரம்பச் சுகாதார நிலையம் பல் நோக்குப் பிரிவாக நிறுவப்பட்டது. சமுதாயத்துக்குத் தடுப்பு சிகிச்சை அளிப்பதிலும், நோய்ச் சிகிச்சையளிப்பதிலும் அக்கறை கொண்டு மக்களின் உடல் நலன் நாளடைவில், ஊட்டம் பெறச் செய்வதே இந்நிலையங்களின் பணியாகும். 374 வட்டாரங்களிலும் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. பத்து வட்டாரங்களில் கூடுதல் தொடக்கச் சுகாதார நிலையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

**தாய் சேய் நல நிலையங்கள்**

தாய் சேய் நலப் பணிகளைத் தங்கள் பகுதிகளில் வளர்ப்பது ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் பொறுப்பாகும். இத்திட்டத்திற்காகும் செலவை ஊராட்சி ஒன்றியக் குழு சமாளிக்கும் வகையில் மொத்தச் செலவில் 3-ல் 2 பங்கை அரசு உதவி மானியமாகத் தருகிறது. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் செயற்படும் தாய் சேய் நல நிலையங்களின் மொத்த எண்ணிக்கை 2,818 ஆகும். 1977-78ஆம் ஆண்டில் ரூபாய் 65 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள்**

மருந்தகங்களை நிறுவுவதும், நிர்வகிப்பதும், ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் பொறுப்பாகும். மருந்தகங்களை நிர்வகிப்பதற்குத் தேவையான நிதிகளை ஊராட்சி ஒன்றியங்கள் ஒதுக்குகின்றன. ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களைத் தவிர, ஊரக மருந்தகங்களும் ஊராட்சிகளில் உள்ளன. மருந்தகங்களை நிர்வகிப்பதற்காகும் மொத்தச் செலவில் 50 சதவிகிதம் (ஆண்டொன்றிற்கு ரூபாய் 5,400க்கு மேற்படாமல்) உதவி மானியம் பெற ஊராட்சி ஒன்றியம் தகுதி பெற்றதாகிறது. 1977-78-ஆம் ஆண்டில் ரூபாய் 5 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**குடும்பநலத் திட்டம்:** தங்களுடைய பகுதிகளில் குடும்ப நலத் திட்டப் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் பொறுப்பாக்கப்பட்டுள்ளன. சீரமைக்கப்பட்ட குடும்ப நலத் திட்டத்தின்கீழ் இம் மாநிலத்திலுள்ள 374 வட்டாரங்களும் கொணரப்பட்டுள்ளன.

'கேர்' நிறுவனத்தின் உதவியுடன் குழந்தைகள் காப்பகங்களில் சத்துணவு வழங்கும் திட்டம்:

இத்திட்டம் 2 முதல் 5 வயது வரையிலான குழந்தைகளுக்கும், சூலுற்ற மகளிருக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் சத்துணவு வழங்குவதில் கருத்தூன்றுகின்ற சிறப்புத் திட்டமாகும். இவர்களெல்லாம் எளிதில் நோய்க்கு ஆட்படும் வகையினர் ஆதலால்


இன்றியமையாத வளர்ச்சிக் காலக் கட்டத்தில் இவர்களுக்குச் சத்துணவு வழங்குவதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். ஆண்டுக்கு 300 நாட்களுக்கு 1,30,000 பேர்களுக்குச் சத்துணவு அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ், பயன்பெறுகின்ற ஒவ்வொருவருக்கும் ஒரு நாளைக்கு 80 கிராம் வீதம் பாலாகாரம் எனப்படுகின்ற மாவுப் பொருள் உணவும் (அதாவது தானியம், சோயா பீன்ஸ், மக்காச் சோளம் இவை கலந்த மாவு) 7 கிராம் வீதத்தில் சாலாடு எண்ணெயும் ( Salad oil ) அல்லது பீநட் எண்ணெய்யும் ( Pea nut oil ) 'கேர்' நிறுவனத்தால் வழங்கப்படுகிறது. குழந்தைகள் காப்பகங்கள் ஒவ்வொன்றிலும் சத்துணவு அளிக்கப்பட்டுப் பயன் பெறுவோரின் உயர்ந்தளவு எண்ணிக்கை 120 ஆகும். அதாவது குழந்தைகள் 80 பேர்; தாய்மார்கள் 40 பேர், தற்போது இந்தச் சத்துணவு வழங்கும் திட்டம் 100 வட்டாரங்களில் அமைந்திருக்கின்ற 1,398 குழந்தைகள் காப்பகங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இவற்றின் மூலம் 1,30,000 பேர் பயன் பெறுகின்றனர்.



பிஞ்சுக் குழந்தைகளைப் பேணி வளர்ப்போம்!

1977-78-ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ. 17.40 இலட்சமாகும். இத்தொகையில் 'கேர்' நிறுவனத்திற்காகும் நிர்வாகச் செலவுகள், பல்வேறு குழந்தைகள் காப்பகங்களுக்கும் உணவுப் பொருட்களை எடுத்துச் செல்வதற்காகும் போக்குவரத்துச்செலவு, உணவு வழங்குகைக்கு ஆகும் செலவுகள், பாலசேவிகைகள், ஆயாக்கள் ஆகியோருக்கு ஊதியம், மருந்துகள் வாங்குவதற்கு ஆகும் செலவு, பணியாளர் செலவு ஆகியன அடங்கும்.

குழந்தைகள் காப்பகங்களுக்காக நடப்பு ஆண்டிற்கு 17.40 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.



## கிராம முழு வளர்ச்சித் திட்டம்

வேளாண்மையையே பெரிதும் நம்பியிருக்கின்ற, கிராமப் பகுதிகளில் வாழ்கின்ற மக்களின் நலனை மேம்படுத்தும் உயரிய நோக்குடன், வேளாண்மையை மேம்படுத்தவும், காலத்திற்கேற்ப மாற்றியமைக்கவும் பரிவுரைகளைச் செய்யும் பொருட்டு இந்திய அரசு வேளாண்மை குறித்த தேசிய ஆணைக் குழு ஒன்றை நிறுவியது. இந்த ஆணைக் குழு, கிராமதானக் கிராமங்களையும், சர்வ சேவா சங்கத்தையும் மேம்படுத்துவதற்காகத் திட்ட ஆணைக்குழுவுடன் விவாதம் நடத்தியது. கிராம தானப் பகுதிகளில் கிராம நிலங்களுக்குரிய உரிமை முழுவதும் ஏற்கெனவே உள்ளபடியால், குறிப்பாக அந்தப் பகுதிகளிளெல்லாம் முன்னோடி அடிப்படையில் வேளாண்மை மேம்படுத்துவது, காலத்திற்கேற்ப மாற்றியமைப்பது குறித்த பணிகள் முதற்கண் மேற்கொள்ளப்படலாமென்று வேளாண்மை குறித்த தேசிய ஆணைக் குழு கருதிற்று. மேலும், கிராமதானப் பகுதிகளில் இத்திட்டத்தைச் செயற்படுத்தினால் இது மக்களிடையே பரவலாக ஏற்றுக் கொள்ளப்படும் என்றும், அதன் மூலம் அண்டையிலுள்ள கிராமங்களும் இத்திட்டத்தில் பங்குகொள்ள முன்வரலாம் என்றும் ஆணைக் குழு கருதியது.

வேளாண்மை குறித்த தேசிய ஆணைக்குழு, கிராம முழு வளர்ச்சித் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, தமிழ்நாடு திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மேல நீலிதநல்லூர் வட்டாரத்தைச் சேர்ந்த கீழ்க்காணும் கிராமங்களைத் தெரிந்தெடுத்திருந்தது.

சின்னக் கோயிலாங்குளம்,

பெரிய நடுவக்குறிச்சி,

சின்னநடுவக்குறிச்சி,

பட்டடைக் கட்டை

இந்திய அரசின் வேண்டுகோளின் பேரில், 1976-ஆம் ஆண்டு ஆகஸ்டுத்திங்களில் மேற்சொன்ன கிராமங்களுக்கான பெருந் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டன. இந்தத் திட்டத்திற்காக மொத்தம் ரூபாய் 66 இலட்சம் முதலீடு செய்யக் கருதப்பட்டுள்ளது. இத்தொகையை அருகில் உள்ள அட்டவணையில் கண்டுள்ளவாறு செலவிடக் கருதப்பட்டுள்ளது.

**கிராமப் புறங்களில் சாணத்திலிருந்து எரி வாயு தயாரிப்புக் கூடங்கள் நிறுவுதல்**

கிராமப் புறப் பகுதிகளில் சாணத்திலிருந்து எரிவாயு தயாரிப்புக் கூடம் நிறுவும் திட்டத்தைச் செயல்படுத்த கிராம வளர்ச்சி இயக்குநர் பொறுப்பு வகிக்கிறார்.

ஒவ்வொரு கூடத்தின் மூலதனச் செலவில் 20 சதவீதம் உதவித் தொகையாக வழங்கப்படுவதற்கு இத்திட்டம் வகை செய்கிறது. எரிவாயுக்கூடம் வெற்றிகரமாக நிறுவப்பட்டவுடன் மேற்கூறிய உதவித் தொகை வழங்கத்தக்கதாகும். மேலும், இத்திட்டத்தினுல் பயனடைவோருக்கு நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் கடன் வழங்கும்.

1976-77-ஆம் ஆண்டில் நமது மாநிலத்தில் சாணத்திலிருந்து எரிவாயு தயாரிப்புக் கூடங்கள் 1,500 நிறுவப்பட வேண்டுமென்று மத்திய அரசு இலக்கு நிபணயித்திருக்க, அந்த ஆண்டில் 1,493 கூடங்கள் நிறுவப்பட்டன.

1977-78-ஆம் ஆண்டில், இந்திய அரசு, சாணத்திலிருந்து எரிவாயு தயாரிப்புக் கூடங்கள் 2,100-ஐ நிறுவுவது என இலக்கு நிர்ணயித்துள்ளது.

(கோரிக்கை எண் 23-ன் கீழ், சட்டப் பேரவையில் வைக்கப்பட்ட குறிப்பிலிருந்து தொகுக்கப்பட்டது).

அட்டவணை

| திட்டத்தின் பெயர் | மொத்த மூலதனம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1. வேளாண்மை ... ... ... | 36.49 |
| 2. கால்நடை வளர்ப்பு ... ... | 13.83 |
| 3. தொழிற்சாலைத் திட்டங்கள் ... ... | 3.96 |
| 4. குறைந்த அளவுத் தேவைகள் திட்டங்கள் ... | 8.02 |
| 5. பணியாளர்க்கான செலவு, சில்லறைச் செலவுகள் | 3.70 |
| | 66.00 |

கீழ்க்காணும் திட்டங்களை நிர்வகிப்பதற்காக 3.96 இலட்ச ரூபாயை வழங்க இசைவு தெரிவிக்கப்பட்டுள்ளது:

| | |
|---|---|
| (அ) வேளாண்மை | |
| 1. வேளாண்மைக்குப் பழைய கிணறுகளைப் புதுப்பித்தல் | 52,000 |
| 2. 31 மின்விசையேற்றங்களை அமைத்தல் ... | 1,55,000 |
| 3. பண்ணைக் கருவிகள் ... ... | 34,000 |
| 4. விதைகள் ... ... ... | 10,000 |
| 5. உரங்கள் ... ... ... | 32,000 |
| 6. பூச்சிக்கொல்லி மருந்துகள் ... | 10,000 |
| 7. விளக்கமளித்தலும், பயிற்சி அளித்தலும் ... | 5,000 |
| (ஆ) கால்நடை வளர்ப்பு | |
| ஆடுகள் மேம்பாட்டுத் திட்டம் ... | 88,000 |
| (இ) பணியாளர்களை அமர்த்துதல் ... ... | 10,000 |
| | 3,96,000 |

மேற்கொண்ட தொகைகளோடு கிராம முழு வளர்ச்சித் திட்டத்தின் கீழ், கீழ்க்கண்ட இனங்களை நிருவகிப்பதற்காக ஒரு இலட்ச ரூபாய் வழங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது:

| | ரூபாய் |
|---|---|
| 1. பால் பண்ணை வளர்ச்சி ... ... | 67,500 |
| 2. கால்நடை வளர்ப்பு ... ... | 32,500 |
| | 1,00,000 |

கிராம முழு வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 1977—78-ஆம் ஆண்டில் நிறைவேற்றப்படுவதற்காகக் கீழ்க்காணும் திட்டங்களுக்குத் தேவையான செயற் குறிப்புகள் இந்திய அரசிற்கு அனுப்பப்பட்டு உள்ளன:

| | ரூபாய் |
|---|---|
| 1. வேளாண்மை ... ... ... | 14,15,975 |
| 2. கால்நடை வளர்ப்பு ... ... | 9,66,025 |
| 3. தொழிற்சாலைகள் ... ... | 1,30,000 |
| 4. பணியாளர்கள், சில்லறைச் செலவுகள் ... | 1,88,000 |
| | 27,00,000 |

# மீண்டும் ஜமாபந்தி முறை

பரீட்சார்த்த அடிப்படையில் *1379*-ஆம் பசலி முதற் கொண்டு மாவட்டத்திற்கு ஒரு வட்டத்தில் ஜமாபந்தி முறையை நீக்க ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதற்குப் பதிலாக, ஜமாபந்தி நீக்கப்பட்ட வட்டங்களில், கிராம வட்டக் கணக்குகளைச் சரிபார்த்துத் தணிக்கை செய்யும் முறை புகுத்தப்பட்டது. *1381*-ஆம் பசலியிலிருந்து கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக மற்ற மாவட்டங்களில் ஏற்கெனவே ஜமாபந்தி நீக்கிய வட்டத்தை உள்ளடக்கிய வருவாய் வட்டாரமொன்றுக்கு ஜமாபந்தி இயங்காத் திட்டம் விரிவாக்கப்பட்டது.


தணிக்கை முறை செயல்படுவது குறித்து சில மாவட்ட ஆட்சியாளர்களின் அறிக்கைகளை ஆய்வு செய்த பின்னர் வருவாய் வாரியம் (நிலவரி) கீழ்க்காணும் இரு காரணங்களுக்காக எல்லா வருவாய் வட்டாரங்களிலும் ஜமாபந்தி முறையை மீண்டும் கொண்டு வரலாம் என்று பரிந்துரைத்தது:

(1) தணிக்கை முறையின் கீழ், கணக்குகள் மீது சரிவர முடிவு எடுக்கப்படவில்லை. இதனால், நிலவரி வசூல் வேலை முதலியவையும், புள்ளி விவரத் தொகுப்பு வேலையும் காலத் தாமதமாகின்றன.

(2) ஜமாபந்தி முறை நீக்கப்படுவதனால், துறை அதிகாரிகளைச் சந்தித்து, தங்கள் குறைகளைத் தீர்த்துக் கொள்ளும் வாய்ப்பை உழவர்கள் இழக்கின்றனர்.

ஜமாபந்தி முறையை மீண்டும் கொண்டு வருவது குறித்த வருவாய் வாரியத்தின் பரிவுரையை அரசு பரிசீலித்து, ஜமாபந்தி முறையை மேம்படுத்துவது குறித்து இதில் பற்றுடைய நபர்களிடமிருந்து குறிப்பாக விவசாயிகளிடமிருந்து ஆக்க பூர்வமான ஆலோசனைகளைக் கேட்டது. ஜமாபந்தி முறையை ஆதரித்தும் எதிர்த்தும் வரப்பெற்ற கருத்துக்களை அரசு ஆய்ந்து பார்த்தது. ஜமாபந்தி எல்லா வகையான கிராமக் கணக்குகளை முழுவதும் சரி பார்ப்பதற்கு வகை செய்வதோடு, அதிகாரிகளை கிராமத்தினர் சந்திக்கவும், அதிகாரிகள், அவசியமான இடங்களில் உழவர்களுக்கு விதிக்கப்படும் லெவிக்கள், வரி வீதங்கள், அபராதங்கள் முதலியவற்றைச் சரி பார்த்துச் சுருக்கமான வகையில் திருத்தி அமைக்கவும் வாய்ப்பளிக்கிறது என்று அரசு கருதியது. தணிக்கை முறையைப் பரீட்சார்த்தமாகப் பின்பற்றியதில் காலத் தாமதமும், வேலை முடக்கமும் ஏற்படுவதுடன் ஜமாபந்தி முறையில் உள்ள சில அனுகூலங்களை மறுக்கும் வகையிலும் அமைந்துள்ளது. ஆகவே, ஒவ்வொரு மாவட்டத்தில் குறிப்பிட்ட சில பகுதிகளில் பின்பற்றிய இந்தப் பரீட்சார்த்த முறை கைவிடப்பட்டு, *1386*-ஆம் பசலி முதல் வருவாய் வட்டாரங்கள் அனைத்திலும் ஜமாபந்தி முறையை மீண்டும் அறிமுகப்படுத்த வேண்டுமென்றும் அரசு முடிவு செய்தது.

ஆதாரம்: வருவாய்த் துறை மானியக் கோரிக்கை, *1977*.



## பன்றி உணவில் மரவள்ளிக்கிழங்கு

பன்றி உணவில் பழக்கத்தில் உள்ள மக்காச்சோளத்திற்குப் பதிலாக, மரவள்ளிக்கிழங்குச் 'சிப்ஸ்' சேர்த்து ஆய்வு செய்யப்பட்டு, மக்காச்சோளத் தீனியுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வின்படி மக்காச் சோளத் தீனி விலையைவிட, மரவள்ளிக்கிழங்குத் தீனி 21.4 சதம் குறைவாக உள்ளது. பன்றியின் பொருளாதார குணங்கள் யாவும் பாதிக்கப்படவில்லை. பன்றி இறைச்சியின் தரத்திலேயும் எந்தவித மாறுதலும் இல்லை. மக்காச்சோளத் தீனிப் பிரிவில் பன்றி ஒன்று 71.23 கிலோ எடையை அடையும் வரை ஆகும் மொத்தச் செலவு ரூ. 352.16. ஆனால் மரவள்ளிக்கிழங்கு தீனிப் பிரிவில் 74-20 கிலோ எடையை அடைய ரூ. 299.61 தான் ஆகியுள்ளது. இதனால் ஒரு பன்றியில் இருந்து கிடைக்கும் நிகர லாபம் மரவள்ளிக்கிழங்கு தீனிப்பிரிவில், இறைச்சி கிலோ ரூ. 7.00 ஆக விற்றால் ரூ. 84.93-ம், மக்காச்சோளப் பிரிவில் இருந்து ரூ. 21.39-ம் கிடைக்கும். எனவே, மரவள்ளிக்கிழங்கைப் பன்றி உணவில், மக்காச்சோளத்திற்குப் பதிலாகக் கொடுப்பதால் அதிக நிகர லாபம் கிடைக்கிறது என்பது இந்த ஆய்வின் மூலம் நன்கு தெரியவருகிறது.

தகவல்: கால்நடை பராமரிப்புததுறை,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம்,
கோவை-3.

தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம்,
கோவை-3.

# அரசுப்பணியாளர்களுக்கு அளிக்கப்படும் ஓய்வூதியங்கள்

—ச. குகன், ஐ.ஏ.எஸ்.,
அரசு ஆணையாளர்—
செயலாளர்,
நிதித் துறை,
தமிழ்நாடு அரசு.

தமிழ்நாடு அரசு தனது பணியாளர்களுக்கு ஓய்வூதியம் அளிப்பதற்காகப் பின்கண்ட திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது:

**(1) தமிழ்நாடு, தாராளமாக்கப்பட்ட ஓய்வூதிய விதிகள்—1960**

அரசுப் பணியாளர் ஒருவர், 25 ஆண்டுகள் தகுதிப் பணியை முடித்த பின்னர் பணியிலிருந்து ஓய்வு பெற்றால் சராசரி ஊதியத்தில் 30/80 என்ற வீதத்தில் ஓய்வூதியம் பெறுவார். 25 ஆண்டுகளைவிட அதிக கால அளவுக்குப் பணி புரிந்திருந்தால், சில நிபந்தனைகளுக்குட்பட்டு, சராசரி ஊதியத்தில் 33/80 என்ற வீதத்தில் ஓய்வூதியம் அளிக்கப்படுகிறது. இதைத் தவிர, முடிவு பெற்ற ஒவ்வொரு ஆறு மாதப் பணிக்கும் ஊதியத் தொகையின் 3/10 என்ற வீதத்தில் இறப்பு-ஓய்வூதிய பணிக்கொடையும் (Death - cum - retirement gratuity) அனுமதிக்கப்படுகிறது. ஊதியத்தில் 16.5 மடங்கு என்ற உயரளவுக்கு இது உட்பட்டதாகும்.

(அ) தற்போது குறைந்த அளவு ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு ரூ. 50 ஆகும். இதைத் தவிர, பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் மாதம் ஒன்றுக்கு ரூ. 32 அகவிலைப்படி பெறவும் உரிமையுள்ளவராவர். முதலில் அனுமதிக்கப்பட்ட ஓய்வூதியத்தில் 10 சதவீதம் என்ற வீதப்படி-இது மாதம் ஒன்றுக்கு ரூ. 15 என்ற வரையறைக்கு உட்பட்டதாகும்-கூடுதல் அகவிலைப்படி 1-1-1977 முதற்கொண்டு வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) ஓய்வூதியத் தொகை ரூ. 300 அல்லது அதற்குக் குறைவாக இருந்தால், அத்தொகை பண அஞ்சல் மூலம் அரசுச் செலவில் அனுப்பப்படுகிறது. ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள், ஆசிரியர்களது குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள், பொதுவாக குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் ஆகியோரும், அவர்கள் சென்னை மாநகரில் வசித்து வந்தால், தங்களது ஓய்வூதியங்களைப் பண அஞ்சல் மூலம் பெறலாம்.

(இ) வேலை நிதியிலிருந்து ஊதியம் பெறும், அரசுப் பணியாக்கப்பட்ட பணிகளில் பணிபுரிவோர் அனைவருக்கும், தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் பணிமுடித்த, அரசுப் பணியின் கீழ்வராமல் வேலை நிதியிலிருந்து ஊதியம் பெறும் பணியாளர்களுக்கும் அரசு ஓய்வூதிய நன்மைகளையும் ஏனைய நன்மைகளையும் அரசு வழங்கியுள்ளது.

(ஈ) ஓய்வூதியம் பெறுபவர்கள் வரையறுக்கப்பட்ட மருத்துவச் சலுகைகள் பெறவும் தகுதியுள்ளவர்களாவர். இது ஆண்டு ஒன்றுக்கு 200 ரூபாய் என்ற வரம்புக்கு உட்பட்டு ஆண்டு ஓய்வூதியத்தில் 10 சதவீதமாகும். மாதம் ஒன்றுக்கு ரூ. 750-வரை ஓய்வூதியம் பெறுபவர்களும் பண்டிகை முன்பணம் பெறத் தகுதியுள்ளவர்களாவர்.

**(2) தமிழ்நாடு அரசுப் பணியாளர் குடும்ப ஓய்வூதிய விதிகள்—1964**

(அ) அரசுப் பணியாளர் ஒருவர் பணியில் இருக்கையிலோ ஓய்வூதியம் பெற்ற பின்னரோ இறந்துவிட்டால், அவரது குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடையதாகும். ஆனால், அவர் இறக்கும் சமயத்தில் குறைந்தது ஓராண்டுக் கால மாவது அரசுப் பணி புரிந்திருக்க வேண்டும். அரசுப் பணியாளர் இறக்கும்பொழுது அல்லது பணியிலிருந்து ஓய்வு பெறும்போது வாங்கிய சம்பளத்தில் அடிப்படையில் இந்த ஓய்வூதியம் அமைந்ததாகும். குடும்ப ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு ரூ. 50 என்ற குறைந்த அளவிலிருந்து, மாதம் ஒன்றுக்கு ரூ. 300 என்ற உயரளவு வரையில் மாறுபட்டதாகும். குடும்ப ஓய்வூதியம் என்பது விதவையின் ஆயுட்காலம் முழுவதும் அளிக்கப்படத்தக்கதாகும். அவரது இறப்புக்குப் பின்னரும், அந்த ஓய்வூதியத் தொகை, வயது வராத அவரது சிறுவர்களுக்கும் கொடுக்கப்படும்.

(ஆ) குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் மாதம் ஒன்றுக்கு ரூ. 42 முதல் ரூ. 52 வரையில் அகவிலைப்படி பெறவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**(3) தமிழ்நாடு அரசுப் பணியாளர் குடும்ப நல நிதித் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் அரசுப் பணியாளர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதமும் அரசுக்கு 1 ரூபாய் செலுத்துகின்றார். அரசுப் பணியாளர் பணியில் இருக்கையில் இறந்தால், அவர் குறிப்பிடுபவருக்கு அல்லது அரசுப் பணியாளரின் வாரிசுகளுக்கு ரூ. 10,000 கொடுக்கப்படுகிறது. இக்கணக்கில், அரசுக்கு ஆண்டுதோறும் 1 கோடி ரூபாய் செலவு ஏற்படுகின்றது.

**(4) ஆசிரியர் ஓய்வூதியம்**

தாராளமாக்கப்பட்ட ஓய்வூதிய விதிகளில் கண்டுள்ள சில

நன்மைகள் அரசுப் பள்ளிகள் அல்லாத பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களுக்கும் வழங்கப் பட்டுள்ளன. இதனால், ஓய்வூதிய நன்மைகளைப் பொறுத்த வரையில், அரசுப் பள்ளிகள் அல்லாத பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள், அரசுப் பணியாளர்களுக்கு நிகராகப் பயன் பெறுகின்றனர்.

**(5) நகராட்சிப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம்**

அரசுப் பணியாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் போன்றதொரு திட்டம் நகராட்சிப் பணியாளர்களுக்காகக் கொண்டு வரப் பட்டுள்ளது. நகராட்சிகள் அளிக்கும் பங்குத் தொகைகளின் உதவியுடன் இத்திட்டத்தினை உள்ளாட்சி நிதிக்கணக்குகளின் தலைமை ஆராய்வாளர் செயற்படுத்தி வருகிறார். இங்கும் குறைந்த அளவு ஓய்வூதியத் தொகை மாதம் ஒன்றுக்கு ரூ. 50 என்று நிச்சயிக்கப்பட்டுள்ளது. அகவிலைப்படியும் அனுமதிக்கப் படுகிறது.

ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள் ஆகியவற்றின் பணியாளர்களும் இந்த ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் வருகின்றனர்.

அரசுப் பணியாளர்கள், மானியம் பெறும் பள்ளிகளின் ஆசிரியர்கள் முதலியோர் தொடர்பாக ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தத் தொகையாக்குதல் உட்பட ஓய்வூதியங்கள், பணிக்கொடைகள், வருங்கால வைப்பு நிதிக்கான பங்குத் தொகை அவர்களுடைய குடும்ப ஓய்வூதியம் ஆகிய செலவுகளைச் செய்வதற்காகக் கோரிக்கை 42-ன் கீழ், 1977-78-ஆம் ஆண்டிற்குக் கீழ்க் கண்டவாறு மானியங்கள் கோரப் பட்டுள்ளன.

கீழ்க்காணும் பெருந்தலைப்புகள் இக்கோரிக்கையில் அடங்கியுள்ளன:

266. ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் — ரூ. 19,93,00,000

288. சமூகப் பாதுகாப்பும் நலனும்—சமூகப் பாதுகாப்பு-நலன் குறித்த ஏனைய திட்டங்கள்: — ரூ. 65,74,000

ரூ. 20,58,74,000

# தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம்

தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டத்தைத் தொடர்ந்து நடத்த அரசு தீர்மானித்துள்ளது. அதன்படி தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டத்தின் ஏழாம் குலுக்கல் வரும் 22-9-77 அன்று நடைபெறும். இந்தக் குலுக்கலுக்கு 'ஏ.எஃப்' (AF), 'ஏஜி' (AG), 'ஏ.எச்' (AH) ஆகிய மூன்று வரிசைகளில் முப்பது இலட்சம் பரிசுச் சீட்டுக்கள் அச்சடிக்கப்பட்டு வெளியிடப்படப் பட்டுள்ளன.

**பரிசுகளின் விவரம் வருமாறு**

| பரிசின் தரம் | பரிசுத் தொகை ரூ. | பரிசுகளின் எண்ணிக்கை | மொத்தத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 50,000 | 2 | 1,00,000 |
| 2 | 10,000 | 3 | 30,000 |
| 3 | 5,000 | 5 | 25,000 |
| 4 | 1,000 | 25 | 25,000 |
| 5 | 500 | 100 | 50,000 |
| 6 | 100 | 500 | 50,000 |
| 7 | 50 | 2,000 | 1,00,000 |

**ஆறுதல் பரிசுகள்**

முதலாவது, 2வது, 3வது பரிசு பெறும் எண்களுக்கு அடுத்தும் முன்னும் உள்ள எண்களுக்கான ஆறுதல் பரிசுத் தொகைப் பின்கண்டவாறு வழங்கப்படும்:

| பரிசின் தரம் | பரிசுத் தொகை ரூ. | பரிசுகளின் எண்ணிக்கை | மொத்தத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 1,000 | 4 | 4,000 |
| 2 | 500 | 6 | 3,000 |
| 3 | 300 | 10 | 3,000 |
| கூடுதல் மொத்தம் ரூ. | | 2,655 | 3,90,000 |

நடப்பு ஆண்டில் இப்பரிசுச் சீட்டுத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் வருமானம் முழுவதையும், கிராமப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கும், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் குறிப்பிட்ட நல்வாழ்வுத் திட்டங்களுக்கும் ஒதுக்க அரசு முடிவு செய்துள்ளது.

**பரிசுச் சீட்டின் விலை ரூ. 1.**



# குழந்தைகளுக்குத் தேவை சத்தான உணவு
# பயிர்களுக்குத் தேவை விஜய்

குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு எல்லாச் சத்துக்களும் அவசியம். அதுபோலவே பயிர்களின் வளர்ச்சிக்குத் தழை, மணி, சாம்பல் சத்துக்கள் மூன்றையும் அளித்தால்தான் முழுப் பலனைப் பெறலாம்.

இம் மூன்று சத்துக்களையும் ஒருங்கே கொண்டவை விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்கள். உங்கள் பயிர்களுக்கும் நிலங்களுக்கும் ஏற்றவாறு சத்துக்களை அளிக்க விஜய் 17-17-17, விஜய் 14-28-14 காம்ப்ளெக்ஸ் ரகங்கள் உங்களுக்கு இப்போது கிடைக்கின்றன. விஜய் உரங்கள் நவீன முறையில் தயாரிக்கப்பட்டு, நன்கு பரிசோதிக்கப்பட்ட தரமான உரங்களாகும்.

தரமான விஜய் உரங்களைத் தயாரிப்பது, இந்தியாவின் மிகப்பெரிய உரத் தொழிற்சாலைகளில் ஒன்றான மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்.

உங்கள் பயிர்களுக்கு விஜய் உரங்களைப் பயன்படுத்தி அதிக விளைச்சலைப் பெறுவதற்கான சாகுபடி முறைகளை அறிய, கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி, இலவச வெளியீடுகளைப் பெறுங்கள்.



ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமச்சந்திரபுரம், தென்னூர், திருச்சி 620 017

VIJAY
MADRAS FERTILIZERS




MFL-1517

# தென்னையில் தோன்றும் தஞ்சாவூர் வாடல் நோய்!

தஞ்சை மாவட்டத்தில் முத்துப்பேட்டை என்ற ஊரில் 1953-ஆம் ஆண்டு, முதன் முதலில் தோன்றி, பின்னர் கடந்த 24 ஆண்டுகளாகத் தமிழ் நாட்டின் பல மாவட்டங்களில் வேகமாகப் பரவி வரும் தென்னை நோய்க்கு **"தஞ்சாவூர் வாடல்"** என்று பெயரிடப் பட்டிருக்கிறது. 'கானோடெர்மா லூசிடம்' என்னும் பூசணம் இந்த வாடலைத் தோற்றுவிக்கும் காரணிகளில் ஒன்று. கடும் வறட்சியினால் வலிமை குன்றிய, 50 வருட வயதிற்கு அதிகமான தென்னை மரங்கள் இந்த நோய்க்கு எளிதில் இலக்காகின்றன.

**நோய்க்குறிகள்**

நோய்த் துவக்கத்தில், அடிமரத்தில், பல பாகங்களிலிருந்து சாறு கசியும். அதைத் தொடர்ந்து, மரத்தின் உட்பாகம் மேல் நோக்கி அழுகும். அதன் காரணமாக இலைகள் காயத் தொடங்கி மர உச்சியின் கீழ், காய்ந்த மட்டைகள் ஊசலாடிக் கொண்டிருக்கும். நோய் முற்ற, முற்ற இலைகள் காய்வது மேலும் தொடரும்! 6 முதல் 12 மாதங்களுக்குள் மரத்தின் குருத்தும் காய்ந்து, மரம் முழுவதும் பட்டு விடும்.

நோயுற்ற மரங்களிலிருந்து தான், நலமுள்ள மரங்களுக்கு இந்த நோய் தொற்றிப் பரவுகிறது. பத்து முதல் 25 வருட வயதுள்ள மரங்கள் 10 முதல் 12 மாதங்களுக்குள்ளாகவே காய்ந்து விடலாம். தற்சமயம் இந்தக் கடுமையான நோய், தஞ்சை, வட ஆர்க்காடு, தென்னார்க்காடு, தர்மபுரி, சேலம், கோவை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் அதிக அளவில் காணப்படுகிறது. தற்சமயம் சேலம் மாவட்டத்தில் சில இடங்களிலும் இந் நோய் தென்படுகிறது.

கடந்த ஓராண்டு காலமாக, கோவையில் நடைபெற்ற ஆய்வின் மூலம் அறியப்பட்ட கண்டு பிடிப்புகளாவன :

ஆரம்ப நோய்க் குறிகள் தோன்றியவுடன் கீழ்க் கண்ட சிகிச்சை முறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தென்னையின் அடி மரத்தில்—தரையிலிருந்து 90—100 சென்டி மீட்டர் உயரத்தில் இரும்பு ஆக்கர் (1.5—2 செ. மீ. அளவு) துணை கொண்டு, 15—20 செ.மீ. ஆழம் துளையிட வேண்டும். பிறகு மரத்தைச் சுற்றி 1—1.5 மீட்டர் தூரத்தில் 30 செ.மீ. அகலம், 50 செ.மீ. ஆழத்தில் தென்னையின் வேர் தெரியுமாறு குழி தோண்டவேண்டும். பிறகு வேர்களின் நுனியைக்



கத்தரிக் கோலால் நறுக்கிவிட வேண்டும்.

'ஆரியோபங்கின் — சோல்' என்ற எதிர் உயிர் [உற்பத்தி செய்யுமிடம் ஹிந்துஸ்தான் ஆண்டியபாடிக்ஸ் (இந்திய அரசு நிறுவனம்) பிம்ப்ரி, பூனு —411018] மருந்துக் கலவையை (6 கிராம் மருந்துடன் 6 லிட்டர் தண்ணீர்) தயார் செய்த பின், அதில் 3 கிராம் மயில் துத்தம் பொடியைக் கலக்க வேண்டும். இந்தக் கலவையில் ஒரு லிட்டரை குறுகலான வாயுள்ள ஒரு பாட்டிலில் நிரப்பி, அந்தப் பாட்டிலை மரத்தில் இட்ட துளை வாயிலில் கவிழ்த்து விட வேண்டும். மருந்துச் சிந்தாமல் இருக்க, துளையில் நுழைத்துள்ள பாட்டிலின் கழுத்தைச் சுற்றிக் களி மண்ணுல் பூசி விடலாம். மிகுதியாக உள்ள ஐந்து லிட்டர் 'ஆரியோபங்கின்' கலவையை வேர் நனைய நனைய தெளிப்பானைக் கொண்டோ, பூவாளியைக் கொண்டோ மரத்தடியில் தோண்டிய குழியில் ஊற்ற வேண்டும். அதற்கு மேல் நன்கு மக்கின தொழு உரத்தைப் போட்டு மண்ணுல் மூடவேண்டும். மறுநாள் பாட்டிலில் உள்ள மருந்து முழுவதும் உறிஞ்சப்பட்டவுடன் காலிப் பாட்டிலை அப்புறப்படுத்தி, துளையில் சிமெண்டை அடைத்து துளையை மூடிவிட வேண்டும். இந்தச் சிகிச்சையை ஒரு மாதத்திற்குப் பிறகு மறுபடியும் செய்திடல் வேண்டும். ஒரு முறை மருந்திட ஒரு மரத்திற்கு ஆகும் செலவு ஏறக்குறைய ரூபாய் ஐந்து ஆகலாம். இரு முறை சிகிச்சை அளிக்க ரூ. 10 முதல் 12 வரை ஆகும். சிகிச்சையின் பலன் மூன்று மாதங்களுக்குப் பிறகுதான் தெரியும்.

சிகிச்சை அளிக்கப்பட்ட மரங்களில் வாடல் நோய்க் குறிகள் பெருகுவது தடுக்கப்பட்டு, புதிய இலைகளும், பாளைகளும் தோன்றி காய்களும் பிடிக்க ஆரம்பிக்கின்றன. எந்தக் காலத்திலும் தென்னை மரங்களுக்குத் தகுந்த உரமிட்டுத் தேவையான தண்ணீர் கட்டி நன்கு பராமரிக்க வேண்டியது முக்கியமாகும். நோய்த் தாக்கின ஆரம்ப நிலையிலேயே சிகிச்சை துவக்கப்பட வேண்டியது மற்ருெரு பிரதான குறிப்பாகும். நோய் மிகவும் முற்றின மரங்களுக்குச் சிகிச்சை அளிப்பதில் யாதொரு பயனும் இருக்காது. இந்த ஆய்வுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. எனவே, தென்னை விவசாயிகள் 'ஆரியோபங்கின்-சோல்' மருந்து உபயோகித்து தென்னை மரங்களைத் 'தஞ்சாவூர் வாடல்' நோயின் கொடுமையிலிருந்து பாதுகாக்கும்படி வேண்டப்படுகிருர்கள்.

தகவல் :
தாவர நோயியல் துறை,
தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயமுத்தூர்-641 003.

வெளியீடு :
தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயமுத்தூர்-641 003.


## பொதுப்பணித் துறை புதிய உருப் பெறும்!

பொதுப் பணித் துறையில் 193 வகையான கனரக இயந்திரங்களும், மண் வாரிச் சாதனங்களும் உள்ளன. ஏரிகளைத் தூர்வாரி சீரமைக்கும் உபயோகத்திற்காக, இவற்றில் சில இயந்திரங்கள், சென்னையிலுள்ள தூர்வாருதல் - சீரமைத்தல் கோட்டத்தில் உள்ளன. சாதனங்களில் பெரும்பாலானவை இம் மாநிலம் முழுவதுமுள்ள வெவ்வேறு திட்டப் பகுதிகளில் சிதறிக் கிடக்கின்றன. திட்டத்துடன் இணைந்த இயந்திரப் பிரிவு ஒவ்வொன்றும், இயக்குதல், பழுது பார்த்தல், பண்டக சாலைகள், பணியாளரமைப்பு ஆகிய வகைகளில் தன்னிச்சையான ஓர் அமைப்பாகும்.

தற்போது சாதனங்கள் முழு அளவில் உபயோகிக்கப்படாமல் கிடக்கின்றன. அவற்றின் உபயோகம், இயக்கம், பராமரிப்பு ஆகியவை குறித்த ஏற்பாடுகள் திருப்திகரமாக இல்லை. சரக்குப் பட்டியலும், உபரிகளும் இரட்டிக்கப்படுகின்றன. பராமரிப்பு அலட்சியப் படுத்தப் படுகிறது. ஒரு திட்டப் பணி முடிந்ததும் இயந்திரத்தை அகற்றுவது அல்லது மீண்டும் உபயோகிப்பது குறித்து உடனடியாகக் கவனிக்கப்படுவதில்லை.

கனரக இயந்திரங்கள், மண் வாரி இயந்திரங்கள் அனைத்தையும் பொதுப் பணித் துறையுடன் இணைந்த மத்திய இயந்திரங்கள் அமைப்பு ஒன்றின் பொறுப்பின் கீழ் கொண்டு வர உத்தேசிக்கப்பட்டுள்ளது. இனி மேல் இந் நிறுவனம், ஒரே இடத்தில் இயந்திரங்களையும் மண் வாரி இயந்திரங்களையும் வாங்கி, பொறுப்பில் வைத்து, பராமரித்து, இயக்கச் செய்யும். இதற்கென்று இயந்திர வல்லுநர் தர அமைப்பொன்று அமைக்கப்படும். மைய அமைப்பாக்கப்பட்ட, தகுதி வாய்ந்த தொரு அமைப்பின் உதவியினுல், தற்போது ஒவ்வோராண்டும் 17,000 யூனிட்டுகள் என்ற அளவில் நடைபெற்று வரும் மண் வேலைகளின் அளவு, சுமார் 90,000 யூனிட்டுகளாக உயரும். ஏரிக் கரைகளைப்பராமரித்தல், சீரமைத்தல் குறித்த முறையான பெருந் திட்டமொன்றுக்குத் தேவையான இயந்திர வசதிகளைப் பெற இந்த ஏற்பாடு உதவும்; வருமாண்டுகளில், இதற்கென்று வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட வேண்டியுள்ளது. இச் செயற் குறிப்புகள், மூலதன உடைமைகள் முழு அளவில் பயன்படுத்தப்படுவதற்கும், குறைந்த அளவு சாதனத் தேவைகளுக்கு வகை செய்வதற்கும் உதவியாக இருக்கும் வகையில், நம்பிக்கைக்குரிய, திறமையானதொரு இயந்திரப் பொறியியல் அமைப்பொன்று உருவாக வழி செய்யும். இதன் மூலம் இது நாள்வரை தொன்றுதொட்ட பழைய நடைமுறையில் செயல்பட்டு வந்த பொதுப் பணித் துறை ஒரு புதிய உருப் பெற இயலும்.

# கால்நடைகளின் இரு முக்கிய நோய்!



**கோ**மாரி நோய், சாதாரணமாகக் குளம்புகள் கொண்ட எல்லாக் கால்நடைகளுக்கும் வரும். இந் நோயினால் ஏற்படும் இறப்பு விகிதம் அதிகம். மேலும் நோய் வாய்ப்பட்ட மாடுகளால் பால் உற்பத்தித் திறனும், வேலைத் திறனும் பாதிக்கப்படுகிறது.

### நோய் பரவும் விதம்

வாயிலுள்ள சிறு கொப்புளங்கள் உடைந்தவுடன் அதில் உள்ள நீர், உமிழ் நீருடன் கலந்து வெளியேறி மற்றக் கால்நடைகளைத் தாக்குவதற்குக் காரணமாக இருக்கும். பாதிக்கப்பட்ட கால்நடைகளின் பால், மூத்திரம் மூலமாகவும் இந்நோய் மற்ற கால்நடைகளுக்குப் பரவலாம்.

### நோயின் அறிகுறிகள்

1. உடலில் காய்ச்சல் இருக்கும்.
2. நோய்வாய்ப்பட்ட கால்நடைகள் தீவனம்சரியாகத் தின்னாது.
3. திடீரென பால் குறைந்து விடும்.
4. உதடுகளை அசைத்துக் கொண்டே இருக்கும். உமிழ் நீர் வடியும்.
5. சிறு கொப்புளங்கள் நாக்கின் மேல் பாகம், உதடு, ஈறுகளில் தோன்றி புண்களாக மாறும்.
6. கால்களை அடிக்கடி உதறும். அல்லது நொண்டி நடக்கும்.
7. சில சமயங்களில் குளம்பு கழன்று விடும்.

### தடுப்பு முறைகள்

1. நோய்வாய்ப்பட்ட மாடுகளைத் தனியே பிரித்துவிட வேண்டும்.
2. மாடுகள் நடமாட்டத்தையும், இடம் பெயர்தலையும் தடுக்க வேண்டும்.
3. வாயை இரண்டு சதவிகிதம் படிக்காரம் அல்லது பொட்டாசியம் பெர்மாங்கனேட் மருந்து கலந்த தண்ணீரில் கழுவலாம்.
4. 1 சதவிகிதம் மயில் துத்தம் கலந்த தண்ணீரிலோ 'பினைல்' கலந்த தண்ணீரிலோ குளம்புகளை நனைக்கலாம். 2 சதவிகிதம் மயில் துத்தம், தார் கலந்த கலவையைக் குளம்புப் புண்களுக்குப் போடலாம்.
5. இளகிய தீனி வகைகளைக் கொடுக்க வேண்டும்.
6. மாடு முற்றிலும் குணமடையும் வரை ஓய்வு கொடுக்க வேண்டும்.
7. பால் மாடுகளின் மடிகளையும், காம்புகளையும் சுத்தமாக வைத்து, 'போரிக்'. களிம்பைத் தடவ வேண்டும்.
8. கால்நடைகளுக்கு நோய் கண்டதும் அருகிலுள்ள கால்நடை மருத்துவரை அணுகி அவருடைய உதவியை நாடுவது நலம்.

தடுப்பு ஊசி : கலப்பினப் பசுக்களுக்கும், மேல்நாட்டு மாடுகளுக்கும் தடுப்பு ஊசி அவசியம்போட வேண்டும். தடுப்பு ஊசி போட்ட மாடுகளை ஆறு மாதம் வரை நோய் தாக்காது.

### கருச் சிதைவு நோய்

தமிழ்நாட்டில் சேலம், கோயம்புத்தூர், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் கருச் சிதைவு அல்லது கன்று வீச்சு நோய் அதிகமாகக் காணப்படுகிறது. பிறக்கும் கன்றுகள் இறந்தோ அல்லது ஊட்டமின்றியோ பிறக்கின்றன. நோயினால் பாதிக்கப்படும் கால்நடைகள் தற்காலிகமாக அல்லது ஆயுள் முழுவதும் மலடுகளாகின்றன. இதனால் பண்ணையில் பெரும் நஷ்டம் ஏற்படும்.

### பாதிக்கப்படும் கால்நடை இனங்கள்

மாடு, செம்மறி ஆடு, வெள்ளாடு, பன்றி முதலிய எல்லாக் கால்நடைகளுக்கும் இந் நோய் வரலாம். குறிப்பாக மாட்டினம் அதிகமாகப் பாதிக்கப்படுகிறது.

### நோயின் அறிகுறிகள்

1. இந் நோயின் முக்கிய அறிகுறிகள் கன்று வீச்சு அல்லது கருச் சிதைவுதான்.

குறிப்பாகக் கடைசி மூன்று மாத சினைப் பருவத்தில் இது ஏற்படும்.

2. நாளுக்கு நாள் மாடு மெலிந்து பால் அளவு குறைந்துவிடும்.

3. பண்ணையில் அடிக்கடிகன்று வீச்சு அல்லது கருச்சிதைவு இருக்கும்.

4. கருச் சிதைவு ஏற்படு முன் பிறப்பு உறுப்பிலிருந்து இளம் வெள்ளையாக நீர் வடியும்.

5. நஞ்சுக் கொடி தள்ளாமல் நின்று விடும்.

6. கருச் சிதைவு ஏற்படு முன் கன்று ஈனும்போது ஏற் படும் அறிகுறிகள்போலவே தோன்றும்.

இந் நோயைத் தடுக்கப் பின் வரும் முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

1. சரியான சுகாதார முறை களைப் பண்ணைகளில் கடைப் பிடிக்க வேண்டும்.

2. இந் நோய் வராமல் இருக்க தடுப்பு ஊசி இருப்பதால் 6 முதல் 12 மாதவயதுள்ள கன்றுகளுக்குத் தடுப்புஊசி போட்டுக் கொள்ளுதல் மிகச் சிறந்தது.

3. பண்ணையில் உள்ள மாடு களை வருடத்திற்கு ஒரு முறை இரத்தப்பரிசோதனை செய்ய வேண்டும். இதனால் நோய்மாடுகளுக்குத்தகுந்த சிகிச்சை அளிக்க முடியும்.

4. கருச் சிதைவால் பிறந்த கன்றையும் நஞ்சுக் கொடி யையும் எரித்து விட வேண்டும்அல்லதுபுதைத்து விட வேண்டும்.

5. சந்தேகமுள்ள பண்ணையி லிருந்து மாடுகளை வாங்கக் கூடாது.

தகவல் :

சென்னைக் கால்நடை

மருத்துவக் கல்லூரி,

சென்னை–600 007.

# தீவனச் சேதத்தைத் தடுக்கக் கோழியின் மூக்கு முனையை முறித்தல்



கோழி வளர்ப்பதில் தீவனச் செலவு ஒரு முக்கிய அம்சம். தற்பொழுது தீவனத்தின் விலை அதிகமாக இருப்பதனால் நமக்குக் கிடைக் கும் இலாபம் மிகவும் குறைவாகவே உள்ளது. ஆகவே தீவனத்திற்காக ஆகும் செலவைக் குறைத்தால் கோழி வளர்ப்பதில் அதிக இலாபம் கிடைக்கும்.

தீவனச் செலவைக் குறைக்க வேண்டு மானால் பண்ணைகளில் தீவனம் வீணாவதைத் தடுக்க வேண்டும். சாதாரணமாகக் கோழிகள் உணவை உண்ணும்பொழுது அலகினால் கொத்திக் கிளறி, உணவு தானியங்களைப் பொறுக்கி உட்கொள்ளும். இதனால் ஒவ்வொரு கோழியும் ஒரு நாளுக்கு 5 முதல் 10 கிராம் எடை வரை தீவனத்தைச் சேதமாக்குகிறது. இக்கணக்குப்படி 100 கோழிகளால், 500 முதல் 1,000 கிராம் வரை வீண் சேதம் ஆகக்கூடும். இதைத் தடுப்பதற்குக் கோழிகளின் மூக்கை ஒரு குறிப்பிட்ட அளவு வெட்டுதல் ஒரு பயனுள்ள செயலாகும். மூக்கின் முனையை வெட்ட இரண்டு முறைகள் உண்டு.

(1) முட்டையில் இருந்து குஞ்சு வெளிவந்த 6 நாட்களுக்குள் வெட்டலாம்.

அல்லது

(2) 12 முதல் 16 வார வயதிலும் வெட்ட லாம்.

இந்த இரண்டு முறைகளிலும் பின்னதே சிறப்பானது.

மூக்கின் முனையை முறிப்பதனால் உணவு தானியச் செலவு மிச்சமாவது மட்டுமின்றி, ஒரு கோழி மற்றக் கோழிகளைக் கொத்திச் சீண்டா மல் இருக்கவும் உதவுகின்றது. கோழிகளின் மூக்கை முறைப்படி வெட்டுவது கோழிப் பண்ணைப் பராமரிப்பில் ஒரு முக்கிய அம்சம். கோழிகளின் மூக்கை மின்சார மூக்கு வெட்டுக் கருவி மூலம் வெட்ட வேண்டும். இதற்கு அரு காமையில் உள்ள கால்நடை மருத்துவரிடம் ஆலோசனை பெறுவது நலம்.

# தொழில்களுக்குத் தகவல் தொடர்ந்து தர வேண்டும்!

தொழில்களின் ஆக்கத்திற்கு, அத்தொழில்களைப் பற்றிய ''தகவல்கள்'' முக்கியமானவையாகும். தொழில் சார்ந்த தகவல்களின் மதிப்பு இப்பொழுது நன்கு உணரப்படுகிறது. பொருள்களை உற்பத்தி செய்து மக்களுக்கு வழங்குவதற்கு இவை இன்றியமையாத் தூண்டுதலாய் அமைந்துள்ளன. பல முனைப்பட்ட தொழில் அபிவிருத்திகள் யாவற்றிலும், இந்தத் தொழில் நுணுக்கம் பற்றிய தகவல்கள் விளைவித்துள்ள நற்பணிகளை நன்கு உணர முடிகிறது.

தொழில்களுக்கு வேண்டிய, தொழில் நுணுக்கத் தகவல்களை ஆய்ந்தறிதல், அவற்றைச் சேகரிப்பது, தொழில்களுக்கு வழங்குவது பற்றிய எண்ணிலடங்கா செயல் வகைகளை, தொழில்களுக்கு அறிவுறுத்தும் பொருட்டு, ''தொழில்களுக்குத் தகவலளிப்பது'' என்ற கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. ஆகஸ்டு திங்கள் ஐந்தாம் நாள் முதல் ஏழாம் நாள் முடிய, கிண்டியிலுள்ள தொழில் வணிகத் துறையின் தொழில் நுட்பத் தகவல் நிலையத்தில் நிகழ்ந்த இக் கருத்தரங்கினை, சென்னை நூலகக் குழு ஏற்பாடு செய்திருந்தது.

தொழில் முனைவர்களுக்கு உதவ ஒரு தனிப்பட்ட நிறுவனத்தை அமைப்பது அவசியம். வேளாண்மைத் துறையில், ஆராய்ச்சியின் விளைவுகளை ஆராய்ச்சிக் கூடத்திலிருந்து வேளாண்மைத் தொழிலில் ஒன்று சேரப் புகுத்தியது ஓரளவு சாதனையை உருவாகியுள்ளது. இந்தச் சாதனை உணவில் தன்னிறைவை அடைவதற்கு உதவி செய்துள்ளது.

துரிதமான தொழில் வளர்ச்சிக்குத் துணை புரியும் வகையில், ஆராய்ச்சி நிலையங்கள், இந்திய தொழில் நுட்பவியல் நிலையம், தேசிய ஆய்வுக் கூடங்கள் ஆகியன ஒருங்கிணைந்து செயல்படுவதன் வாயிலாகத் தொழில் முனைவர்களை ஊக்குவிப்பது அவசியமாகிறது.

இதைப் போலவே தொழில் வர்த்தக அமைப்புகளுக்கும், சிறு தொழில் கழகங்களுக்கும், தொழில் நுட்பத் தகவல் நிலையங்களுக்கும், தொழில் முனைவர்கள் மற்றும் தொழிலதிபர்களுக்கும் இடையே தொடர்பு அமைந்திருக்க வேண்டியது அவசியம்.

முதல் நாள் கருத்தரங்கில், தொழில் நுட்பத் தகவல்களைச் சேகரிப்பது; தொழில்கள் வளர்ச்சியைத் துரிதப்படுத்துவது ; தமிழ்நாட்டில், சிறு தொழில்களுக்குத் தேவையான எல்லாத் தகவல்களையும் அளிப்பதன் பொருட்டு கிண்டியிலுள்ள தொழில் நுட்பத் தகவல் நிலையத்தின் தரத்தை உயர்த்துவது ;



அறிவியல் மற்றும் தொழிலியல் குழு, தொழில் நிறுவனங்கள் இவற்றினிடையே நல்ல தொடர்புகளை வலுப்படுத்துவது ; தொழில் முனைவர்களுக்குத் தொழில் நுட்ப தகவல்களை அளிப்பதில் நூல்களின் பங்கு ஆகியன பற்றிய ஆய்வுச் சொற்பொழிவுகள் நடைபெற்றன.

தமிழ்நாடு கல்வி அமைச்சர் மாண்பு மிகு திரு சி. அரங்கநாயகம் அவர்கள் இரண்டாம் நாள் கருத்தரங்கில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினர். அமைச்சர் அவர்கள் பேசுகையில் தொழில் முனைவர்களுக்குக் குறிப்பிட்ட காலத்தில், ஒருபடித்தான, காலத்தோடொட்டிய வளர்ச்சியுடைய தொழில் நுட்பத் தகவல்களை வழங்கும் வண்ணம் ஒரு தகவல் களஞ்சியத்தை நிறுவ வேண்டும் என்ற கருத்தினை உணர்த்தினர். தேசிய முன்னேற்றத் திட்ட அமைப்புகளில் எந்தெந்தத் துறைகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்பதனை அறிந்து அவைகளை மேம்படச் செய்யவும், அதன் காரணமாக சமூகத்தின் முன்னேற்றப் பாதையில் மாறுதல்களைக் காணவும் தொழில் நுட்பத் தகவல்களை அளிப்பது, திட்டமிடுதலில் அமைந்துள்ள ஒரு முக்கிய அங்கமாகும் என்று அவர் கூறினர். படித்து வேலையின்றி இருப்பவர்களில் பெரும்பாலோர் தொழில் நுட்பத் தகவல்களைத் தக்க முறையில் அறிந்து கொள்ளவில்லை. அவர்கள் அறிந்து கொள்வது தொழில்களின் வளர்ச்சியை மேலும் துரிதப்படுத்த அவசியமாகிறது. எனவேதான், காலத்தோடு ஒட்டி வளர்ந்து வரும் தொழில நுணுக்கங்களை அவ்வப்பொழுது அறிந்து அவை பற்றிய தகவல்களை அளிப்பது இன்றியமையாததாகிறது.

கருத்தரங்கின் இறுதி நாளில், நடவடிக்கைக் குழுவானது, கிண்டி தொழில் நுட்பத் தகவலகப் பணியின் தரத்தை உயர்த்தி நாட்டிலுள்ள இதர அரசு மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்களோடு தொடர்புகொண்டு, சிறுதொழில் முனைவர்களுக்குத் தேவையான தகவலறிவிப்புப் பணிகளை வழங்க முடியும் என்ற கருத்தை எடுத்துக் கூறியது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.





# விவசாயத் தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச ஊதியம்!









| | பெரியவர் கூலி ரூ.பை. | சிறியவர் கூலி ரூ.பை. |
|---|---|---|
| ஏர் உழ (சொந்த எருது, கலப்பையுடன்) | 9.00 | — |
| ஏர் உழ (பண்ணையாரின் எருது, கலப்பையுடன்) | 5.00 | — |
| விதை விதைத்தல், நாற்றுப் பறிக்க .... | 5.00 | 3.00 |
| நாற்று நட, களை எடுக்க .... | 3.50 | 2.10 |
| அறுவடை செய்ய .... | 5.00 | 3.00 |
| பால் கறக்க, கோழி வளர்க்க, வரப்பு கழிக்க, எரு சுமக்க, தேனீ வளர்க்க, பயிற்சி பெற்ற பிற பணிகளுக்கு | 5.00 | 3.00 |
| கால்நடை வளர்க்க | 3.50 | 2.10 |
| பயிற்சி பெறாத பிற பணிகளுக்கு | 3.50 | |





வேலை நேரம் :
உழவு—5 மணி நேரம்.
பிற பணிகள்—7 மணி நேரம்.

நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தைக் குறைத்துக் கொடுப்பது குற்றமாகும்! இக்குற்றத்திற்கு 6 மாதம் வரை சிறைத்தண்டனை அல்லது 500 ரூபாய் வரை அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும்!





வெளியீடு : செய்தி மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

பதிவு எண். M. 8676



# தேசத் தந்தையை நினைவு கொள்வோம்

"குடிப்பழக்கம் ஒரு சமூகத்தீமை அது மனிதனை மிருகத்தின் நிலைக்குத் தாழ்த்தி விடுகிறது. அதனை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியது நம் கடமை"

—காந்தியடிகள்





## வாழ்க்கை ஒளிபெற மது அரக்கனை ஒழிப்போம்

வெளியீடு:
இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.